www.tamilarangam.net


# நிகரி

NIHARI

"மனிதர் யாரும் ஒரு நிகர் சமானமாக வாழ்வமே" - பாரதி

Issue No - 04, 17th February 2002

வாரவெளியீடு
இதழ் 04 – பெப்ரவரி 17, 2002
விலை ரூபா 12/=


**கைக்கட்டு!**


வண்டி இழுக்கின்ற குதிரைக்கு வாயிலே
கண்டிருப்பீா் கடிவாளம் கனியிலே - நிண்டுழவு
செய்கின்ற மாட்டுக்கு நாணயமாம் சந்திரிகா
கையுக்கு ரணில் வாய்த்த கட்டு!

– ஈழமோகம்

# குமார் பொன்னம்பலம் படுகொலை!

# துலங்கும் புதிய மர்மங்கள்

## ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் பாலபட்டபெந்தியின் மகனும் முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் மகனும் சம்பந்தம்?




குமார் பொன்னம்பலம் அவர்களின் படுகொலையில் சம்பந்தப்பட்டவர் என்று சந்தேகிக்கப்படும் சுகத் ரணசிங்க மீதான பொலிஸ் விசாரணையின் போது புதிய திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்திருப்பதாக தெரிய வருகிறது. குமார் பொன்னம்பலம் அவர்களை படுகொலை செய்வதற்காக நடந்த சதியில் ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்ட பெந்தி அவர்களின் மகனுக்கும், முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சர் மஹேறன் ரத்வத்தைக்கும் தொடர்பிருப்பதாக இந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குமார் பொன்னம்பலம் அவர்களைச் சுட்டுக கொலை செய்ய மொரட்டுவை சமன், சுஜீவ என்ற, இருவரையும், ஒழுங்கு செய்திருந்தார் உதவிப் பொலிஸ் கான்ஸ்டபிள் ரணசிங்க,

இவ்வழக்கு விசாரணையை மேற்கொண்ட பொலிஸ் அதிகாரியான நுவான் வெத்தசிங்க உதவிப் பொலிஸ் கான்ஸ்டபிளான ரணசிங்கவுடன் மேற்கொண்ட தொலைபேசி உரையாடலின் போதே மேற்படி மஹேறன் ரத்வத்தை, பாலபட்ட பெந்தியின் மகன் ஆகியோருக்கும் தொடர்பு இருப்பதாக தெரிவித்துள்ளார்.

(விபரக் கட்டுரை பக்கம் 3இல்)



**புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த வெத்தசிங்கவிற்கும், கொலையில் சம்பந்தப்பட்ட உதவிப் பொலிஸ் கான்ஸ்ரபிள் ரணசிங்கவுக்கும் இடையிலான தொலைபேசி உரையாடலின் சில பகுதிகள் இவை.**

வெத்தசிங்க : குமார் பொன்னம்பலம் உனக்கு காலையில் போன் பண்ணினாரா?
ரணசிங்க : முதல் நாள் மாலையில் போன் பண்ணினார்.
வெத்தசிங்க : மாலை எத்தனை மணிக்கு
ரணசிங்க : 5,6 மணியளவில்
வெத்தசிங்க : அப்போது வருவதாக சொன்னாரா?
ரணசிங்க : நான் சொன்னேன் காலையில் வருவதாக
வெத்தசிங்க : அவருக்கு அப்போது உன்னுடைய பெயர் ரணசிங்க என்று தெரியாதா?
ரணசிங்க : தெரியாது.
வெத்தசிங்க : சாந்த என்ற பெயர் மட்டும் தானே தெரியும்?
ரணசிங்க : ஓம். சேர்.
வெத்தசிங்க : வேறுயாருக்கு இந்த விஷயம் தெரியும்.
ரணசிங்க : பாலபட்ட பெந்தியின் மகனுக்குத் தெரியும்.

ழுழுழு

வெந்தசிங்க : அப்ப அவர்கள் பின்தொடர்ந்து வருவது உனக்குத் தெரியுமா?
ரணசிங்க : தெரியும். நான் கண்டேன். எங்கடை ஆக்கள் வந்துவிட்டார்கள் என்று. கொஞ்சம் இருங்கோ நான் கதைத்து விட்டு வாறேன் என்று சொல்லிவிட்டு டக்கென இறங்கிப் போனேன்.
வெந்தசிங்க : அப்போது அவர் பார்த்துக் கொண்டிருந்தார்.
ரணசிங்க : முன்பக்கமாகப் பார்த்துக் கொண்டிருந்தர். அவர்கள் பின்புறமாக வந்தார்கள்.
வெந்தசிங்க : அப்ப*கதைக்க எண்டு போன நீ அந்த பெண்ணுடன் கதைத்தாயா?
ரணசிங்க : கனதுாரம் நான் போனேன்.
வெத்தசிங்க : வந்த இருவரும் யார்? ஒன்று கரவல நந்தே மற்றது?
ரணசிங்க : சுஜித்
வெத்தசிங்க : யார் வெடி வைத்தது?
ரணசிங்க : இருவரும். வெடி வைத்தார்கள்.
வெத்தசிங்க : என்ன 3.8ஆ, பிறவுனிங்கா?
ரணசிங்க- : இரண்டும்.

----

வெத்தசிங்க : நீ இதைச் செய்தது, அவர் மீதான தனிப்பட்ட காரணமாகவா?
ரணசிங்க : இல்லை சேர். தனிப்பட்டதில்லைத் தானே. எனக்கு அந்த மனிசனைத் தெரியவும் மாட்டுது. ஆனாலும் அவர் எங்களை ஏசினார் தானே.
வெத்தசிங்க : எங்களையென்றால்?
ரணசிங்க : எங்கட சிங்கள இனத்தைச் சேர். மற்றது நாங்கள் ஆரையாவது சந்தேகத்தில் பிடித்துக் கொண்டு வந்தால் இவர் அவங்களுக்காக வாதாட வருவார்.
வெத்தசிங்க : ஓமோம். அது சரி தான்.

# குமார் கோலையாளிகள் யார்? 3

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போரின் பின் கிளிநொச்சி...

- கனகரவி

இனரீதியான விடுதலைப் போராட்டம் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்தே ஈழத்தின் மீதும் ஒரு கறுப்புப் போர்வை போர்த்தப்பட்டதான நிலையிலேயே போரின் அநர்த்தங்கள் குறித்து செய்திகள் வருகின்றன.

இதற்கு செய்தியாளர்கள் சரியான தகவல்களை உலகுக்கு வெளிப்படுத்த முடியாமல் போனமைக்கு விடுதலைப் போராட்டம் சார்ந்த அமைப்பின் ஜனநாயக விரோதமான செயற்பாடும் அவற்றினை அம்பலப்படுத்தாது தடுப்பதற்காக, சுதந்திரமான செய்தியாளர்களை அனுமதிக்காமையும் காரணம் ஆகும்.

உண்மையில் தமிழ்ச் சூழலில் சுதந்திரமான பத்திரிகைத்துறை என்பது சரியான தகவல்களைத் தருவது என்பதோடு விடுதலைப் போராட்டம் தொடர்பான தவறுகளையும் சுட்டுவதாக அமைந்திருக்க வேண்டும்.

ஆனால் இவை நடைபெறவில்லை. அதற்குப் பதிலாக பல சுதந்திர சிந்தனையாளர்கள் கொலை செய்யப்பட்டதும், அச்சுறுத்தப்பட்டதுமே நடைபெற்றது.

இதன் மிகப் பெரிய தாக்கம் தான். சிங்கள இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு போர் தொடர்பாகக் கூட சரியான தகவல்களை உலகின் முன் கொண்டு வர முடியாமல் போனமை ஆகும்.



இன்று சமாதான முன்னெடுப்புகள் தொடங்கப்பட்டிருக்கும் நிலையில் ஊடகவியலாளர்கள் பலர் வன்னிக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். இதன் ஒரு விளைவாக வன்னி மக்களுடைய வாழ்வியல் அவலங்கள் முக்கியமாக போரின் மூலமான அவலம் சிங்கள மக்கள் முன் கொண்டு செல்லப்படுகின்றது. போராட்டம் தொடர்பாக சிங்கள மக்களுடன் உரையாட வேண்டும் என்பது, சென்ற இதழில் எழுதிய சகாதேவன் அவர்களுக்குப் புரிந்ததைப் போல் என்றோ நடைபெற்றிருக்க வேண்டிய இந்த விடயம் இன்றாவது அனுமதிக்கப்பட்டதே என்று நினைக்கும் அளவிற்கு நிலைமை காணப்பட்டது. இந்த திரையை வைத்திருந்த போராட்ட சக்திகளுக்கு போராட்டத்தின் பலவீன அம்சங்கள் புலப்படத் தொடங்கியதும் வரவேற்கப்பட வேண்டியதே.

இன்று இலங்கையின் ஊடகங்களால் (தமிழ் ஊடகங்கள் உட்பட) வன்னி மக்களின் அவல நிலை தொடர்பான தகவல்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன. விடுதலைப் போராட்ட சக்திகளின் நீதி, ஒழுங்கு தொடர்பான அமைப்பு முறைகள் கூட விரிக்கப்படுகின்றன. ஒரு தனியான ஆட்சியே அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று சொல்லும் அளவிற்கு வன்னி நிலைமைகள் தொடர்பாக சிலாகிக்கப்படுகின்றது.

இவற்றில் உண்மையில் வன்னி மக்களின் வாழ்வியல் அவலம் தொடர்பாக கரிசனைப்படுகின்ற ஊடகவியலாளர்கள் அவ்விடயம் [illegible] வன்னி மக்கள் பலரைச் சந்தித்து அவ்வனுபவங்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இன்று வன்னி மக்களின் நிலை தான் என்ன?

போரின் காரணமாக உளவியல் ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பல அவலங்களைச் சந்தித்திருக்கும் வன்னி மக்களை, பொருளாதார ரீதியான ஒடுக்குமுறையும் பெரிதும் கஸ்டத்திற்கு உள்ளாக்கியது. வன்னியில் இருந்து வெளிவரும் புகைப்படங்களில் போசாக்கில்லாத குழந்தைகளின் படங்கள் வன்னியில் பொருளாதாரத் தடையின் வெளிப்பாடாக காணப்படுகின்றது. பலர் மனநோயாளர்களாக ஆகிவிட்டுள்ளனர். வீடு, வாசல்களை இழந்து அவல வாழ்வு வாழும் மக்களை நோய்களும் விட்டு வைக்கவில்லை. மருந்துகளுக்கான தடை கூட அமுல் செய்யப்பட்டிருந்த வன்னி மக்கள் நோய்க்கு நிவாரணம் காணக் கூட முடியாதவர்களாக பல உயிர்களை இழந்துள்ளனர்.

இன்று தொடர்ச்சியான போரின் தாக்கத்தில் இருந்தும் வாழ்வியல் நெருக்கடிகளில் இருந்தும் சமாதான முன்னெடுப்புகளின் மூலமாக சிறிதாக மூச்சு விடுகிறார்கள்.

இந்த மக்களின் வாழ்வியல் அவலம் தொடர்பாக, அண்மையில் கிளிநொச்சி சென்ற ஊடகவியலாளர் ஒருவரின் அனுபவங்களில்,

1995 ஆம் ஆண்டு கிளிநொச்சி நகரம் இலங்கை இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து வெளியேறி கிளிநொச்சி மக்கள் காடுகளை வெட்டி மனிதர் வாழவே முடியாத பிரதேசங்களில் மிகவும் கஷ்ரமான வாழ்க்கை வாழ்ந்தார்கள். இது பற்றிக் கிளிநொச்சியைச் சேர்ந்த சிவசம்பு மகேந்திரன் என்னும் பொருளியல் ஆசிரியர் தெரிவிக்கையில்,

கிளிநொச்சியை நோக்கி இராணுவம் முன்னேறி வர வர சனம் என்ன செய்வது என்ற தெரியாமல் இருந்தனர். ஆனால் ஆட்லறிக் குண்டு வீச்சுகள் மிகவும் மோசமாக இருந்த போது எங்களுடன் கூட இருந்தோர் அங்கங்களை இழந்த போது, உயிர்களை இழந்த போது நாங்கள் இனியும் இங்கு இருக்க முடியாத நிலையில் வேறு பாதைகளால் முருகண்டி, ஸ்கந்தபுரம் போன்ற பல்வேறு பிரதேசங்களை நோக்கி நகர்ந்தோம். நாங்கள் போகின்ற போது பல இழப்புக்கள். மனிதர், ஆடு, மாடு என எல்லாமே சதைத்துண்டங்களாகக் காட்சி அளித்தன.

வீதிகள் எல்லாம் ரத்தமாகத் தான் கிடந்தது. அதைக் கடந்து தான் நாங்கள் ஓட வேண்டி இருந்தது. உண்மையில் ஏணையில் கிடந்த பிள்ளைகளைக் கூட விட்டோடிய தாய்மாரின் சம்பவங்களைக் கூட கேள்விப்பட்டிருக்கிறேன்.. திரும்பி வந்து அந்தப் பிள்ளைகளைக் கூட மீட்க முடியாத நிலை இருந்தது.

அப்படியான நிலையில் தான் நாங்கள் சென்று உண்மையில் மனிதர்கள் வாழ முடியாத பிரதேசங்களில் வாழ்ந்தோம். என்னென்று சொல்வது என்று தெரியவில்லை. நுளம்புக் கடியைச் சொல்வதா? பாம்புக் கடியைச் சொல்வதா? யானை அடிப்பதைச் சொல்வதா? பன்றி அடிப்பதைச் சொல்வதா? அத்தனையும் ஒரு மனிதன் அனுபவிக்க முடியாத கொடூரமான சம்பவங்கள். இவற்றை விட நாங்கள் இராணுவத்தின்ர கொடுமையை அனுபவித்தோம். எங்களாலை இயன்றவுக்கு எங்கட தகுதிகளுக்கு அப்பாற்பட்டு எங்களுடைய உடலில் உயிரைத் தக்க வைக்க வேணும் என்பதற்காக எங்களுடைய குடும்பங்களைக் காப்பாற்ற வேணும் என்பதற்காக வாழ்ந்து வந்தோம்.

- என்று தெரிவித்தார்.

கிளிநொச்சியை இராணுவம் கைப்பற்றி இருந்த வேளை வீட்டைப் பார்ப்பதற்கும், ஏதாவது இருந்தால் எடுத்து வருவதற்கும் என்று சென்ற தனது தந்தையைக் காணவில்லை என்ற மாணவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாகராசா சசிகுமார் என்னும் அந்த மாணவன் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் கிளிநொச்சியை இராணுவம் வந்து ஆக்கிரமிக்கும் பொழுது அங்கை இருந்து இடம்பெயர்ந்து போய் இருந்த இடத்தில் சரியான கஷ்டம். அந்தக் கஸ்டத்தால் அப்பா வீட்டுக்குப் போய் ஏதாவது தேடிக் கொண்டு வருகிறேன் என்று சென்றார். அப்பாவை இராணுவம் பிடிச்சிட்டாங்கள்.

இராணுவம் அப்பாவை என்ன செய்தது என்றே தெரியவில்லை. அதற்குப் பிறகும் எங்களுக்குச் சரியான கஸ்டம். நான் கூட அனாதை இல்லத்தில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

கிளிநொச்சியில் இருந்து இராணுவம் வெளியேற்றப்பட்ட பின்னர் எடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளில் தனது தகப்பனார் என்பதற்கான அடையாளம் எதனையும் தங்களால் காண முடியாது இருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். உண்மையில் கைது செய்யப்பட்டவர்கள் என்ன ஆனார்கள் என்பது அவிழ்க்க முடியாத முடிச்சாகவே உள்ளது.

கிளிநொச்சி மக்கள் பலர் தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற போது காணாமல் போயிருந்தார்கள். இவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. இராணுவத்தின் வெளியேற்றத்தின் பின் எலும்புக் கூடுகள் பலவற்றைக் கண்டு பிடித்திருக்கின்றனர். ஆனால் இவை பெரும்பாலும் அடையாளம் காணப்படவில்லை.


அதே வேளை இராணுவம் வெளியேற்றப்பட்ட பின்பு கூட போரின் தாக்கத்தில் இருந்து அம்மக்களால் தப்ப முடியவில்லை. இராணுவம் இருந்த பிரதேசம் எங்கும் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. இவற்றினால் பலர் இன்றும் தமது அவயங்களையும் உயிரையும் இழக்கின்றனர்.

ஆசிரியர் சண்முகம் இது தொடர்பாக தனது அனுபவத்தினைக் கூறுகையில்,

கிளிநொச்சியைப் புலிகள் கைப்பற்றிய பின்னர் மிகவும் முக்கியமான இடங்களில் கண்ணி வெடிகளை அகற்றித் தந்தார்கள். எங்கள் பாடசாலையில் விடுதலைப் புலிகளின் வெண்புறாப் பிரிவினர் ஒரு சிறிய பகுதியைத் துப்பரவு செய்து தந்தார்கள். இந்தப் பிரதேசத்தினை விட்டு நீங்கள் வெளியேற வேண்டாம் என்ற ஒரு அடையாளத்தினையும் இட்டு அதற்குள்ளேயே இருக்கச் சொன்னார்கள். ஆனால் அந்தச் சூழ்நிலையிலும் கூட பல பிரச்சினைகளை எதிர்நோக்கினோம்.

4ம் ஆண்டு கல்வி கற்கும் மாணவனுக்கு கல்வி கற்பித்து விட்டு நான் வீட்டிற்கு சென்று விட்டேன். வீட்டை போன போது பாடசாலைக்கு பின்னால் சத்தம் ஒன்று கேட்டது. நாங்கள் ஓடிப் போய் பார்த்தோம். எங்களிடம் கற்ற மாணவன் சிதறி சதைத் துண்டமாகக் கிடந்தான்.

தொடர்ச்சி 3ம் பக்கம்...



## சொல்வார்களா?

பெப்ரவரி 15ம் திகதியுடன் கிளிநொச்சி வரையான பாதை திறக்கப் பட்டுவிடும் என அறிவிக்கப்பட்டு விட்டது. அதற்கான வேலைகளும் துரிதமாக நடந்து கொண்டிருக்கின்றன.

சிலவேளை இந்தப் பத்திரிகையுடன் ஒருவர் 15ம் திகதியே கிளிநொச்சி வரை பயணிக்கவும் கூடும். ஆனால் இந்தப் பாதை திறப்புடன் சம்பந்தப்பட்ட ஒரு முக்கியமான கேள்வி இருக்கிறது. தரைப் பாதை திறப்பது சந்தோஷம் தான், சந்தோசமாகவும் குறைந்த பொருட் செலவுடனும் போய்வர அது மிகவும் அவசியமானதும் தான்.

ஆனால் இந்தப் பாதையில் யார் யாரெல்லாம் போகலாம்?

போவோர் வருவோருக்கு இது தொடர்பான கட்டுப்பாடு எதுவும் இல்லையா?

இல்லாதிருந்தால் தான் இந்தப் பாதை திறப்புக்கு அர்த்தமிருக்கும். இதற்கு யாரும் மறுப்பு சொல்லப் போவதில்லை!

ஆனால் ஒரு கேள்வி,

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களும் தத்தமது பிரதேசங்களுக்கு போக இந்தப் பாதையைப் பயன்படுத்தலாமா?

பாதையைப் பயன்படுத்துவது சரி, போக அவர்களுக்கு அனுமதி உண்டா?

நமது அலுவலக முஸ்லிம் நண்பர் ஒருவர் சொன்னார் "நாங்கள் போக எப்ப என்று பார்த்திருக்கிறோம், புலிகள் ஒரு முறை உத்தியோகபூர்வமாக வரலாம் என்று சொல்லுவது தான் தேவை""

பாதை திறப்பு அர்த்தம் பெற இந்த உத்தியோகபூர்வ அறிவிப்பு மிகவும் அவசியம்.

அது புலிகளால் செய்யப்படுமா?

## குறுக்காலை போகாதே!

வீதித்தடைகள் பலவற்றை எடுத்தாயிற்று

மார்ச் 24ம் திகதிக்குள் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகிவிடும். அது கைச்சாத்தாகிவிடும் பட்சத்தில் புலிகள் கூட 'சிவிலில்" தாம் விரும்பும் இடங்களுக்குப் போக முடியும் என்று சொல்லப்படுகிறது.

எல்லாம் நல்ல விடயங்கள் தான்

ஒரு கேள்வி.

இந்த வீதித் தடைகள் ஏன் போடப்பட்டன?

'புலிகள் வரக்கூடாது என்பதற்காக" என்றார் நண்பர் ஒருவர்.

"அப்படியானால் தடைகள் இருந்த நேரமெல்லாம் புலிகள் வரத்தான் செய்தார்களே.. பலமான தடைகள் இருந்த வேளைகளில் தான் புலிகளின் பல தாக்குதல்கள் கொழும்பில் நடந்தன"" என்றேன் நான்.

'அப்படி என்றால் இந்தத் தடைகள் எல்லாம் எதற்காக இருந்தன - பொதுமக்களுக்காகவா?

'தெரியவில்லை, ஒருவேளை சமாதானத்துக்காக இருக்கலாம்" என்றேன் நான்.

நண்பர் பதில் சொல்லவில்லை.

ஆம். வீதித்தடைகள் போடப்பட்டதன் மூலமாக தடைசெய்யப்பட்டது வேறொன்றுமில்லை 'சமாதானம்" தான் இப்போ சமாதானம் என்று பேச்சுத் தொடங்கியவுடனே வீதித்தடை மட்டும் அகற்றப்படடவில்லை வீதியே திறபடுகிறது" என்றார் இன்னொருவர்.

இதை விளங்கிக் கொள்ள இத்தனை பலி கொடுக்க வேண்டி இருந்திருக்கிறது. இனியாவது புத்தி குறுக்காலை போகாமல் இருந்தால் சரி இவர்களுக்கு" என்று முத்தாய்ப்பு வைத்தார் இன்னொருவர்.

சம்பந்தப்பட்டவர்கள் குறித்துக் கொள்ள வேண்டிய முத்தாய்ப்பு இது!

## மறைந்தும் மறையாதது!

'தற்காலிகமாக தங்கியிருப்போரை" பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்ய வேண்டும் என்ற நடைமுறை. ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலும் எப்படி நடைமுறைப் படுத்தப்பபட்டது என்பதைச் சொல்லத் தேவையில்லை.

கொழும்பில் நிரந்தரமாக - வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டவர்களாக - சொந்த வீடுகளில் வசிப்பவர்கள் கூட அவர்கள் தமிழர்களாக இருந்தால் பதியப்பட்டே ஆக வேண்டும் என்று ஒரு 'சட்டம்" பொலிஸாரால் வலியுறுத்தப்பட்டு வந்தது

அப்படிச் செய்யாதவர்களை இரவு வேளைகளில் வந்து 'தூக்கிச" சென்றார்கள்.

இப்போது பதிவு விடயத்தில் தாம் அவ்வளவு 'அக்கறை காட்டவில்லை" என்று கூறுகின்றார்கள் பொலிஸ் அதிகாரிகள்.

'அக்கறை இல்லாமல்", இருப்பதற்கும், 'பதிவு அவசியமில்லை" என்பதற்கும் முக்கியமான வேறுபாடு இருப்பதாக யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை

எந்த நிமிடமும் இது திரும்பவும் அக்கறைக்குரிய விடயமாக மாறக்கூடும்.

அப்படி மாறினால், திரும்பவும் பதிவு வலியுறுத்தப்படும். பதிவுத் துண்டை கையில் வைத்திராதவர்கள் 'பயங்கர வாதிகளாக" அடையாளம் காணப்படுவார்கள்.

ஆக பொலிஸ் பதிவு முன்பும் சரி இப்போதும் சரி ஆட்சியில் இருப்பவர்களது மனவிருப்பப்படி மாறும் ஒன்றாக இருந்து வருகிறதே ஒழிய அது ஒரு சட்டபூர்வ விடயமாக நடைமுறையில் இல்லை.

இப்படி எழுதப்படாத, ஒழுங்கான நடைமுறை இல்லாத சட்டங்கள் எத்தனையோ இருக்கின்றன.

அரசாங்கம் மாறினாலும் அரசு மாறுவதில்லை என்பதற்கு இது நல்ல ஒரு அறிகுறி.

'மன்னர் மறைந்தார், மன்னர் நீடூழி வாழ்க" என்று சும்மாவா சொன்னார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இவர்கள் தான் கொலையாளிகள்

குமார் பொன்னம்பலம் கொலை விசாரணைகளில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகத் தொடங்கியிருக்கின்றன.

குமார் பொன்னம்பலம் கொலையில் அவரை சுட்டதாக கருதப்படும் மொரட்டுவ சொய்சாபுர வீடமைப்புத் தொகுதியைச் சேர்ந்த கமல்சிறி காலிங்கவங்ச எனப்படும் மொரட்டுவ சமன் மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இதற்கிடையில் குமார் பொன்னம்பலத்தை படுகொலைக்கான திட்டங்களை தீட்டியவராக கருதப்படும், தற்போது கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள உதவி பொலிஸ் கொன்ஸ்டபிள் என்.பி.சுகத் ரணசிங்க கடந்த 29 அன்று கல்கிஸ்ஸ நீதவான் நீதிமன்றத்தின் முன்னிலையில் இச்சம்பவம் பற்றி செய்திப் பத்திரிகைகளின் செய்தியிடல் குறித்து கருத்து தெரிவித்திருந்தார்.

அதன்படி இதற்கும் தனக்கும் எவ்வித தொடர்புமில்லையென்பதை உள்ளடக்கமாகக் கொண்ட ஒரு அறிவித்தலை அவர் செய்தார். ஆனால் அவர் அதற்கு முன் குற்றப்புலனாய்வுப்பிரிவைச் சேர்ந்த பொலிஸ் விசாரணையாளர் நுவன் வெதசிங்கவுடனான தொலைபேசி உரையாலின் போது அளித்திருந்த வாக்குமூலத்தில் பல தகவல்களை கூறியிருக்கிறார். இந்த தொலைபேசி உரையாடல் ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒலி நாடா சமீபத்தில் கிடைக்கப்பெற்றது.

அதன்படி இந்தப் படுகொலையில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவுக்கும், ஜனாதிபதி செயலாளர் பாலபட்டபந்தியின் மகனுக்கும் இடையில் தொடர்பிருப்பதை அவர் அதில் ஒப்புக் கொண்டுள்ளார்.

குமார் 2000 ஆண்டு ஜனவரி 5ஆம் திகதி வெள்ளவத்தை ராமகிருஸ்ண வீதியில் காரில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார். அவருக்கு அஞ்சலி செலுத்தவென தி.மு ஜயரத்ன முதலில் அவரது வீட்டுக்குச் சென்றிருந்த வேளை குமாரின் மனைவி இந்த கொலை வேறு யாருமல்ல அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒன்று என்று குறிப்பிட்டிருக்கிறார். உடனேயே ஜயரத்ன அங்கிருந்து வெளியேறி விட்டார். அதன் பின் சிறிது நேரத்தில் அங்கு சென்றிருந்த பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் மனைவி ரமணி, கொலையுடன் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் சாந்த என்பவர் பற்றிய தகவல் ஏதும் கிடைத்ததா என்று வினவிய போது "இந்த படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பது குறித்து தாங்கள் நன்றாக அறிவீர்கள், எனவே இது குறித்து என்னிடம் கேட்பதில் அர்த்தமில்லை" என்றும் இத்துடன் ஜனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சருமே சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்று கூறியிருக்கிறார். ரமணி சென்று அரை மணித்தியாலத்தின் பின் குமாரின் மரண வீட்டிற்குச் சென்ற ஒருவர் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் அதிகாரியென்று கூறி ஜனாதிபதியின் அஞ்சலிக் கடிதத்தை கொடுத்திருக்கிறார்.

என்று வினவியிருக்கிறார். அரசாங்கத்தின் உயர் மட்ட பணிப்புரையின் பேரில் மேற்கொள்ளப்பட்ட கொலையென் தான் நம்புவதாக குமாரின் மனைவி பந்துல விக்கிரமசிங்கவுக்கு குறிப்பிட்டிருக்கிறார். அரசாங்கத்துக்கு எந்தவித தொடர்புமிருக்க வாய்ப்பில்லையென்றும், இது ஈபிடீபி இயக்கம் செய்திருக்கிறது என்றும் கூறியிருக்கிறார் பந்துல.

குமார் பொன்னம்பலத்தின் குடும்பம் அதன் பின்னர் வெளிநாட்டில் சில காலம் தங்கியிருந்துவிட்டு 2000 ஆண்டு ஏப்ரல் 20ஆம் திகதி திரும்பியது. அதன் பின் மீண்டும் தொடர்பு கொண்டு பந்துல விக்கிரமசிங்க குமாரின் படுகொலை பற்றிய விசாரணைகள் அனைத்தும் முடிந்து விட்டதாகவும், அக்கொலை புலிகளால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் கூறியிருக்கிறார்.

இதே காலப்பகுதியில் சிங்கள பின்னர் இது குறித்து ராவய பத்திரிகை குமாரின் மனைவிக்கு அறிவித்ததைத் தொடர்ந்து குமாரின்









மனைவி மீண்டும் பந்துலவுடன் தொடர்பு கொண்டு தான் அந்த சமனைப் பார்க்க வேண்டும் என்று கோரியிருக்கிறார். பந்துல இதற்கு பதிலளிக்கும் போது அக்கொலையை புலிகளே செய்திருக்கிறார்கள் என்றும் சமன் எனும் நபர் குறித்து அறிய வேண்டியதில்லையென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

குமார் பொன்னம்பலத்தின் கொலைக்கான திட்டங்களை வகுத்த பொலிஸ் கான்ஸ்டபிள் என்.பி.சுகத் ரணசிங்க 2000 மே 21 அன்று பொலிஸ் விசாரணையாளர் நுவன் எதிரிசிங்கவுக்கு தொலைபேசியின் மூலம் அளித்த வாக்குமூலத்தில் இவர் கண்டியில் வட்டபலுவ எனும் பகுதியில் தும்பிது மாவத்தையில் அமைந்துள்ள இலக்கம் 15 எனும் இடத்தில் இருக்கும் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான வாடிவீட்டில் இலக்கம் 08 அறையிலிருந்து 223993 எனும் தொலைபேசியின் மூலம் இந்த வாக்குமூலத்தை வழங்கியிருக்கிறார்.

அவரது இந்த வாக்குமூலத்தின் போது அவரருகில் இலங்கையில் குற்றங்களுக்குப் பேர் போன தம்மிக்க பெரேராவும் இருந்திருக்கிறார் என்பதும் இந்த உரையாடலிலிருந்து தெரியவருகிறது. இது பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் அவரின் மகன்மார் ஆகியோர் அவர்களின் ஆதரவாளர்களை தங்கவைப்பதற்காக பாவிக்கப்பட்டு வந்துள்ள முக்கியமான இடமாகும். இந்த வாக்குமூலத்தைக் கொண்டே ரணசிங்க ஆற்றில் வீசியெறிந்திருந்த குமாரின் கைத்தொலைபேசியை கண்டெடுக்கக்கூடியதாக இருந்தது.

ஜூன் 15 அன்று பந்துல விக்கிரமசிங்க பத்திரிகைகளுக்கு விசேட அறிவித்தல் வழங்கியிருந்தார். உதவி பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தொலைபேசியின் மூலம் வழங்கிய வாக்குமூலத்தின்படி குமார் பொன்னம்பலத்தின் கொலைக்கு தானே பொறுப்பு என்றும் இந்த குற்ற நடவடிக்கைக்காக கொரட்டுவையைச் சேர்ந்த சமன் மற்றும் சுஜீவ ஆகியோரை பயன்படுத்தியிருந்ததாகவும், அவர்களின் மூலமே குமார் சுடப்பட்டார் என்றும் இதற்கு பாவிக்கப்பட்ட துப்பாக்கிகள் கண்டெடுக்கப்பட்டிருப்பதாகவும் அதில் அறிவித்திருக்கிறார். ஆனால் இது அவர்களின் தனிப்பட்ட தேவையின் காரணமாக மேற்கொள்ளப்பட்ட கொலையே ஒழிய அதனுடன் வெளியார் எவருக்கும் தொடர்பில்லையென்றும் அவர் அதில் கூறியிருக்கிறார்.

2000 ஜூலை 28 அன்று ஒரு வீட்டிலிருந்து 1.3 மில்லியன் ரூபா பெறுமதியுள்ள பொருள் பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டது தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பணியகம் மொகமட் தகீர் எனும் நபரை கைது செய்து விசாரித்ததில் அதனை பொலிஸ் கான்ஸ்டபிள் சுகத் ரணசிங்க வழங்கியதாக கூறியிருக்கிறார். பொலிஸ் கான்ஸ்டபிள் கொடுத்த தகவலின் படி அது அனுருத்த ரத்வத்தவின் மகன் மஹேன் ரத்வத்த வழங்கியதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

பந்துல விக்கிரமசிங்கவின் குறிப்பின்படி 2000 ஒகஸ்ட் மாதம் ஜனாதிபதியின அழைப்பின் பேரில் தான் அழைக்கப்பட்ட போது குமார் பொன்னம்பலம் கொலையில் மஹேன் ரத்வத்தை இருப்பதாகவும் பத்திரிகையாளர் ரோகண குமாரவின் கொலையுடன் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த பெத்தகானே சஞ்சீவவுக்கு தொடர்பிருப்பது தெரியவந்திருப்பதாவும் குறிப்பிட்டிருக்கிறார். ரோகண குமாரவை கொலை செய்யவென புறப்பட்டிருந்த வாகனத்தை சஞ்சீவவே ஓட்டிச் சென்றிருக்கிறார் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இதற்கு பதிலளித்த ஜனாதிபதி தனது அதிருப்தியை தெரிவித்ததுடன் அப்படியென்றால் சஞ்சீவவை வெளிநாடொன்றுக்கு அனுப்ப வேண்டியேற்படும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார் என்பதை தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்திருக்கிறார். குமாரின் கொலை பற்றிய ரகசிய விசாரணை அறிக்கையொன்றினை தனக்கு தரும்படி ஜனாதிபதி கூறியிருக்கிறார். அவ்வறிக்கையின்படி மஹேன் ரத்வத்தவின் தூண்டுதலின் பேரில் ரணசிங்கவின் மூலம் இந்த கொலைக்கு மொரட்டுவவைச் சேர்ந்த சமன் மற்றும் சுஜீவ ஆகியோர் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. மஹேன் ரத்வத்த இதனை அலட்சியப்படுத்திக்கொண்டே "நீங்கள் ஒருவரும் குழப்பமடையத் தேவையில்லை உயர்மட்டத்திலுள்ளவர்கள் அனைவரும் இது குறித்து அறிவார்கள்" என்றும் குறிப்பிட்டதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வெதசிங்கவுடனான ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலமும் இந்த கொலையுடன் பாலபட்டபந்தியின் மகனுக்கும் இது குறித்து தெரியும் என்பது குறிப்பிடப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

ஆங்கிலப்பத்திரிகைகள் அக்கொலையை புலிகளே செய்திருக்கிறது எனப் பிரச்சாரம் செய்து வந்தன.

2000 ஏப்ரல் 6 அன்று வாழைத்தோட்ட பொலிஸாரால் மொரட்டுவ சமன் எனும் நபர் மரதான தேவநம்பியதிஸ்ஸ மாவத்தையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். இது குறித்து தெரிந்தவுடன் ராவய பத்திரிகை பந்துல விக்கிரமசிங்க மற்றும் பொலிஸ் விசாரணையாளர் நுவன் எதிரிசிங்கவுடனும் தொடர்பு கொண்டு குமாரை சுட்டதாக சந்தேகிக்கப்படும் சமன் என்பவரே அவர் என்றும் அவர் குறித்து விசாரிக்கும்படி அறிவித்திருக்கிறது. இதற்கு பதிலளித்த பந்துல விக்கிரமசிங்க தமது தரப்பில் விசாரணைகள் முடிக்கப்பட்டு விட்டதாகவும், குமாரை சுட்டது சமன் அல்ல புலிகளே என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அதன்

> குமாரின் கொலை பற்றிய ரகசிய விசாரணை அறிக்கையொன்றினை தனக்கு தரும்படி ஜனாதிபதி கூறியிருக்கிறார். அவ்வறிக்கையின்படி மஹேன் ரத்வத்தவின் தூண்டுதலின் பேரில் ரணசிங்கவின் மூலம் இந்த கொலைக்கு மொரட்டுவவைச் சேர்ந்த சமன் மற்றும் சுஜீவ ஆகியோர் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. மஹேன் ரத்வத்த இதனை அலட்சியப்படுத்திக்கொண்டே "நீங்கள் ஒருவரும் குழப்பமடையத் தேவையில்லை உயர்மட்டத்திலுள்ளவர்கள் அனைவரும் இது குறித்து அறிவார்கள்" என்றும் குறிப்பிட்டதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

குமார் பொன்னம்பலம் கொலை செய்யப்பட்டு அடுத்த நாள்குற்றப் புலனாய்வுப் பணியகத்தைச் சேர்ந்த பணிப்பாளர் பந்துல விக்கிரமசிங்க குமாரின் மனைவியுடன் தொடர்பு கொண்டு இக்கொலையுடன் யாரையாவது சந்தேகப்படுகிறீர்களா

## போரின் பின்... 2ம் பக்கத் தொடர்ச்சி

அவனுடைய சகோதரன் இரத்த வெள்ளத்தில் காட்சியளித்தான்.

அந்தப் பிரதேசத்துக்கு நாங்கள் போக முடியாது. உடனடியாக கண்ணி வெடி அகற்றும் வெண்புறாப் பிரிவினர் அந்த இடத்துக்குச் சென்று அந்த மாணவனைத் தூக்கிக் கொண்டு சென்றார்கள். ஆனால் அந்த மாணவனின் உயிர் பிரிந்து போய் விட்டது.

அந்த வகையில் பாடசாலைக்கு வரும் மாணவர்களைப் பார்க்கும் போது நாங்கள் உண்மையில் அவர்களை வெறும் உடுப்போடு தான் பார்க்கிறோம். அவர்களது உடைகளைக் கழட்டி விட்டுப் பார்த்தால் இந்தப் பிரச்சினை காரணமாக ஏற்பட்ட அடையாளங்களை அவர்களது உடலில் காணலாம்.

கையில்லாதவர்கள், காலில்லாதவர்கள், கண்ணிழந்தவர்கள், காது கேட்காதவர்கள், உடல்களிலே காயப்பட்டவர்கள், பெற்றோரை இழந்தவர்கள், உறவுகளை இழந்தவர்கள் என்ற பல முகங்களை காணலாம். உண்மையில் எல்லோரும் வெள்ளை ஆடைகளோடு சிரித்துக் கொண்டு திரிகிறார்கள். நாம் அவர்களை தனியே கூப்பிட்டு அவர்களுடன் கதைக்கும் போது தான் இவ்வகை வேதனைகளையும் சோகங்களையும் அறிந்து கொள்ள முடியும்.

- என்று தெரிவித்தார்.

கிளிநொச்சி மக்களின் அவல வாழ்வு என்பது இன்னும் கண்ணி வெடிகளுடன் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

அண்மையில் கண்ணிவெடிகளை அகற்றும் வேலைகளை புலிகள் ஆரம்பித்திருக்கிறார்கள்.

அத்துடன் தெற்கில் பிக்குமார்கள் கண்ணிவெடிகளுக்கு எதிரான கையெழுத்து வேட்டையையும் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

என்ன ஆயினும், மீண்டும் யுத்தம் தொடங்கினால்......!

அவலங்களும் வேதனைகளும்.... தான் [illegible]

www.tamilarangam.net



# இலங்கை இந்திய உறவும் தமிழர் பிரச்சினைத் தீர்வும்

-என்.சரவணன்-

பேயிடம் கிடைக்காவிட்டால், பேயின் பாட்டியிடமாவது உதவி பெறுவேன்." என்றார். ஜே.ஆர். 1987இல் இந்தியப் படை வருகை குறித்தே அவர் அவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

இன்று இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான செயன்முறையில் அதிகளவு தலையீடு செய்கிற முக்கிய வெளிநாடாக இந்தியா திகழ்கிறது. தீர்வுக்கான முயற்சிகள், தீர்வின் உள்ளடக்கம் என்பனவற்றில் இந்தியாவையும் கவனத்திற்கொண்டே மேற்கொள்கின்ற நிலை உருவாகியுள்ளது. இந்தியாவை திருதிப்படுத்தாத ஒரு தீர்வை கற்பனை பண்ணிப் பார்க்கக்கூடாது என்கிற நிலையை அவை அடைந்திருக்கின்றன. இந்தியாவுக்கு இடையூறான எந்தத் தீர்வினையும் உள்ளடக்காத வகையில் எச்சரிக்கை கொள்ள வேண்டும் என்கிற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இந்தியா மட்டுமல்ல இதில் அமெரிக்க, ஐரோப்பிய தலையீடுகளும் இத்தகையவை தான் என்றாலும், அவற்றை இந்தியாவுடன் ஒப்பிட முடியாது. இந்திய துணைக்கண்டத்தின் பலாத்காரமாக அதிகாரத்தில் தன்னை நிலைநிறுத்திக்கொண்ட இந்தியா மற்றும் அதன் பூகோள எல்லைக்குட்பட்ட நாடென்ற வகையில் இலங்கை என்கிற நிலைகளிலிருந்து இந்த நிலைமைகளை விளங்கிக்கொள்ளலே இங்கு அவசியமானது.

சமாதான முயற்சிகளில் நோர்வே பங்களிக்கத் தொடங்கியதிலிருந்து புலிகள் - அரசு ஆகிய சம்பந்தப்பட்ட இரு தரப்புகளுக்கிடையிலான பரிமாற்றங்களை இந்திய, அமெரிக்க, பிரித்தானிய அபிப்பிராயங்களையும் உள்ளடக்குவதிலேயே நோர்வேயும் கவனம் செலுத்தியிருந்தது. அரசு, புலிகள் இரு தரப்பினதும் கருத்துக்களை காவிக்கொண்டு இந்நாடுகளுக்கு பயணிப்பதிலும் அவற்றின் அங்கீகாரத்தைப் பெறுவதிலேயுமே அதிக சக்தியும், அதிக காலதாமதமும் ஏற்பட்டதை ஆங்கிலப் பத்திரிகைகளும் சுட்டிக்காட்டியிருந்தன.

ஆக இன்றைய சமாதான முயற்சிகளுக்கான நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிப்பவர்கள் அதாவது நமது மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கின்ற சக்திகளாக இவை ஆகியிருக்கின்றன. நமக்கான நிகழ்ச்சி நிரல் நாமல்லதவர்களால் நமக்குவெளியில் தீர்மானிக்கப்படுகின்றன என்பது தான் இதன் சாராம்சம்.

இலங்கையின் வரலாற்றில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் அமர்ந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் இந்தியாவுடனான உறவுகள் கசப்பானவையாகவே இருந்து வந்திருக்கின்றன. அல்லது உறவு சுமுகமாக அமைந்திருக்கவில்லை. அது போல மாறாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிகளின் போதெல்லாம் இந்தியாவுடனான உறவுகள் பலமாக இருந்திருக்கின்றன என்பதை இலங்கையின் வெளியுறவுக் கொள்கை பற்றி அறிந்தவர்களுக்குத் தெரியும். ஆனால் கடந்த ஒன்றரை தசாப்தத்திற்கு மேலாக இந்திய இலங்கையில் உறவில் இலங்கையின் இனப்பிரச்சினை கடுமையான தலையீட்டை நிகழ்த்தி வந்திருக்கிறது. ஜே.ஆர். அரசாங்கம் இறுதியில் நிர்ப்பந்தமாக இந்தியாவின் காலடியில் விழவைக்கப்பட்டார். அவர்பின் வந்த பிரேமதாசா இந்திய எதிர்ப்பாளராக இருந்தாலும் அவரது அரசாங்க காலத்தில் இந்தியாவுடனான பகைமையை சரி செய்ய மிகுந்த பிரயத்தனம் காட்டினார். சந்திரிகா அரசாங்கம் இந்தியாவுக்கு நட்பு அரசாங்கமென்பதை நிறுவிக்கொண்டே வந்தது. போரை வலுப்படுத்த பாகிஸ்தானுடன் கொடுக்கல் வாங்கல் செய்து கொள்ள தள்ளப்பட்டாலும் இந்திய உறவில் தளர்வு ஏற்படவில்லை. இந்தியாவுக்கும் இதில் கசப்பிருந்தாலும் ராஜதந்திர ரீதியில் இலங்கையை பாகிஸ்தானின் ஆதரவில் இருந்து அப்புறப்படுத்த போருக்கான மேலதிகமான ஆதரவினை இந்தியா நல்கியிருந்தது நமக்கெல்லாம் நினைவிருக்கும்.

இந்த நிலையில் தான் ரணில் வருகிறார். ரணில் ஆட்சியமைக்கு முன்னமே இந்தியாவுடனான உறவு எப்படியிருக்க வேண்டும் என்பது குறித்து திட்டவட்டமான முடிவுக்கு வந்தாகி விட்டது. எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போதே அதிகளவான அவரது உத்தியோகபூர்வ விஜயம் இந்தியாவுக்காகத் தான் இருந்தது. தனது ஆட்சியமர்வே இந்தியாவுக்கு சாதகமானது என்பதை நிறுவுகின்ற வகையிலும் இந்தியாவின் அதரவை நாடுகின்ற வகையிலுமே அந்த சந்திப்புகள் இந்திய ஆட்சித் தலைவர்களுடன் அமைந்திருந்தது.

ரணில் ஆட்சிக்கு வந்தார், வந்தவுடன் அவரது உத்தியோகபூர்வ முதல் விஜயம் இந்தியாவுக்கானதாக இருந்ததில் ஆச்சரியமிருக்கவில்லை. அவரது ஆட்சித்துறை சகாக்களும், அமைச்சரவை உறுப்பினர்களும், வர்த்தக சமூகத்தவர்களுமான அனைவரதும் வர்க்க நலன் அரசியலானது அவர்களின் மிதவாக அரசியல் நலன்கள் அனைத்தையும் விட அதிகமாக இருந்தது.

விடுதலைப்போராட்டதிற்கு எதிராக இரண்டு அரசுகளுக்கும் இடையில் நிலவிய பொதுவான ஆக்கிரமிப்பு, ஆதிக்க நலன்களும், இரண்டு அரசுகளின் ஆளுங்குழுமங்களின் குறிப்பான பல்வேறு நலன்களும் இந்த நெருக்கமான உறவிற்கு வேகமாக வழிவகுத்தன. பொருளாதார மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தங்கள் பல செய்யப்பட்டுள்ளன. பல அக எதிர்ப்புகளையும் மீறி சிறிலங்கா அரசு தனது நலன்களில் கணிசமானவற்றை இந்திய அரசுக்காக விட்டுக் கொடுத்து வந்துள்ளது.



சீனாவுக்கு ஒரு கொங்கொங் போல இந்தியாவுக்கு இலங்கை என அண்மையில் மிலிந்த மொரகொட கூறியிருந்தார். அமைச்சரவையில் உள்ள அனைவருமே இந்தியாவின் ஆதரவினையும் அனுசரணையுடனுமே தமது அரசாங்கத்தின் வேலைத் திட்டங்கள் அமைய வேண்டும் என்றும், அதுவே ஆட்சிக்கு நன்மை பயக்கும் என்று கூறிவந்தாலும் அவர்களின் வியாபார நலனே அதன் உண்மையான உள்ளடக்கம் என்பதை அனைவரும் அறிவார்கள்.

ஏற்கெனவே இந்தியாவின் முதலீடுகள் இலங்கையில் பல துறைகளில் முதலிடப்பட்டிருக்கின்ற நிலையில் சந்திரிகா அரசாங்கத்தால் இந்தியாவுடன் செய்துகொள்ளப்பட்ட இலங்கை இந்திய வர்த்தக ஒப்பந்தத்தின்படி இலங்கையின் உற்பத்தி, மற்றும் உழைப்பு, வளங்கள் என பலதும் தாரை வார்க்கப்பட்டுள்ளன.

கடந்த ஜனவரி மாதம் சிங்கள வார இதழான லக்பிம பத்திரிகைக்கு அமைச்சர் ரவி கருணாநாயக்க அளித்திருந்த பேட்டியொன்றில் இலங்கை இந்திய வர்த்தக ஒப்பந்தத்தின்படி இந்தியாவிலிருந்து ஐயாயிரம் கோடி பெறுமதியான பொருட்கள் இறக்குமதி செய்யப்படும் அதே வேளை இந்தியாவுக்கு இலங்கையிலிருந்து 500 கோடி பொருட்கள் மட்டுமே ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று எழுதியிருந்தார்.

> 1992 மே 14ஆம் திகதி இந்தியாவில் புலிகள் இயக்கம் முதற் தடவையாக தடை செய்யப்பட்டது. அதன் பின் இருவருடங்களுக்கு ஒருமுறை இத்தடை நீடிப்பு நிறைவேற்றப்படுகிறது.
>
> 1994 முதற்தடவையாக நீடிப்பு நிறைவேற்றியது. அதன் பின் 1996, 1998, 2000 என தடை நீடிப்பு தொடரப்பட்டது. இவ்வருடம் புலிகளின் மீதான தடை செய்யப்பட்டு 10 ஆண்டுகளாகின்றது: இந்த வருடம் 2002 மே மாதம் மீளவும் இந்தியா அத்தடையை நீடிக்குமென நம்பப்படுகிறது.

இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியாவின் தலையீடானது தூரநோக்கு அரசியல் இலக்கைக் கொண்டிருந்தாலும் அதன் பொருளாதார நலன்களுக்கு கடந்த இரு தசாப்தகாலமாக இலங்கையின் இனப்பிரச்சினை உதவியிருக்கிறது என்று தான் கூற வேண்டும்.

இந்த நிலையில் தான் சமீப கால சமாதான முயற்சிகளில் இந்தியாவின் பங்களிப்பு குறித்தும், புலிகளின் தரப்பிலிருந்து கலந்து கொள்பவர்களை இந்தியாவில் தங்கி கருமமாற்ற இடங்கொடுக்க வேண்டும் என்றும் கோரி பந்தை இந்தியாவுக்கு எறிந்த போது இந்தியா அதனை எவ்வாறு கையாள்வது என்று தெரியாமல் திக்குமுக்காடியது. தனது தலையீடும் தேவை. அதே வேளை புலிகளுக்கு இடமளிப்பதற்கூடாக எதிர்கொள்ளப்போகும் அரசியல் விளைவுகளையும் எதிர்கொள்ளமுடியாது தவிர்த்துக்கொண்டு முன்னுக்குப்பின் மாறான கருத்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருந்தது.

புலிகளின் மீதான தடையை வைத்துக் கொண்டு இந்த சமாதான முயற்சியில் நேரடியான பாத்திரத்தை ஆற்றமுடியாத நிலையையிட்டு இந்தியாவுக்கு தடுமாறிப்போயிருப்பதாகவே தெரிகிறது.



இந்தியாவில் ராஜீவ் காந்தி 1991 மே 21 அன்று குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அதற்கடுத்த ஆண்டு மே 14ஆம் திகதி இந்தியாவில் புலிகள் இயக்கம் முதற் தடவையாக தடை செய்யப்பட்டது. அதன் பின் இருவருடங்களுக்கு ஒருமுறை இத்தடை நீடிப்பு நிறைவேற்றப்படுகிறது. புலிகளின் ஆதரவாளர்களை உள்ளடக்கிய பி.ஜே.பி. தலைமையிலான அரசாங்கம் பதவியிலமர்ந்தவுடன் இத்தடை நீக்கப்படும் என புலிகள் நம்பியிருந்தாலும் இந்தியா அத்தடையை நீக்கியிருக்கவில்லை.

1994 முதற்தடவையாக நீடிப்பு நிறைவேற்றியது. அதன் பின் 1996, 1998, 2000 என தடை நீடிப்பு தொடரப்பட்டது. இவ்வருடம் புலிகளின் மீதான தடை செய்யப்பட்டு 10 ஆண்டுகளாகின்றது. இந்த வருடம் 2002 மே மாதம் மீளவும் இந்தியா அத்தடையை நீடிக்குமென நம்பப்படுகிறது.

இந்தியாவுக்கான உறவுப்பாலம் அமைக்கும் முயற்சியில் ரணில் விக்கிரமசிங்க அதிக கவனம் செலுத்தி வருவதன் பின்னணியில் இலங்கையின் வர்த்தக சமூகத்தின் அதி பெரும் பங்களிப்பு இருக்கிறது. இலங்கையின் இனப்பிரச்சினையால் ஆரம்பத்தில் லாபமடைந்த வர்த்தகர் குழாம் என்று கடந்த காலங்களில் இருந்தது. இன்று தரகு பொருளாதாரத்தில் தங்கியிருக்கும் நமது உள்ளூர் தரகு முதலாளிகள், மற்றும் அந்நிய பல்தேசியக் கம்பனிகள், முதலீட்டாளர்கள் என அனைவருக்கும் தமது சந்தையை பலப்படுத்த உள்நாட்டுப் பிரச்சினை தீர்க்கப்பட்டாக வேண்டும். இவை தவிர ஐ.எம்.எப். உலக வங்கி என்பன அண்மையில் வேகமாக இலங்கைக்கு படையெடுத்து தற்போதை அரசியல் முன்னெடுப்புக்கள் குறித்து தமது நிபந்தனைகளைத் தெரிவித்துவிட்டுப் போயிருக்கின்றன. அவை என்னவென்பது குறித்த தகவல்கள் இன்னமும் பூரணமாக வெளியிடப்பவில்லை. எனவே அனைத்து வர்த்தகர்களுக்கும் என்றுமில்லாத அளவுக்கு சமாதானத்தின் மீது அக்கறை பிறந்திருக்கிறது. போரில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் மீது அனுதாபம் வந்திருக்கிறது.

இந்தியாவுடனான வர்த்தகத்தில் இன்றைய உள்ளூர் முதலாளிகள் பலர் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் முக்கிய சிலர் இன்றைய அமைச்சரவையில் அங்கம் வகிப்பவர்கள். அவர்களின் முழு ஆலோசனையும் இந்தியாவுடனான ராஜதந்திர உறவுகளை பலப்படுத்துவது நிகழ்ச்சி நிரலில் முக்கிய இடம் பெற வேண்டும் என்பதே.

சிஹல உறுமயவைச் சேர்ந்த சம்பிக்க ரணவக்க முன்னர் லங்காதீபவில் கும்பகர்ண எனும் பெயரில் எழுதிவந்த பத்தியில் (இவர் இப்போது லக்பிம பத்திரிகையில் சொந்தப் பெயரில் எழுதி வருகிறார்.) இந்தியா பற்றிய பார்வைகளை மாற்ற வேண்டிய அவசியத்தையும், இந்தியாவை கவனமாக கையாள்வதற்கூடாக உறவுகளை பலப்படுத்த வேண்டுமென்றும், தமிழ் போராட்டத்திற்கு எதிரான அதன் நிலைப்பாட்டை சாதகமாக பயன்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

பொ.ஐ.மு இந்தியா விடயத்தில் ஐ.தே.கவை பகைத்துக் கொள்ளாது. இப்படி இன்றைய இலங்கையின் அனைத்து சக்திகளும் இந்தியாவுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்கும் அதே நேரம் தமிழ்த் தேசப்போராட்டத்தில் இந்தியா தமிழர்களின் நலன்களுக்கு எதிரான நிலைப்பாட்டினை அரச கொள்கையாகவே கொண்டிருக்கிறது. ஆக மொத்தத்தில் இன்றைய இந்தியாவின் நிலை என்பது இலங்கை சிங்கள பௌத்த அரசுக்கும், தரகுமுதலாளிகளுக்குமே அதிகளவு கடமைபட்டிருக்கிறது. தமிழ் மக்களின் நலனில் அது எதுவித அக்கறையும் கொள்ளவேண்டிய தேவையில்லை என்கிற நிலையை கருத்திற் கொள்ள வேண்டும். அது என்றும் தமிழ் மக்களின் எதிரி என்பது உறுதிப்படுத்தப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் தேசிய சக்தி ஆகுமா?

## ஒரு விவாதத்திற்கான தோடக்கம்

-அரவிந்தன்

'தமிழ் தேசிய கூட்டமைப்பு திசை மாற விடக் கூடாது' என்ற சிவராம் அவர்களின் கட்டுரையையும் (நிகரி -2) அதைத் தொடர்ந்து ஏ.யதீந்திரா அவர்கள் எழுதிய கட்டுரையையும், குவேனி என்பவர் எழுதியிருந்த கடிதத்தையும் (நிகரி இதழ் -3) படித்ததில் என்னுள் எழுந்த கருத்துக்கள் சிலவற்றைக் குறிப்பிடலாம் என்று கருதுகிறேன். இந்தக் கருத்துக்கள், தமிழ் தேசிய அரசியலை முன்னின்று நடாத்தவல்ல ஆற்றலும் தகுதியும் படைத்த ஒரு கட்சியின் தேவையை உணர்பவர்கள் மத்தியில் ஒரு திறந்த கலந்துரையாடலுக்கு வழிவகுக்குமானால் அது மிகவும் பயன்மிக்கதாக அமையும் என்று கருதுகிறேன்.

மேற்சொன்ன மூன்று கட்டுரைகளையும் கவனமாகப் படிக்கும் ஒருவருக்கு அவற்றுக்குள் பொதுமைப்பாடாக அமைந்திருக்கும் ஒரு முக்கியமான விடயத்தை இனங்கண்டு கொள்வது ஒன்றும் கடினமானதல்ல. அதாவது தமிழர் தேசியக் கூட்டமைப்பு தமிழ் தேசியத்தின் இன்றைய அரசியல் தேவைகளை நிறைவேற்றுவதற்காக இயங்கவல்ல ஒரு வெகுஜன அமைப்புக்குரிய அடிப்படைகளைக் கொண்டிருக்கிறது. அதிலுள்ள அரசியல்வாதிகளின் சுயநலப் போக்குகளும், சுத்துமாத்துக்களும் இல்லாவிடில், இந்தக் 'கூட்டமைப்பை' நிறுவனமயப்படுத்துவதன் மூலமாக, தமிழ் தேசியத்தின் தலைமைத்துவத்தை உருவாக்கி விடலாம் என்ற கருத்து இக் கட்டுரைகளின் அடிப்படையாக அமைந்துள்ளது. ஆகவே, சுயநலப் போக்கைக் கிள்ளி எறியும் விதத்தில், அதை அனுமதிக்காத விதத்தில் அதை அம்பலப்படுத்தி அரசியல்வாதிகளை வழிக்குக் கொண்டு வந்து, தமிழர் தேசிய மாநாடு, தமிழர் அரசியல் அபிலாசைகளின் தேசியப்பிரகடனம், நாடாளுமன்றத்தில் எமது அரசியல் செயற்பாடுகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட வரையறைகள், அரசியல்யாப்பு என்ற இன்னோரன்ன விடயங்களை நடைமுறைப்படுத்தினால், அது பரந்துபட்ட தமிழ் மக்களை அணிதிரட்டவல்ல வகையில் வடிவமைக்கப்பட்டு விடலாம் என்று இக்கட்டுரைகளின் சாரம் அமைந்துள்ளது.

இவற்றில் குவேனி அவர்களின் கடிதம் சற்று மாறுதலாக, இந்த 'சந்தர்ப்பவாத தேசியக் கூட்டமைப்பு தலைமை ஏற்பதை மறுக்கிறது. ஆனால், பதிலாக மக்களின் பல்வேறு வெகுஜன அணிகளின் (கடற்றொழிலாளர் அமைப்புகள், மாணவர், ஆசிரியர், சீவல் தொழிலாளர் அமைப்புக்கள், அன்னையர் முன்னணி, மனித உரிமை அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் தேசபக்த ஊடகவியலாளர்கள், அறிவுத் துறையினர் ஆகியோரின் அணிகள்) தலைமைகளில் இருந்தே தமிழ் தேசியத்திற்கான தலைமை உருவாக்கப்பட்டு அதற்கு நிறுவன வடிவம் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறது. இதில் இன்றைய தமிழ் தேசிய அமைப்பும் அங்கம் வகிக்கலாம் என்று குவேனி அவர்கள் தமது கடிதத்தில் மேலும் தெரிவிக்கின்றார். அதாவது இந்த அமைப்புகளின் கூட்டு தமிழ் தேசியக் கோரிக்கைகளின் தலைமையாக உருவெடுக்க முடியும் என்று அவர் கருதுகிறார்.

ஆக, அடிப்படையில் தமிழர் தேசியக் கூட்டமைப்புக்கு டி.சிவராம் அவர்களும் யதீந்திரா அவர்களும் முடியும் என்று கருதுவதுபோல, இன்று இயங்கும் வெகுஜன அணிகளுக்கு தமிழ் தேசிய அரசியலுக்கு தலைமை தாங்கும் சக்தி இருப்பதாக குவேனி கருதுகின்றார் என்பதையே அவரது கடிதம் காட்டுகிறது. வெகுஜன அமைப்புகளின் தலைமைகளை இணைப்பதன் மூலம் ஒரு கட்சியாக அதை மாற்றிவிட முடியும் என்பது அவரது கருத்தாக இருக்கின்றது.

இந்த மூன்று கட்டுரையாளர்களினதும் எதிர்பார்ப்புக்கள் மிகவும் தெளிவானவை. தமிழ் தேசியத்தின் விடுதலையை அடிப்படையாகக் கொண்ட நல்நோக்கத்துடன் அவர்கள் தமது கருத்துக்களை முன்வைத்திருக்கிறார்கள். தமிழ் தேசியத்தின் தேசிய அரசியல் அபிலாசைகளை அடைவதற்கான வெகுஜன மட்டத்திலான அரசியற் செயற்பாட்டுக்கு அவசியமான ஒரு அமைப்பின் அவசியத்தை வலியுறுத்துவதே இக்கட்டுரைகளின் அடிப்படையாகும். அவர்களது விருப்பத்தையும் எதிர்ப்பையும் யாரும் சந்தேகிக்க முடியாது.


ஆனால், நம்முன்னாலுள்ள கேள்விகள் இவை தான்.


தமிழ் தேசிய சக்திகள் எனப்படுவோர் யார்? அவர்களது இன்றைய எதிர்பார்ப்பு என்ன? இந்த தமிழர் தேசியக் கூட்டமைப்புக்கும் சரி, பிற வெகுஜன அமைப்புக்களுக்கும் சரி இந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் நோக்கிலமைந்த வேலைத்திட்ட நடைமுறை ஒன்று ஏற்கெனவே இருக்கிறதா? இவற்றிற்கு இத் தேசிய அபிலாசைகளை அடையும் நோக்குடன் செயற்படும் அரசியல் அடிப்படைகள் உள்ளனவா?


இந்தக் கேள்விகளுக்கு விடை காணப் புறப்படும் முன்பாக மேற்சொன்ன இந்த அமைப்புகளின் வரையறைகள் என்ன? அவை எதிர்கொள்கின்ற பிரதான பிரச்சினைகள் என்ன? அவை எதற்காக அமைப்பாக உள்ளன என்பதை அடையாளம் காண்பது முக்கியமானதாகும். அரசியல் 'கட்சி'யையும் வெகுஜன அமைப்புகளையும், தேர்தல் கால கூட்டுக்களையும் ஒரேவிதமாக கணிக்கும் போக்கு மிகவும் தவறானது மட்டுமல்ல, ஆபத்தானதும் கூட. இது கட்சியையும் இல்லாதொழித்து, வெகுஜன அமைப்பு செயற்பாடுகளையும் பயனற்றதாக்கி விடும் ஒரு நிலைக்கு இட்டுச் செல்லக் கூடியது. கடந்தகால வரலாற்று முழுவதிலும் நமக்கு இது தொடர்பான பல கசப்பான அனுபவங்கள் உதாரணங்களாக இருக்கின்றன.

பாராளுமன்ற ஆசனங்களைக் குறியாகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட கட்சிகளின் கூட்டுக்கள் பாராளுமன்ற தேர்தல் முடிவுகளை அடுத்து சின்னாபின்னமாகிப் போவதை யாருக்கும் சொல்லிப் புரியவைக்க வேண்டிய அவசியமில்லை. தவிர்க்க முடியாத 'சட்டரீதியான பந்தங்களில் தொங்கிக் கொண்டிருக்கும் பதவிகளைத்தவிர, தேர்தலின் பின் அவர்களை இணைத்து வைத்திருப்பவை வேறொன்றுமில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. இந்த தமிழர் தேசிய கூட்டமைப்பு தமிழ் தேசியத்தின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக் கூட்டாக நின்று போராடி, வெகுஜனங்கள் மத்தியில் இயக்கம் நடாத்தி தனது போராட்டத்தின் ஒருவடிவமாக தேர்தலில் குதித்த ஒரு அமைப்பு அல்ல. மாறாக தேர்தலில் தமிழர்க்கு அதிக









ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் ஒரே நோக்கத்திற்காக கூட்டுச் சேர்ந்து கொண்டு உருவான ஒரு அமைப்பு. (இந்தக் கூட்டு அவசியமானது, சில உடனடிப் பயன்களை தரக்கூடியது என்பதை மறுப்பதற்கில்லை) தவிரவும் இது தமிழ் தேசியத்தின் தேசிய அபிலாசைகள் என்று குறிப்பிட்டவை எவையும் இந்தப் பாராளுமன்ற கதிரைகளில் உட்கார்வதால் மட்டும் பெற்றுவிட முடியும் என்ற நம்பிக்கையுடன் உருவான ஒன்றும் அல்ல, பாராளுமன்றக் கதிரைகளைப் பிடிக்க தமிழ் தேசிய அபிலாசைகளைப் பேசுவது அவசியம் என்று செயற்பட்ட ஒரு கூட்டு. உண்மையும் அது தான். பாராளுமன்றக் கதிரைகளில் இருந்தபடி செயற்படுவதால் தமிழர் அபிலாசைகளை ஒரு போதும் பெற்றுவிட முடியாது. அதற்கு பாராளுமன்றத்தை விட வெளியே நிறைந்த தியாகம் செறிந்த செயற்பாடுகள் (ஆயுதப் போராட்டத்தைக் குறிப்பிடவில்லை) அவசியம். அவற்றைச் செய்ய இவை மக்கள் மத்தியில் இறங்கத் தயாராக இருக்க வேண்டும். (இக்கூட்டு பாராளுமன்ற மட்டத்தில் தமிழ் தேசிய அபிலாசைகளுக்காக செயற்படுவதற்கு அதிகப்படியான பலத்தை கொடுத்திருப்பதை மறுக்க முடியாது. ஆனால் அதன் நோக்கம் அதுவல்ல என்பதால் 'செவிக்குணவில்லாத போது வயிற்றுக்கும் சிறிது ஈயப்படும்' என்று தமிழ் தேசிய அபிலாசைகளுக்காக அவ்வப்போது அது கொஞ்சம் செயற்படக் கூடும்.)

வெகுஜன அமைப்புக்களை எடுத்துக் கொண்டால் அவை, தத்தமது தனிப்பட்ட உடனடித் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டவை. தமிழ் தேசிய அபிலாசைகளுக்காக உருவாக்கப்பட்டவை அல்ல. பகுதி நலன்களுக்கான போராட்டங்களிற்காக உருவாகும் வெகுஜன அமைப்புக்கள் தேசத்தின் பிரதான முரண்பாட்டினை தீர்ப்பதற்கான அமைப்புக்களாக ஒரு போதும் வளர்வதில்லை. எப்படி தொழிற்சங்கங்கள் தொழிற்சங்க உரிமைக்காகவும் தொழிலாளர் நலன்களுக்காகவும் போராடுகின்ற அதேவேளை 'தொழிலாள - முதலாளிய' வர்க்கங்களுக்கிடையிலான 'இணக்கம் காண முடியாத' பகையை இல்லாமலாக்க முடியாமல் இருக்கின்றனவோ அவ்வாறானதே இதுவும். உதாரணமாக கடற்தொழிலாளரது வெகுஜன அணிகளது இன்றைய பிரதான பிரச்சினையாக உள்ளது கடல் வலயக் கட்டுப்பாடுகள் என்றால், அவை அகற்றப்பட்டால், அதன்பின் அவர்களுக்கு தேசியப் பிரச்சினையுடன் நேரடிச் சம்பந்தப்பட்ட முக்கிய பிரச்சினை இல்லாது போய்விடும். பிறகு சந்தைப்படுத்தல், விநியோகம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் பிரதானமாகி விடும். தமிழர் தேசிய அபிலாசைகளுக்கும் அவர்களது வாழ்வுக்குமான இணைப்புக் கண்ணியை அதன்பின் அவர்கள் இழந்து விடுவார்கள். இது எல்லா வெகுஜன அணிகளுக்கும் பொருந்தும்.

இதுதான் இந்த தமிழ் தேசிய எழுச்சியை நிறுவனமயப்படுத்துவதில் பாராளுமன்ற அரசியற் கட்சிகளையும் வெகுஜன அணிகளையும் தலைமையேற்க வேண்டுமென எதிர்பார்ப்பதில் உள்ள ஆபத்தாகும்.

ஆக, மொத்தத்தில் பாரராளுமன்ற ஆசனங்களைக் குறியாகக் கொண்டு உருவான ஒரு கட்சியோ, பகுதி நலன்களுக்காக உருவான ஒரு வெகுஜன அமைப்போ அல்லது அமைப்புகளோ ஒரு போதும் மொத்த தேசிய அபிலாசைக்கான ஒரு அமைப்பாக வளர்ந்து வருவதில்லை. அதற்கான அரசியல் தத்துவார்த்தத் தளத்தை அவை கொண்டிருப்பதும் இல்லை.

அவை எந்த நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டனவோ அந்த நோக்கங்கள் நிறைவேறுகையில் கலைந்து போகின்றன. அல்லது அவற்றை அடையும் பணியில் தம்மை முழுமையாக மூழ்க வைத்துக் கொள்கின்றன. அவை ஒரு போதும் முழுத் தேசத்துக்கும் வழிகாட்டக் கூடிய தலைமைப் பாத்திரத்தை ஏற்கக் கூடியன அல்ல. அப்படி எடுக்கும் சந்தர்ப்பம் சிலவேளைகளில் வாய்த்தால் அப்போது, ஒன்றில் அதைப் பறிகொடுத்து விட்டு நிற்பார்கள், அல்லது தமது பகுதி நலனையே முழுத் தேசத்தின் நலனாக குறுக்கிக் கொண்டு விடுவார்கள். இலங்கையின் பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளும், தமிழர் விடுதலைக் கூட்டணி ஈறான தமிழ்க் கட்சிகளும் இவற்றிற்கு நல்ல உதாரணங்கள்.

தமிழ் தேசியத்தின் அரசியல் அபிலாசைகள் உண்மையில் அதன் தேசிய சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்டவை. ஒரு இனம் என்ற விதத்தில் இந்த நாட்டின் சகல இனங்களுடனும் சமத்துவமாகவும், கௌரவமாகவும் வாழ்வதற்கு உள்ள உரிமை அது. அது மறுக்கப்படும் பட்சத்தில், அதை புரிந்துணர்வு அடிப்படையில் பெற்றுக் கொள்ள முடியாத பட்சத்தில் சமத்துவத்தையும் கௌரவத்தையும் பேணும் விதத்தில் பிரிந்து போவதற்கான உரிமை அது.

இந்த உரிமை நடைமுறையில் அரசியல், கல்வி, கலை கலாசாரம் உள்ளிட்ட சகல துறைகளிலும் சமத்துவமானதும், கௌரவமானதுமான ஒரு நிலையை ஏனைய இனங்களைப் போல் அனுபவிப்பதாகவும் ஏனைய இனங்கள் அனுபவிப்பதை இயல்பானதாக ஏற்றுக் கொள்வதாகவும் அமைய வேண்டும்.

இந்த அடிப்படைக்காக செயற்படுவதை நோக்கமாகக் கொண்டு உருவாகும் ஒரு கட்சியால் அல்லது வெகுஜன அணியால் மட்டுமே தமிழ் தேசியத்தின் அபிலாசைகளை முன்னிறுத்தி இறுதி வரை செயற்பட முடியும். கடல்வலயத் தடையை நீக்குவதற்கான போராட்டமும் சரி, மனித உரிமைக்கான போராட்டமும் சரி இந்த நோக்குடன் செயற்படும் ஒரு அமைப்பாலேயே முரணற்ற ஜனநாயக முறைப்படி செயற்ப்படுத்தப்பட முடியும்.

நாட்டின் இன்றைய பிரதான பிரச்சினையைக் கையாள்வதற்கு, அதாவது தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக போராடுவதற்கு ஏற்றதாக அந்த அமைப்பு தன்னை உருவாக்கிக் கொள்ள வேண்டும். தேசிய சக்திகள் யார் என்பதை அது தெளிவாக இனங்கண்டு கொள்ள வேண்டும். தேசிய விடுதலைக்கான - சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் இயங்கும் சக்திகள் யார், பங்காளிகள் யார், ஆதரவாளர்கள் யார், எதிரிகள் யார் என்பதை இனங்காணக் கூடியதாக அது அமைய வேண்டும். மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், புத்திஜீவிகள் உள்ளிட்ட தேசிய ஒடுக்கு முறைக்கு உள்ளாகி இருக்கும் அனைத்து தமிழ் மக்களும் தமிழ் தேசிய சக்திகள் என்பதையும், தேசிய ஒடுக்கு முறைக்கு உள்ளாகி இருக்கும் முஸ்லிம் மக்கள் இப்போராட்டத்தின் பங்காளிகள் என்பதையும், பரந்துபட்ட சிங்கள மக்கள் இதன் ஆதரவாளர்கள் என்பதையும் அது விளங்கிக் கொண்டதாக அமைய வேண்டும்.

தேசிய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம், போராட்டத்தின் தன்மைக்கும் அவசியத்திற்கும் ஏற்ப வெவ்வேறு வடிவங்களை எடுக்கலாம் என்பதையும் இவற்றில்

தொடர்ச்சி 8ம் பக்கம்...

www.tamilarangam.net



# போரின் குழந்தைகளும் போரும் குழந்தைகளும்

- சேரன்

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதிகளுக்குச் சென்றிருந்தமை பற்றி The Globe and mail நாளேட்டின் நிருபர் Paul Knox எழுதிய பெரிய கட்டுரை ஒன்று ஏராளமான படங்களுடன் சனிக்கிழமை சிறப்பிதழில் (09.02.2002) வெளியாகி இருந்தது. அந்தக் கட்டுரையில் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்த சு.ப.தமிழ்ச்செல்வனின் நேர்முகமும் இடம் பெற்றிருந்தது. (கணினி, இணைய வசதிகள் இருப்போர் WWW.globeanmail.ca எனும் இணையத் தளத்தில் முழு விவரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.)

கனடிய அரசு விடுதலைப் புலிகளைப் 'பயங்கரவாதிகள்' என்று பிரகடனம் செய்திருப்பது 'மிகுந்த கவலை அளிப்பதாக உள்ளது' எனத் தமிழ்ச்செல்வன் அந்தப் பேட்டியில் மனம் வருந்தியிருந்தார். கூடவே ஏராளமான தமிழீழத் தமிழர்களை அகதிகளாக ஏற்றுக் கொண்டமைக்குக் கனடிய அரசுக்கு நன்றியும் தெரிவித்திருந்தார்.

விடுதலைப் புலிகளைப் 'பயங்கரவாதிகள்' என்று அழைப்பதிலோ அல்லது மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் (யாழ்) செய்வது போல புலிகளை ஃபாசிஸ்டுக்கள் (Fascists) என்று முத்திரை குத்துவதிலோ எனக்கு உடன்பாடில்லை என்பது மட்டுமல்ல, இத்தகைய முத்திரையிடல்களுக்குப் பின்னால் பலமான அரசியல் காரணங்களும் உள்ளன. இவை பின்னொருதரம் விரிவாகப் பேசப்பட வேண்டியவை.

சர்வதேச அரங்கில் விடுதலைப் புலிகள் மீது 'பயங்கரவாத' முத்திரை குத்தப்படுவதற்குச் சர்வதேச அரசியலில் தாராளமாகவே விரவியிருக்கும் நாடுகளின் சுயநலம், பூகோள அரசியல் போன்றவை மட்டுமே காரணம் அல்ல. Amnesty International, Human Rights Watch, ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமை மீறல்களைப் பற்றித் தொடர்ந்து வெளியிட்டு வந்த அறிக்கைகளும் காரணம் தான். இந்தக் காரணத்தை விடுதலைப் புலிகள் அசட்டை செய்வதோ அல்லது ஒதுக்கி விடுவதோ எமது அரசியல் நலன்களுக்கு உதவாது. அனைத்துலக மனித உரிமை நிறுவனங்கள் விடுதலைப் புலிகள் மேல் சுமத்துகிற முக்கியமான மூன்று குற்றச்சாட்டுகள் பின்வருமாறு :-

அ) போரில் தொடர்புபடாத அப்பாவிப் பொதுமக்களைக் கொல்வது

ஆ) குழந்தைகளை சிறுவர்களைப் போருக்கெனத் திரட்டுவது

இ) மாற்றுக் கருத்துள்ளோர், விடுதலைப் புலிகளை விமர்சிப்போரைக் கொல்வது

இந்த மூன்று குற்றச்சாட்டுக்களுமே உண்மையானவை என்பது மட்டுமல்ல, சர்வதேச அரங்கில் தமிழ் மக்களுடைய உரிமைப் போராட்டத்தைப் பெருமளவுக்குப் பாதித்திருப்பவை. கடந்த பல வருடங்களில் அப்பாவிச் சிங்கள, முஸ்லிம் பொதுமக்கள் விடுதலைப் புலிகளால் கொல்லப்படவில்லை என்பதும், தொடர்ச்சியான ஒரு தலைப் பட்சமான போர் நிறுத்தத்தில் அவர்கள் இறங்கியிருந்தமை என்பதும் அண்மைக் காலங்களில் சர்வதேச அளவில் பல தளங்களிலும், பல இடங்களிலும் நல்ல பெயரை மீட்டுத் தர உதவியது என்பது உண்மை. எனினும் இந்த நிலை தொடரும் என்பதைக் கேள்விக்குறியாக்குகிற பல சம்பவங்கள் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வருகின்றன. ஜெனிவா உடன்படிக்கைகளை மதித்து நடப்பதாகவும், ஐக்கிய நாடுகள் அவையின் குழந்தைகள் பட்டயத்தைக் கௌரவிப்பதாகவும் உத்தியோகபூர்வமாகத் தெரிவித்துள்ள விடுதலைப் புலிகள் அவற்றை மீறுவது தமிழ் மக்களின் சீரான அரசியலுக்கு பலம் தராது.

ஐ.தே.மு. அரசு பதவிக்கு வந்த பிற்பாடு, போர் நிறுத்தமும் அவற்றோடு கூடவே சமாதானம் பற்றிய எதிர்பார்ப்பும் பரவலாக ஏற்படுத்தப்பட்டது. இத்தகைய 'அமைதி'ச் சூழலில் இடம்பெறுகிற சில நடவடிக்கைகளைப் பற்றி நாம் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது. கிழக்கில் கன்னன்குடா, வெல்லாவெளி, வாகரை, தாண்டியடி, கிரான் போன்ற இடங்களில் சிறுவர்களை இயக்கத்துக்கெனக் 'கட்டாய ஆட்சேர்ப்பு' மூலம் அபகரித்துக் கொண்டு செல்லும் நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள் இறங்கியிருக்கிறார்கள். பல சந்தர்ப்பங்களில் இந்த நடவடிக்கைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியமான பாராளுமன்ற உறுப்பினர்களும் துணையாக இருக்கின்றனர். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த நண்பர்கள் பலரின் 'ஒன்றுகூடல்' சென்ற வாரம் இங்கு இடம்பெற்றபோது அவர்களூடாகக் கிடைத்த தகவல்கள் திடுக்கிட வைப்பவையாக உள்ளன.



**சர்வதேச அரங்கில் விடுதலைப் புலிகள் மீது "பயங்கரவாத" முத்திரைகுத்தப்படுவதற்குச் சர்வதேச அரசியலில் தாராளமாகவே விரவியிருக்கும் நாடுகளின் சுயநலம், பூகோள அரசியல் போன்றவை மட்டுமே காரணம் அல்ல. Amnesty International, Human Rights Watch, ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமை மீறல்களைப் பற்றித் தொடர்ந்து வெளியிட்டு வந்த அறிக்கைகளும் காரணம் தான். இந்தக் காரணத்தை விடுதலைப் புலிகள் அசட்டை செய்வதோ அல்லது ஒதுக்கி விடுவதோ எமது அரசியல் நலன்களுக்கு உதவாது.**

சிறுவர்களை விடுதலைப் புலிகளுக்குத் தர மறுத்தவர்களின் பெற்றோர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நண்பர் ஒருவரின் தங்கையும் அவரது கணவரும் இரு வாரங்கள் தடுத்து வைக்கப்பட்டு, பின்னர் அவர்களுடைய மகன் ஒப்படைக்கப்பட்ட பின்னரே விடுதலை செய்யப்பட்டுள்ளனர். கிரானில் தமது பிள்ளைகளை ஒப்படைக்க மறுத்து, வீடுகளை விட்டு வெளியேறிய குடும்பங்களின் வீடுகளில் சில கொள்ளையடிக்கப்பட்டும், தீ வைக்கப்பட்டும் உள்ளன. மூதூரிலும் இத்தகைய 'கட்டாய ஆட்சேர்ப்பில்' புலிகள் ஈடுபட்டுள்ளனர். பொது மக்களுடைய பலமான ஆட்சேபத்தையும், அதிருப்தியையும் கிளப்புகிற இந்த நடவடிக்கைகள் நியாயப்படுத்தப்பட முடியாதன. போர்ச்சூழலிலும் மிகுந்த நெருக்கடியான தற்பாதுகாப்புச் சூழலிலும் கட்டாய இராணுவ சேவையைச் சர்வதேச சட்டம் அங்கீகரிக்கிறது. ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் சிறுவர்களையும் குழந்தைகளையும் (18 வயதிற்கு உட்பட்டோர்) போருக்கு அனுப்புவதை எந்தச் சட்டமும், எந்த நியாயமும் அனுமதிப்பதில்லை. இத்தகைய நிலையில் வறிய, தப்பி ஓட முடியாத, புலம் பெயர் வாய்ப்பற்ற, அடி நிலை மட்டக் குழந்தைகளும் குடும்பங்களுமே பாதிக்கப்படுகின்றன.

பொதுவாகவே, போர்மயமாதல் என்பது ஏற்படுத்துகிற சமூக, உளவியல் சிக்கல்களும் பாதிப்புகளும் நீண்ட காலத்துக்கு எம்மோடிருக்கப் போகின்றவை என்பது மட்டுமல்ல, எமது சமூகத்தின் அரசியல், சமூக, உளவள நலன்களையும் பாதிப்பன. சிறுவர்களும் குழந்தைகளும் கட்டாய போர்ச் சேவையில் ஈடுபடுத்தப்படும் போது அவர்களுக்கு ஏற்படுகிற உளவளப் பாதிப்பிலிருந்து அவர்கள் விடுபடுவது சாத்தியமில்லை. ஏற்கனவே போரின் வேறு பல அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் அவர்களுக்கு மேலும் அவலத்தைத் தருவது என்பது எமது எதிர்காலத் தலைமுறைகளை இருளுக்கு இட்டுச் செல்வதாகும். சமாதானத்தின் பேரிலும் யுத்தத்தின் பேரிலும் இதனை நாங்கள் அனுமதிக்க முடியாது.

1989இல் இந்தியப் படையும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்ணியும் (EPRLF) அவர்களுடைய தொண்டரடிப் பொடிகளும் தமிழ்த் தேசிய இராணுவத்தை (TNA) கட்டாய ஆட்சேர்ப்பு மூலமே திரட்டினார்கள். அப்போது அவர்களிடம் பிடிபடாமல் தப்பி ஓடியவர்களைப் பத்திரமாகக் கொழும்புக்கு விமானம் மூலம் அனுப்பி வைக்க இலங்கைப் படையும் விடுதலைப் புலிகளும் உதவினர். இப்போது விடுதலைப் புலிகளின் கட்டாய ஆட்சேர்ப்பிலிருந்து தப்புபவர்களுக்கு யாருடைய உதவி கிடைக்கிறது என்பது தெரியவில்லை.

1989இல் நான் சிறுவனாக இல்லாத போதும், அந்நேரத்துப் 'பிள்ளைபிடிகாரர்கள்' என்னையும் விட்டு வைக்கவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு தங்கையின் திருமண அலுவலாகப் பயணிக்கையில் நடு வழியில் என்னையும் தான் பிடித்தார்கள். நல்ல காலம். யாழ். பல்கலைக்கழகத்தில் என்னோடு கூடப் படித்த ஒரு இயக்கவாதியின் கருணையால் தப்பி விட்டேன். நிர்ப்பந்தமும், கட்டாயமும், அகங்காரமும் விடுதலைக்கு உதவாது.

## இதற்கு யார் பொறுப்பு?

மலையகத்தில் உள்ள ஒரு உணவகம். நண்பர் ஒருவரைச் சந்திக்கச் சென்றபோது, ஒரு புதிய முகம். வித்தியாசமான பேச்சு-நடையை உடைய ஒரு வாலிபனைக் காணக்கூடியதாக இருந்தது. அருகே அழைத்து தம்பி எந்தவூர்? மட்டக்களப்பு என்று பதில் வந்தது. இங்கென்ன செய்-றீங்க? இந்த ஹோட்டலில் தான் வேலை செய்கின்றேன். ஏன் ஸ்கூல் போகலயா? போனேன். எத்தனையாம் வகுப்பு மட்டும்? மூன்றாம் வகுப்பு மட்டும் போயிருக்கேன். ஏன்? தொடர்ந்து படிக்கல்ல. என்னுடைய அப்பா நான் சின்னப்பிள்ளையாய் இருக்கும் போதே இறந்து விட்டார். அதனால் யுத்த சூழலுக்கு மத்தியிலும் அம்மாவால் மட்டும் என்னை படிக்க வைக்க வசதியில்லாமல் போய் விட்டது. ஏன்? வேறுயாரும் இல்லையா? இல்லை. நானும் அம்மாவும் மட்டும் தான். அப்படி-யென்றால் ஊருலயே வேலை செய்ய-லாமே? அங்கதான் வேலை செய்தேன். ஆனால் இப்போது அங்கு பொடியன்-மார்களை புடிக்குறாங்க. யாரு? அவங்க தான். பலத்காரமாகவா? அப்படியென்று சொல்வதற்கில்லை ஆனால் ஒரு வீட்டுக்கு ஒருவர் வீதம் கட்டாயம் செல்ல வேண்டும். அதனால் தான் நான் இங்கு வந்துட்டேன். அப்படியென்றால் அம்மா? அம்மா ஊரில் இருக்கா அவருக்கு ஏதும் பிரச்சினை வராதோ? வரும். எப்படி? அம்மாவுக்கு கடிதம் அனுப்புவாங்க. யாரு? அவங்கதான். என்னவென்று? உங்கள் மகனோடு எங்கள் காரியாலயத்துக்கு வரவும் என்று சொல்லி. அப்ப அம்மா என்ன செய்வார்? உண்-மையை சொல்லுவார். கேட்கவில்லை-யென்றால் மகனை கூட்டிக்கொண்டு வாரேன் என்று கொழும்புக்கு வந்து அப்படியே வெளிநாடு போயிடுவா. பின்பு? அம்மா வெளிநாட்டில் சம்பாதித்து வந்த-வுடன் இந்த பக்கமே நிலம் எடுத்து இருப்பது தான் ஐடியா. அப்படியென்றால் ஊரில் உள்ள வீடு? அதை 'மாவீரர்' குடும்பத்துக்கு கொடுத்துடுவாங்க. யாரு? அவங்க தான் என்று தொடர்ந்து கூறிக்-கொண்டே சென்றான்.

இங்கு இந்த வாலிபன் கூறிய விடயங்-களில் உள்ள உண்மைத் தன்மையினை நானறியேன். இருந்தும் வடக்கு கிழக்கில் இருந்து மலைநாட்டுக்கும், எழுத்தறிவித்த புத்திஜீவிகளையுடைய ஒரு பிரதேசத்தில் பிறந்து வாழ்ந்த ஒரு வாலிபன் தன்னுடைய ஆரம்பக் கல்வியைக் கூட பூர்த்தி செய்ய முடியாத அளவுக்கு இந்த யுத்த சூழல் தள்ளியிருக்கின்றது என்பதை நினைக்-கையில் மனதுக்கு சங்கடமாக இருந்தது. இவரைப் போல் இன்னும் எத்தனை பேர்? இத்தனைக்கும் பதில் சொல்ல வேண்டிய-வர்கள் யார்?

தமிழ் மக்கள் மேல் ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் சிறிலங்கா அரசா அல்லது அந்த ஒடுக்குமுறை காரணமாக ஆயுதப் போராட்டத்தைக் கையிலெடுத்-திருக்கும் விடுதலைப் புலிகளா? அல்லது இரு தரப்பினருமா?

*எட்டியாந்தோட்டையிலிருந்து*

*மு.கருணாகரன்.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பயங்கரவாதம் எது? பயங்கரவாதிகள் யார்?

- பாலரட்ணம்



# யாழ். கோட்டை மீதான ஜே.வி.பியின் தாக்குதல்!

> என்றாலும் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் ஜே.வி.பியினரின் தாக்குதல் குழுவினர் இறங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். மின்சாரக் கம்பிகள் துண்டிக்கப்பட்டன, தொலை பேசித் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டு விட்டன. ஆனால் பொலிஸ் அத்தியட்சகரின் பங்களாவிலிருந்து பலாலி இராணுவ முகாமிலுள்ள தளபதியுடனிருந்த நேரடித் தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்படவில்லை. இதனால் பொலிஸ் அத்தியட்சகரின் அவசரச் செய்தி இராணுவத்தளத்திற்குக் கிடைத்தது. இராணுவம் யாழ். கோட்டைக்கு விரைந்து வந்தது.

சிங்கள இளைஞர்களின் விரக்தியின் வெளிப்பாடு தான் ஜே.வி.பி. 1971ஆம் ஆண்டில் தொடங்கிய ஆயுதக் கிளர்ச்சியாகும்.

நன்கு திட்டமிடாமலும் சிங்கள இளைஞர்களின் முழுச் சக்தியையும் திரட்டாமலும் நாட்டு மக்களின் மனோநிலையைச் சரியாக நாடிபிடித்துப் பார்க்காமலும் அரசாங்கத்தின் வலுவையும் வாய்ப்பையும் தெரிந்து உணர்ந்து கொள்ளாமலும் தொடங்கப்பட்டது இந்த ஆயுதக் கிளர்ச்சி.

சரியாகத் திட்டமிடும் சக்தியற்ற தலைமை அவசரப்பட்டு இந்த ஆயுதக் கிளர்ச்சியைத் தொடங்கியதால் இங்கு ஒரு புரட்சியைப் பற்றிய சிந்தனைக்கே இடமில்லாமல் செய்தது.

றோகண விஜேவீர தலைமையிலான ஜே.வி.பியின் ஆயுதக் கிளர்ச்சி கம்பகா மாவட்டத்தில் நல்லவெற்றி பெற்றது. இம் மாவட்டத்தில் அரச நிர்வாகமும் நீதி நிர்வாகமும் சில தினங்கள் 'ஜே.வி.பியின் கைகளில் இருந்தன.

ஆயுதக் கிளர்ச்சி தொடங்குவதற்கு முன்னரே தலைவர் றோகண விஜேவீர கைது செய்யப்பட்டிருந்தார். இவர் யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் அவரது சகாக்கள் சிலருடன் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

கிளர்ச்சியை ஆரம்பித்தவுடன் யாழ்ப்பாணம் கோட்டைச் சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டிருக்கும் தலைவர் றோகண விஜேவீரவையும் சகாக்களையும் விடுதலை செய்வதற்கு கொழும்பிலிருந்த குழுவினர் திட்டமிட்டனர்.

யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டைக்குள் தான் சிறைச்சாலை இருந்தது. இந்தச் சிறைச்சாலையை அடுத்து சிறைச்சாலை அத்தியட்சகர், ஜெயிலர், பொலிஸ் அத்தியட்சகர் ஆகிய உயர் அதிகாரிகளின் பங்களாக்களும் இங்கிருந்தன. "மன்னர் மாளிகை" என்ற முற்காலத்தில் ஆங்கிலேயே ஆளுநர்கள், பிரமுகர்கள் வந்து தங்கியிருந்த மாளிகையும் இருந்தது. இந்த மாளிகையில் தான் இக்காலத்திலும் பிரதம மந்திரி மற்றும் வெளிநாட்டுப் பிரமுகர்கள் உள்நாட்டுப் பிரமுகர்கள் வந்து தங்கிச் செல்வதும் வழக்கம். தேவாலயமும் இருக்கிறது. முற்காலத்தில் அதாவது அந்நியராட்சிக் காலத்தில் தூக்குத் தண்டனை நிறைவேற்றிய தூக்குமேடைக் கோபுரமும், மக்கள் பார்க்கக் கூடியதாக இக்கோட்டையில் அமைக்கப்பட்டிருந்தது.

ஜே.வி.பியினர் சேகுவேரா பாணி ஆயுதக் கிளர்ச்சி நடத்துவதற்குத் திட்டமிட்ட நேரம் கிறிஸ்தவர்களின் "பாஸ்க்குக் காலமாகும்."

யாழ்ப்பாணம் சிறைச்சாலை மீது தாக்குதல் நடத்தி சிறையை உடைத்து றோகண விஜேவீரவையும் சகாக்களையும் விடுதலை செய்வதற்குத் திட்டமிட்ட தினத்தன்று கோட்டைச் சுவர்களுக்கு வெளியே அமைந்துள்ள முற்றவெளி மைதானத்தில் "பாஸ்க் நாடகம்" நடைபெற்றுக் கொண்டிருந்தது.

பெருந்திரளான மக்கள் பார்வையாளராகக் கலந்து நாடகத்தைப் பார்த்து மெய்மறந்திருந்தனர். இதனால் திட்டமிட்டபடி குறித்த நேரத்தில் கோட்டைக்குள் புகுந்து சிறையுடைப்பை மேற்கொள்வதற்கு ஜே.வி.பியினரால் முடியாது போய் விட்டது.

நள்ளிரவுக்குப் பின்னரே நாடகம் முடிந்தது. ஜே.வி.பியினர் திட்டமிட்ட நேரம் கடந்திருந்தது. இதற்கிடையில் கொழும்பில் பல இடங்களிலும் ஜே.வி.பியினர் திட்டமிட்டபடி தாக்குதல்கள் ஆரம்பமாகியிருந்தன. இதனால் பாதுகாப்புப் பிரிவினர் யாழ்ப்பாணத்துக்கும் எச்சரிக்கை செய்திருந்தனர்.

என்றாலும் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் ஜே.வி.பியினரின் தாக்குதல் குழுவினர் இறங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். மின்சாரக் கம்பிகள் துண்டிக்கப்பட்டன, தொலை பேசித் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டு விட்டன. ஆனால் பொலிஸ் அத்தியட்சகரின் பங்களாவிலிருந்து பலாலி இராணுவ முகாமிலுள்ள தளபதியுடனிருந்த நேரடித் தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்படவில்லை. இதனால் பொலிஸ் அத்தியட்சகரின் அவசரச் செய்தி இராணுவத்தளத்திற்குக் கிடைத்தது. இராணுவம் யாழ். கோட்டைக்கு விரைந்து வந்தது.

கோட்டைக்குள் சிலர் மாண்டனர். பலர் கைது செய்யப்பட்டனர். யாழ். கோட்டைக் கலகம் அடக்கப்பட்டது. யாழ். சிறைச்சாலை உடைப்பு முறியடிக்கப்பட்டது.

மறுநாள் சுன்னாகத்திலிருந்த கடற்படை முகாமிலிருந்த கடற்படையைச் சேர்ந்த நால்வரைச் சுட்டுக் கொன்று விட்டு நான்கு கடற்படையினர் தப்பிச் சென்ற போதும் நான்கு கடற்படையினரும் பொலிஸ் அத்தியட்சகரின் உத்தரவின் பேரில் பளையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்தன.

இலங்கையில் ஆரம்பித்த ஜே.வி.பியினரின் சேகுவேரா பாணியிலான ஆயுதப் புரட்சிக் கிளர்ச்சி அரசாங்கத்தின் "பயங்கரவாத" முத்திரையினால் இந்திய அரசின் உடனடி உதவியினால் அடக்கி ஒடுக்கப்பட்டது.

இந்தக் கிளர்ச்சிக்கு சீனாவின் தொடர்பிருந்ததாகவும் வட கொரியாவின் உதவியிருந்ததாகவும் வதந்திகளும் செய்திகளும் வெளிவந்து கொண்டிருந்தன.

1970ஆம் ஆண்டுத் தேர்தல் பிரசார சமயத்திலேயே பிரதமர் டட்லியை சில சீனர்கள் பின் தொடர்ந்து திரிவதாகச் செய்திகளும் புகார்களும் வெளிவந்து கொண்டிருந்தன.

ஜே.வி.பியினரின் ஆயுதப் புரட்சி அடக்கி ஒடுக்கப்பட்ட போதிலும் வடக்கில் இந்தப் புரட்சி முயற்சியைத் தமிழ் இளைஞர்கள் வியந்தனர். துணிச்சலான செயல் எனப் பாராட்டினர்.

1970ஆம் ஆண்டில் தான் தமிழ் இளைஞர்களின் உயர் கல்வியைத் தடுக்கும் தரப்படுத்தல் என்னும் திட்டம் இலங்கையில் கொண்டு வரப்பட்டது. தமிழ் இளைஞர்கள் விரக்தியடைந்திருந்தனர்.

தொடரும்...

# முஸ்லிம் காங்கிரஸ்: கதாநாயகர்களும் வில்லன்களும்

- அஹமட் ஹிஸாம்

> “ இன்னும் கொஞ்ச நாட்கள் செல்லச் செல்ல நான் தான் லக்ஸ்மன் கதிர்காமருக்கு அரசியலையும் அநுருத்த ரத்வத்தைக்கு இராணுவ ஆலோசனையினையும் வழங்கியதாககுறிப்பிடுவார் பஸீர் சேகுதாவூத் அவர்கள். அப்போது தலைவர் ரஊப் ஹக்கீம் அவர்கள் முழு மந்திரி பதவி ஒன்றினை அவருக்கு பெற்றுக் கொடுப்பார். பஸீர் அவர்கள் முழு மந்திரிப் பதவியினை பெற்ற வேகத்திலேயே முஸ்லிம் மக்களின் விடுதலையினையும் பெற்றும் கொடுப்பார்கள். அப்போது முஸ்லிம் மக்களும்குதிரைகள் பூட்டிய ""சாரட்"" வண்டியில் பஸீர் அவர்களை ஊர்வலமாக அழைத்துச் செல்வார்கள். ”

நிகரி இதழ் ஒன்றில் மெல்லத் தமிழினியில் லக்ஸ்மன் கதிர்காமரைப் பற்றிக் குறிப்பிட்டிருந்த பத்தி என்னைச் சற்று யோசிக்க வைத்தது. அதாவது லக்ஸ்மன் கதிர்காமரின் பாட்டன் எம்மிடம் இருக்கின்றாரோ என்ற யோசனையைத் தவிர வேறொன்றுமில்லை. அவர் வேறு எங்குமில்லை. முஸ்லிம் காங்கிரஸினுள் தான், அவர் முஸ்லிம் காங்கிரஸின் வளர்ச்சிக்காக உடல்ரீதியாகவோ, பொருளாதா ரீதியாகவோ எவ்வித தியாகத்தினையும் செய்திராத நிலையில் இரண்டு முறை தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக நியமனம் பெற்றுள்ளார். வெறும் வாய்ப்பேச்சாளரேயொழிய லக்ஸ்மன் கதிர்காமரிடத்திலிருக்கும் கல்விசார் தகமைகள் கூட இவரிடம் இல்லை. யாரென்று அறிந்து கொள்வதற்கு ஆவலாக இருப்பீர்கள் அவர் வேறுயாருமல்ல, ஈரோஸ் இயக்கத்தில் செல்லமாக பஸீர் மாஸ்டர் என்று அழைக்கப்பட்ட சேகுதாவூத் பஸீர் அவர்கள் தான்.

முஸ்லிம் காங்கிரஸிற்காக எத்தனையோ தியாகங்களைச் செய்தவர்கள் அந்தக் கட்சியின் அரசியல் வங்குரோத்துத் தனத்தினால் அல்லது மனவளர்ச்சி போதாதவர்களின் ஆக்கிரமிப்பினால் கட்சியினை விட்டு தாமே சென்றார்கள். இன்னும் ஒரு சிலரை திட்டமிட்டு பொலிஸ்காரத்தனமாக ஓரங்கட்டினார்கள். மறு கோணத்தில் இன்னும் ஒரு சிலர் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக முஸ்லிம் காங்கிரஸினுள் சரணடைந்தார்கள், சரணடைந்தவர்களில் ஒரு சிலர் வந்த வேகத்திலே பொக்கற்றுக்களை நிரப்பிக் கொண்டு வெளியே போனார்கள். இது வேறு சங்கதி.

இவ்வாறு ஏதோ ஒரு கோணத்தில் முஸ்லிம் காங்கிரஸினுள் தந்திரமாக நுழைந்தவர் பஸீர் சேகுதாவூத் அவர்கள். இன்று அவர் ஐயாயிரம் வாக்குகளைப் பெற்று ஒரு பிரதியமைச்சராகவும் கூட நியமனம் பெற்றுள்ளமை முஸ்லிம் காங்கிரஸினுள் ஒரு உள்வீட்டுப் பூசலாக இருக்கின்றது. ஏனெனில் சென்ற பொதுத் தேர்தலில் படுதோல்வியடைந்த பஸீர் அவர்களுக்கு தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்பட்டது. இம்முறை சுமார் ஐயாயிரம் வாக்குகளினைப் பெற்ற அவருக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவி மட்டுமல்ல பிரதியமைச்சர் பதவியும் கிடைத்துள்ளது. இவ்வாறு ஏன் தனக்கு வழங்கப்பட்டது என பஸீர் சேகுதாவூத் அவர்கள் தெரிவிக்கும் காரணம், இம்முறை நடைபெற்ற பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்திலிருந்து மூன்று ஆசனங்களைப் பெறுவதற்கு நானே காரணமாகும். அது மட்டுமல்ல மட்டக்களப்பில் முஸ்லிம் காங்கிரஸ் ஒரு ஆசனத்தைப் பெறுவதற்கு தான் கடுமையாக உழைத்ததாகவும். அத்தோடு மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னாள் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வுடன் அரசியலில் சமாந்திரமாக போட்டிபோடக் கூடிய திறமை தனக்கே உள்ளதாகவும் குறிப்பிடுகிறார்.

நான் பஸீர் சேகுதாவூத் அவர்களின் பின்புலன்களை பிரேத பரிசோதனை செய்து பார்க்க விரும்பவில்லையாயினும், அவர் தன்னுடைய சொந்தப் பிரதேசமான ஏறாவூர் பிரதேச சபையினைக் கூட கைப்பற்றக் கூடிய செல்வாக்கற்றவர். அத்துடன் சுமார் ஐயாயிரத்துக்கும் குறைவான வாக்காளர்கள் ஆதரவினை மட்டுமே தனதாக்கிக் கொண்டவர். அவர் மூன்று தடவைகள் பாராளுமன்றம் சென்றுள்ளார். அம்மூன்று தடவைகளும் பின்கதவாலேயே உட்பிரவேசித்துள்ளார். பஸீர் சேகுதாவூத் அவர்கள் முஸ்லிம் காங்கிரஸிற்கு உடல்ரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ எத்தகைய உழைப்பினையும் செய்யவில்லை. மாறாக தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அவர் முஸ்லிம் காங்கிரஸில் உட்புகுந்து அந்த. பாதுகாப்பினை நிரந்தரமாக தக்க வைத்துக் கொள்வதற்காக முஸ்லிம்களின் உரிமையினையும், பாதுகாப்பையும் பற்றி உளறுகின்றார். குறிப்பாக வடகிழக்கு முஸ்லிம்களின் விடுதலையும் உரிமையும் பஸீர் சேகுதாவுத் போன்றவர்களின் மூலம் தான் பெறப்படும் என்றால் அது நிச்சயமாக இவ்வுலகில் அல்ல. ஏனெனில் வெறும் வாய்ப் பேச்சும், போராளி என்ற ஓரங்க நாடகமும் முஸ்லிம்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு போதும் உதவப் போவதில்லை. இதனை முஸ்லிம் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மேலும் முஸ்லிம் காங்கிரஸினை ஆக்கிரமித்த பஸீர் அவர்கள் தனக்கு அரசியல் ரீதியாக சவாலாக இருப்பவர்களை மெல்ல, மெல்ல ஓரங்கட்டுவதற்கு முற்பட்டார். அவரின் திட்டமிட்ட சதிதான் ஹிஸ்புல்லாஹ்வை கட்சியிலிருந்து வெளியேற்றியமையாகும். சாராய அனுமதிப்பத்திரம் ஒன்றை ஹிஸ்புல்லாஹ் வழங்கியது குற்றம் தான். ஆனால் அதற்கு நடவடிக்கை எடுக்கும் யோக்கியம் அல்லது அதிகாரம் பஸீர் சேகுதாவூத் அவர்கட்கு எங்கிருந்து எப்போது வந்தது?


இன்னும் கொஞ்ச நாட்கள் செல்லச் செல்ல நான் தான் லக்ஸ்மன் கதிர்காமருக்கு அரசியலையும் அநுருத்த ரத்வத்தைக்கு இராணுவ ஆலோசனையினையும் வழங்கியதாக குறிப்பிடுவார் பஸீர் சேகுதாவூத் அவர்கள். அப்போது தலைவர் ரஊப் ஹக்கீம் அவர்கள் முழு மந்திரி பதவி ஒன்றினை அவருக்கு பெற்றுக் கொடுப்பார். பஸீர் அவர்கள் முழு மந்திரிப் பதவியினை பெற்ற வேகத்திலேயே முஸ்லிம் மக்களின் விடுதலையினையும் பெற்றும் கொடுப்பார்கள். அப்போது முஸ்லிம் மக்களும் குதிரைகள் பூட்டிய "சாரட்"" வண்டியில் பஸீர் அவர்களை ஊர்வலமாக அழைத்துச் செல்வார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# விடுபட்டுப் போய்விடக் கூடாத சில விடயங்கள்

சி. சகாதேவன்

# புலிகளுடன் பேசுவது எப்படி? தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்பது எப்படி?



## மிக முக்கியமான ஒரு விடயம் தொடர்பான சில ஒழுங்குமுறைகள் பற்றிய ஒரு சிந்திப்பு

சமாதானத்தை எப்படியாவது முன்னெடுக்கவிரும்பும் ஒரு சிங்கள நண்பர் கேட்டார் ''தங்கள் மீதுள்ள தடைகளை நீக்காமல் புலிகள் பேச வரமுடியாதா?" 'அப்படி வந்தால் அதிகம் பிரச்சினை இருக்காதே" என்ற தொனிப்படத்தான் அவர் அந்தக் கேள்வியைக் கேட்டார்.

நான் அவரிடம் ஒரு விடயத்தை மிகத் துல்லியமாக எடுத்துச் சொன்னேன். "தமிழர்கள் பிரச்சினையை இன்று புலிகளுடன் தான் பேச வேண்டும் என்ற நிலை எப்படி ஏற்பட்டது? அதைப்பற்றி யோசிக்க வேண்டாமா?" என்றேன்.

வரலாறு மீளோட்டம் செய்தது.

ஜே. ஆர். ஜெயவர்த்தனா காலத்தில், பாராளுமன்றத்துக்குள் வைத்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாத, தீர்ப்பதற்கு முடியும் என்று கூடக்காட்டமுடியாத ஒரு நிலை ஏற்பட்டது. அதற்கு ஒரு காரணம், 6வது அரசியல் யாப்புத் திருத்தம். இலங்கையின் ஒற்றையாட்சியை இறைமையை, பிரிவினைக் கோஷமில்லாது ஏற்க வேண்டும் என்ற சட்ட ஒழுங்கு நிர்ப்பந்தம், ஏற்பட்ட பொழுது, தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றத்தில் இடம்பெற முடியாத நிலை ஏற்பட்டது.

அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் முற்று முழுதாக சென்னையில் தங்க வேண்டியதற்கான அரசியற் சூழல் இதனாலேயே ஏற்பட்டது.

அதன் பின்னர் ஒரு முக்கிய நிகழ்ச்சி வந்தது.

- சர்வகட்சி மாநாடு கூட்டப் பெற்றது

- அது (இது மிகமுக்கியம்) பாராளுமன்றத்துக்கு வெளியேயுள்ள ஓர் இடத்தில் (பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில்) கூட்டப் பெற்றது.

இந்தக் கூட்டுதலில் ஒரு முக்கிய அரசியலுண்மை பதிவாகிற்று. இலங்கையில் அப்பொழுதிருந்த பாராளுமன்ற அமைப்புக்குள் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வாய்ப்பு இல்லை என்பதே அந்த உண்மை

அதன் பிறகு நடந்தவை பல....

- இந்தியா வந்தது.

- மாகாண சபைச் சட்டம் (13வது திருத்தம் வந்தது).

- வடகிழக்குக்கு மீண்டும் தேர்தல் நிர்ப்பந்திக்கப்பட்டது.

- வடக்கில் எப்படி எப்படியோ தேர்தல்கள் நடந்து முடிந்தன.

- புதிய ஒரு தமிழ்ப் பிரதிநிதித்துவப் பாரம்பரியம் உருவானது. இளைஞர் இயக்கங்கள் பாராளுமன்றத்தில் இடம்பெறத் தொடங்கின.

- இந்தப் பிரதிநிதித்துவ முறைகாரணமாக, வடக்கிலும் கிழக்கிலும் காணப்பட்ட பிரதிநிதித்துவ வேறுபாடுகள்.

இவை நடந்து கொண்டிருந்த பொழுது, தமிழரின் உரிமைகள் பற்றிய ஆயுதப் போராட்டம் புலிகளால் மாத்திரமே நடத்தப்பட்டு வந்தது.

புலிகள் முதலில் தடைசெய்யப்படவில்லை. அப்படியிருந்தும் புலிகளிலும் பார்க்க ஒரு "மிதமான" (மொடறேற்) கட்சியுடன் பேசுவது தான் நல்லது என்ற நிலைப்பாடு காரணமாக தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

அதற்கு முன்னும், பின்னும், புலிகள் அல்லாத ஆயுதந் தாங்கிய குழுக்களுடன் தொடர்புகளும், உறவுகளுமிருந்தாலும், அவற்றுடன் நடாத்தப்படும் பேச்சுவார்த்தைகள், எக்காலத்திலும் தமிழர் பிரச்சினைக்கான தீர்வுக்குரிய பேச்சுக்களாகக் கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் தான் 1994 வந்தது. புலிகளுடன் பேசியே பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற நிலைப்பாட்டைப் புதிய ஆட்சி எடுத்தது. அந்த ஆட்சியுடன் இணைந்திருந்த சக்திகளும் இதனை ஏற்றுக் கொண்டன.

அதனால் பேச்சு புலிகளுடன் தான் என்ற நிலை உருவாகிற்று.

பின்னர் யார் பேச்சுக்களை முறித்தது என்ற பரஸ்பரக் குற்றச்சாட்டுக்கள் இடம் பெற்றன.

இடையில் நடந்த கண்டித் தலதா மாளிகைத் தாக்குதல், புலித் தடையை வரன்முறையான சட்ட ஒழுங்காக்கிற்று.

சிங்கள மக்களுக்கு அரசின் ஸ்திரப் பாட்டைக் காட்ட வேண்டிய ஒரு தேவையாகவும் அது அமைந்தது.

ஆனால் அத்துடன் எல்லாம் நின்று விடவில்லை. ஆங்கில உருவகம் ஒன்றைப் பயன்படுத்திக் கூறுவதானால், பாலம் இருக்கத்தான் செய்தது, அதற்குத் கீழே தண்ணீர் தொடர்ந்து ஓடிக்கொண்டு தானிருந்தது.

ஸியாம்பொக்ஸ் பேச்சுக்கள் வந்தது. வரன்முறையான மூன்றாவது நாட்டுப் பிரசன்னம் அவசியமாயிற்று.

இந்நாட்டின் வரலாற்றிலுள்ள மிகப்பெரிய சோகம் இது தான் - இன்று இலங்கையின் இனக்குழுமப் பிரச்சினையைத் தீர்க்க, இந்த மூன்று குழுமங்களாலும் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க, பாரபட்சமற்றவர்கள் என்று கருதப்படத்தக்க எழுவர், ஐவர் மூவரே இல்லை.

இந்தப் பின்புலத்திலே தான் 2001ம் ஆண்டுத் தேர்தல் வந்தது. (அதற்கான காரணங்கள் பற்றிப் பேச வேண்டிய தேவை இந்தக் கண்ணோட்ட எடுத்துரைப்புக்கு அதிக முக்கியமாக இல்லை.)

அந்தத் தேர்தலில் தான் அரசில் அங்கம் வகித்த ஈ.பி.டி.பி. தவிர்ந்த மற்றைய இயக்கங்கள் பெரும்பாலானவையும் (புளொட் விடுபட்டுப் போனது துரதிஷ்டமானது) தமிழர் விடுதலைக் கூட்டணியும் இணைந்து ஒரு நிலைப்பாட்டை எடுத்தன.

தமிழர் பிரச்சினைக்கான தீர்வுக்கு வேண்டிய பேச்சுவார்த்தைகளைப் புலிகளுடனேயே நடத்த வேண்டும் எம்முடன் அல்ல.

இதைச் சொன்னது வெறுமனே ''இளைஞர் இயக்கங்கள் மாத்திரமல்ல" சம்பந்தனும் சொன்னார். சிவசிதம்பரமும் சொன்னார்.

இந்த நிலைப்பாட்டினடிப்படையில் பேச்சுவார்த்தை நடைபெறுவதை நோர்வே மாத்திரமல்ல, பிரிட்டன், அமெரிக்கா, இந்தியா ஆகிய மூன்று நாடுகளுமே ஏற்றுக் கொண்டன, ஒப்புதல் வழங்கின.

இந்த நிலையிலே தான் இன்று புலிகளுடன் பேச்சு நடக்கிறது.

அதாவது இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதிகள் எல்லோரும் (ஈ.பி.டி.பி, புளொட் உட்பட) புலிகளுடனேயே தமிழர் பிரச்சினை பேசித் தீர்க்கப்பட வேண்டும் என்று சொல்கின்றன.

நான் எனது நண்பருக்குச் சொன்னேன் -''இந்தச் சூழலில், இத்தகைய ஒரு நிலையில் இது தனியே புலிகளுடன் செய்யப்படும் பேச்சுவார்த்தை அல்ல: அவர்கள் தமிழர்களின் பிரதிநிதியாக உள்ளனர் என்ற நிலைப்பாட்டின் அடிப்படையில் நடத்தப் பெறும் பேச்சு இது.

அதற்கான ஒழுங்குமுறையில் பேச்சுவார்த்தை அமைதல் அவசியம்.

அவர் சற்று இளகினார். ஆனால் முற்றிலும் ஒத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

அப்பொழுது பின்வரும் விடயத்தைக் கூறினேன்.

"இந்தப் பேச்சுவார்த்தை இலங்கைத் தமிழரின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு மனப்பூர்வமான முயற்சியானால், அந்தப் பேச்சு வார்த்தைகளில் தமிழர்களை சமமான நிலையில் வைத்துப் பேசுவது சரியா அல்லது அவர்கள் சமமற்ற நிலையில் வைத்துப் பேசப்பட வேண்டுமா?"

அதற்கு அவர் இணங்கிக் கொண்டார்.

அதாவது, புலிகள் இந்தப் பேச்சுவார்த்தைகளில், இலங்கைத் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளாகப் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. இந்த நாட்டின் தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இடம். அவர்களுக்கு வழங்கப்பட வேண்டியது அரசியல் தர்மம், சர்வதேசிய நியமம்.

இந்த நிலையில், புலிகளுக்கும் ஒரு நிலை ஏற்படுகிறது. அவர்களது போராட்ட வரலாற்றின் தர்க்கத்தினுள்ளே அந்த நிலைமை உள்ளது அது இது தான்.

- புலிகள் இப்பொழுது தங்களின் அமைப்பின் பிரதிநிதிகளாக விளங்கும் அதேவேளையில் தமிழர்களின் பிரதிநிதிகளாகவும் உள்ளனர்.

- இந்த நிலையில் அவர்கள் தாங்கள் இந்த அந்தஸ்துக்கு உரியவர்கள் என்பதை செயல் விளக்கம் செய்ய வேண்டும், உணர்த்தவும் வேண்டும்.

ஆங்கிலத்திலே ஒரு தொடர் உண்டு: நீதி வழங்கப்படுவது மாத்திரமல்லாமல், வழங்கப்படுவதாகக் காட்டப்படவும் வேண்டும்.

இது சற்றுச் சிரமமான சூழ்நிலை.

தமிழர் அரசியல் பேசும் ஒவ்வொருவரும் தாங்கள் தான் புலிகளின் விருப்பைத் தெரிந்தவர்கள், விருப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் என்பதைக் காட்டிக் கொள்ள விரும்பும் காலம் இது. இந்த நிலையில் அத்தகைய, எந்த ஒரு சாய்ப்பு முயற்சிகளுக்கும் புலிகள் நடவடிக்கைகள் இடம் தராது இருப்பது முக்கியமாகின்றது.

இது இலங்கைத் தமிழர்களின் போராட்டம். அதன் முனைப்புச் சக்தி புலிகள். இது வரலாறு அவர்களுக்கு வழங்கியுள்ள அந்தஸ்து. தங்கள் விடாப்பிடியால், தீட்சண்ணியத்தால், திறனால் பெற்றுக் கொண்ட நிலை இது. பகைவரும் வியக்கும் நிலை இது. அது பேணப்பட வேண்டும். அதில் எவ்வித தளம்பலும் இருக்காது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அத்தளம் பலின்மையைக் காட்டிக் கொள்வதும் ஒரு கடமைதானே.

> இது சற்றுச் சிரமமான சூழ்நிலை. தமிழர் அரசியல் பேசும் ஒவ்வொவரும் தாங்கள் தான் புலிகளின் விருப்பைத் தெரிந்தவர்கள், விருப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் என்பதைக் காட்டிக் கொள்ள விரும்பும் காலம் இது. இந்த நிலையில் அத்தகைய, எந்த ஒரு சாய்ப்பு முயற்சிகளுக்கும் புலிகள் நடவடிக்கைகள் இடம் தராது இருப்பது முக்கியமாகின்றது.
> இது இலங்கைத் தமிழர்களின் போராட்டம். அதன் முனைப்புச் சக்தி புலிகள். இது வரலாறு அவர்களுக்கு வழங்கியுள்ள அந்தஸ்து. தங்கள் விடாப்பிடியால், தீட்சண்ணியத்தால், திறனால் பெற்றுக் கொண்ட நிலை இது. பகைவரும் வியக்கும் நிலை இது. அது பேணப்பட வேண்டும். அதில் எவ்வித தளம்பலும் இருக்காது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அத்தளம் பலின்மையைக் காட்டிக் கொள்வதும் ஒரு கடமைதானே.

## தமிழ் தேசிய ...

5ம் பக்கத் தொடர்ச்சி

பாராளுமன்றம், மாகாண சபை, உள்ளூராட்சி சபை உள்ளிட்ட அரசாங்கங்களுக்கான ஆசனங்களைப் பெறுவதற்காக தேர்தலில் நிற்பது முதல் பரந்துபட்ட வெகுஜன எழுச்சிப் போராட்டங்கள், மற்றும் ஆயுதப் போராட்டம் உள்ளிட்ட அனைத்துப் போராட்ட வடிவங்களும் அடங்கும் என்பதையும் அது புரிந்து கொள்ள வேண்டும். நாட்டின் அரசியல் சூழல், மாறிவரும் நிலைமைகளுக்கேற்ப போராட்ட வடிவங்கள் மாறுபடும் என்பதையும், அதைப் புரிந்து கொண்டு போராட்டத்தை வழி நடாத்த வேண்டும் என்பதையும் அது தெரிந்திருக்க வேண்டும். மக்களிடையே உருவாகும் முரண்பாடுகளைக் கையாள்வதிலும், முரணற்ற ஜனநாயகத்தை கடைப்பிடிப்பதிலும் அது மிகவும் கவனமாக செயற்படுவதாக அமைய வேண்டும்.

இந்த வகையில் போராட்டத்தை நடாத்துவதற்குரிய ஆற்றல் கொண்டதாக அந்த அமைப்பு அமைய வேண்டும்.

இன்று சமாதான நிலைக்கான எழுச்சி வளர்ந்திருக்கிற சூழலில் ஆயுதப் போராட்ட வடிவம் ஓய்வு நிலைக்குப் போவதும் வெகுஜனப் போராட்டம் எழுச்சி பெறுவதும் இயல்பானதே. இதனால் தான் ஒரு வெகுஜன மயப்பட்ட கட்சியின் அரசியல் வழிநடாத்துகை அவசியம் என்று பலராலும் வலியுறுத்தப்படுகிறது. ஆனால் அதற்காக ஒட்டு வேலைகள் செய்து அதனை உருவாக்குவது பயனற்ற ஒரு வேலையாகவே அமையும். ஆக, இன்று தேவைப்படுவது ஒரு வெகுஜன அரசியல் அமைப்பை உருவாக்கும் பணி. அரசியலாளர்கள் மேற்கூறிய விடயங்களை கணக்கிலெடுத்து அதனை ஆற்ற முன்வரவேண்டும். அதற்கு ஒரு தேர்தல் கூட்டமைப்போ, வெகுஜன அணிகளின் கூட்டோ பெரிய பயன்தரப் போவதில்லை.

மாறாக, இந்த அமைப்புகள் அனைத்தையும் அரசியல் ரீதியாக ஒன்று திரட்டும் நோக்குடன் ஒரு அரசியல் அமைப்பு புதிதாக உருவாக்கப்பட வேண்டும். இவ்வமைப்புகள் ஒவ்வொன்றிலுமுள்ள இந்தச் சிந்தனைகளை கொண்ட தலைவர்கள் ஒன்று சேர்ந்து இதைச் செய்ய வேண்டும். இவர்கள் உருவாக்கும் இந்த வெகுஜன அரசியல் அமைப்பு முழு தேசத்தையும் இணைக்கவல்ல வேலைத்திட்டத்தை தயார் செய்ய வேண்டும், தனது கொள்கைப் பிரகடனத்தை வெளியிட வேண்டும். இந்தக் கொள்கைப் பிரகடனமும் வேலைத் திட்டமும் பரவலாக விவாதிக்கப்பட்டு செம்மைப்படுத்தப்பட வேண்டும். இந்த விவாதத்தை வெளிப்படையாகவும், நல்ல திட்டமொன்றை உருவாக்கும் நோக்குடனும் சுதந்திரமாக நடத்த அனுமதிக்க வேண்டும். இதன் மூலம் சரியான ஒரு வேலைத்திட்டம், கொள்கைப் பிரகடனம் என்பவற்றை வந்தடைய வேண்டும். இவ் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அமைப்பு உருவாக்கப்பட்டு, அதைச் செயற்படுத்த உகந்தவிதத்தில், நாடு பரந்த செயலணிகளை உருவாக்க வேண்டும். இதன் மூலமே ஒரு பரவலான வினைத்திறனுள்ள ஆற்றல் மிக்க தேசிய அரசியல் இயக்கம் உருவாகுவதற்கான ஆரம்பம் கைகூட முடியும். வேறு வழிகளிலான முயற்சிகள் பெறும் பயனற்ற பிரயத்தனங்களாகவே போய் முடியும்.

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"பெரஹரா" செல்லும் காலம் நெருங்கும் போது பெரஹராவிற்கு தலைமை தாங்கிச் செல்ல அழைப்பது பாரம் சுமக்கும் யானைகளையல்ல, உயர் குல யானைகளையேயாகும். நீண்ட தந்தங்களையுடைய யானைகளையேயாகும். அதையும்விட புனிதமானவற்றைச் சுமந்து செல்வதற்காக வேண்டி அழைக்கப்படுவது பண்டார நாயக்காவினர் போன்ற உயர்குலத்து யானைகளையேயாகும். ஜெயராஜ் ஜனாதிபதி அபேட்சகராக அநுர பண்டாரநாயக்காவைக் குறிப்பிட்டதும், எதிர்க்கட்சித் தலைவராக மகிந்த ராஜபக்ஷவைக் குறிப்பிட்டதும் புனிதமாவற்றைச் சுமக்கும் யானைகளை சாதாரண பாரங்களைச் சுமக்க வைக்க வீதிக்குக் கொண்டுவர முடியாதென்பதை நன்கு அறிந்து வைத்துள்ளதன் காரணத்தினாலாக வேண்டும்.



# மகிந்த ராஜபக்ஷ வரவும் சவால்களும்

- சுனந்த தேசப்பிரிய

கிடைக்க வேண்டிய இடம் அவருக்குச் சற்று தாமதமாகவே கிடைத்தது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மாற்றுத் தலைமைத்துவத்தைப் பெற நெடுங்காலங்கள் அவருக்குக் காத்திருக்க வேண்டி வந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை உயர் குலத்தவர்களாகிய பண்டார நாயக்காவினரிடமிருந்து பிரித்தெடுப்பதற்குத் தகுதி வாய்ந்த தலைவர்கள் பலர் அந்தக் கட்சியினுள்ளேயே இருந்து வந்தனர். இருந்தாலும் பண்டாரநாயக்க குடும்பத்தினரின் தலைவிதி அவர்கள் எல்லோரினது தலைவிதியினையும் விட பலம் வாய்ந்ததாகவே இருந்து வந்துள்ளது. கணவரிடமிருந்து மனைவிக்கும், அவரிடமிருந்து மகளுக்கும், மகளிடமிருந்து சகோதரனுக்கும்... தலைவிதி இவ்வாறே எழுதப்பட்டிருந்தது. இந்த குடும்பக் கலாசாரத்திற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் பண்டாரநாயக்கவினர் மட்டுமல்ல, சமுதாயமும் தான். அந்தத் தலைமைத்துவத்தை அவர்களிடமே அது எதிர்பார்த்து நின்றது. காரணம் எமது சமுதாயத்தின் அடிமைத்துவ மானசீகப் போக்கு இன்னும் பலம் கொண்டதாகவே இருந்து வருகின்றது.

சாதாரணமாக, சந்தேகத்திற்கு இடமின்றி அடுத்த தலைமைத்துவத்திற்கான தலைவிதி அநுர பண்டார நாயக்காவிற்கே உரியதாக இருந்தது. தற்போதைய எதிர்க்கட்சித் தலைவராக மகிந்த ராஜபக்ஷவை நியமிக்க வேண்டும் என்று முதலாவது வேட்டை வைத்த ஜெயராஜ் பெர்னாண்டேபுள்ளேயும் கூட தேர்தல் செயற்பாடுகளின் போது கூறி வந்தது அடுத்த ஜனாதிபதி அபேட்சகர் அநுர பண்டார நாயக்காவென்றேயாகும். "பெரஹரா" செல்லும் காலம் நெருங்கும் போது பெரஹராவிற்கு தலைமை தாங்கிச் செல்ல அழைப்பது பாரம் சுமக்கும் யானைகளையல்ல, உயர் குல யானைகளையேயாகும். நீண்ட தந்தங்களையுடைய யானைகளையேயாகும். அதையும்விட புனிதமானவற்றைச் சுமந்து செல்வதற்காக வேண்டி அழைக்கப்படுவது பண்டார நாயக்காவினர் போன்ற உயர் குலத்து யானைகளையேயாகும். ஜெயராஜ் ஜனாதிபதி அபேட்சகராக அநுர பண்டாரநாயக்காவைக் குறிப்பிட்டதும், எதிர்க்கட்சித் தலைவராக மகிந்த ராஜபக்ஷவைக் குறிப்பிட்டதும் புனிதமாவற்றைச் சுமக்கும் யானைகளை சாதாரண பாரங்களைச் சுமக்க வைக்க வீதிக்குக் கொண்டுவர முடியாதென்பதை நன்கு அறிந்து வைத்துள்ளதன் காரணத்தினாலாக வேண்டும்.

உண்மையாகவே கூறுவதென்றால் 1994ம் ஆண்டுக்கு முந்திய காலகட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர் மகிந்த ராஜபக்ஷவென்றே கூற வேண்டும். கதிர்காமம் வரையிலான பாதயாத்திரையை ஒழுங்கு படுத்தியவரும், பொதுமக்கள் கோஷத்தை ஒழுங்கு படுத்தியவரும் மகிந்த ராஜபக்ஷவே. ஜெனீவாவில் உள்ள மனிதஉரிமை ஆணைக்குழுவின் முன்னே செல்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டவரும் அவரே. இருந்தாலும் 1994ம் ஆண்டு அரசாங்கத்தை உருவாக்குபவராக சந்திரிகா பண்டாரநாயக்காவே இருந்தார். சந்திரிகா அன்று தொட்டு மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவே செயற்பட்டு வந்தார். அந்த வகையில் ஐக்கிய தேசிய முன்னணிக்கு முதலில் செல்ல வேண்டியவர் மகிந்த ராஜபக்ஷவேயாகும். அந்தளவுக்கு சந்திரிகா மகிந்தாவைத் துன்புறுத்தி வந்தார்.

அதிகாரம் தமது கைகளில் இல்லாதிருக்கும் சந்தர்ப்பங்களில் இடதுசாரிகளைக் கொண்டும் முற்போக்காளர்களைக் கொண்டும் ஆட்சிக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுப்பதிலும், ஆட்சி அதிகாரம் கைக்கு வந்ததின் பின்னர் அவர்களது சிறகை ஒடிப்பதிலும் பண்டார நாயக்காவினர் இயற்கையிலேயே திறமைசாலிகளாவர். இன்னொரு உயர் குலக் குடும்பத்தினர் ஒருவர் அவ்விடத்தில் இருந்தாலும் மகிந்தவுக்கு நேர்வதும் அதுவேயாகும். உயர் குலச் சிந்தனையில் சரி சமம் என்றொரு நிலை இல்லை. இருப்பது வேலை வாங்குவது மட்டுமாகும்.

ஒரு வேளை தற்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை அவருக்குப் பெற்றுக் கொடுப்பதற்கான இரகசியமும் அதுவாக இருக்கலாம். தற்போது பொதுசன ஐக்கிய முன்னணிக்கு உயிர் கொடுக்கும் திறன் கொண்ட ஒரே தலைவர் அவரே. அடுத்த பொதுத் தேர்தல் வரும் வரை பாரம் சுமப்பதற்கு மிகப் பொருத்தமான யானையும் அவரே. மறு புறத்தில் அவர் உயர்குல அரசியல் தலைமைத்துவத்துக்கு எதிராக சவால் விடும் ஒரு அரசியல்வாதியுமல்ல. அவர் "பெரஹரா"வில் செல்லும் ஒரு யானையாயினும் புனித வஸ்துக்களைச் சுமக்க வேண்டுமெனக் கோரும் யானையுமல்ல.

இருந்தாலும் இந்தப் பதவியை மகிந்த ராஜபக்ஷவுக்குப் பெற்றுக் கொடுக்க நேர்ந்தது சந்திரிகா பண்டாரநாயக்கா பெற்ற ஒரு தோல்வியாகும். காரணம் அவரை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிலிருந்து புறக்கணிக்கும் அவரது முயற்சி தோல்வியுற்று, தற்போது மகிந்தாவின் செயலாற்றல்மிக்க திறனில் சந்திரிகாவிற்குத் தங்கி நிற்க நேர்ந்துள்ளமையே. அடுத்தது எதிர்க்கட்சித் தலைமைப் பதவி பாராளுமன்றச் சம்பிரதாயத்தின்படி பிரதம மந்திரிப் பதவிக்கு அடுத்ததாக ஆவதினாலுமாகும். பொதுசன ஐக்கிய முன்னணியின் அரசியல் கோஷங்களும் ஒழுங்காளருக்குமான சந்தர்ப்பம் தற்போது அவருக்குக் கிடைத்திருப்பதினாலுமாகும்.

மகிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைமைப் பதவிக்கு நியமிக்கப் பட்டமை, செயற்திறன்மிக்க எதிர்கட்சியொன்று உருவாகக் காரணமாக அமைவதினால், ஆரோக்கியமான ஆட்சி அதிகாரம் என்ற கோணத்தில் பார்க்கையில் நல்லதொரு முன்னேற்றமென்றே கூற வேண்டும். சென்ற காலம் முழுக்க அவர் ஜனநாயக மறுசீரமைப்புக்களைக் கட்டியெழுப்புவதற்காக வேண்டிய பொதுமக்கள் செயற்பாடுகளுக்கு பூரண ஆதரவை வழங்கியவர். பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினுள் இருந்து கொண்டே, அந்த அரசாங்கத்தை விமர்சனம் செய்யும் பொதுமக்கள் செயற்பாடொன்றுடன் இணைந்து சிறிதளவேனும் தனது ஒத்துழைப்பை வழங்கிய அரசியல்வாதியும் அவராவார். இருந்தாலும் சென்ற பொதுத் தேர்தலின் போது முக்கியமாக பெலிஅத்த தொகுதியில் தேர்தல் வன்முறைகளை முன்னெடுத்ததாக அவருக்கு எதிராக ஒரு சில குற்றச்சாட்டுக்களும் உண்டு. தேர்தல் தினமன்றும் தேர்தல் ஊழல்களில் ஈடுபட்டதாக அவர் குற்றம்சாட்டப்பட்டார். எதிர்க்கட்சித் தலைவர் பதவி அவருக்குக் கிடைத்த சந்தோஷத்தின் காரணத்தால் தென் மாகாண சபையின் ஒரு அமைச்சரும் மகிந்த ராஜபக்ஷவின் கிட்டிய நண்பருமான "சண்பு மல்லீ"" என்பவர் பெலிஅத்தப் பகுதியில் பேயாட்டமாடியதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. தேர்தல் ஊழல்கள், தேர்தல் வன்முறைகள் சம்பந்தமான அவருக்கு எதிரான குற்றச் சாட்டுகளை அவர் நிராகரித்திருந்தாலும் முழுதாகவே மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.



மகிந்த ராஜபக்ஷ அன்று ஜனநாயக மறுசீரமைப்புகளுக்காக வேண்டி முன்னின்றாலும், அன்றைய காலகட்டத்தில் கூட இனங்களினுடையே ஒற்றுமைக்காக உறுதியாக முன்னிற்கவில்லை. பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்கொண்டுவந்த அரசியல் யோசனைகளுக்கு முன்னிற்க விரும்பாத பிரதான அரசியல்வாதியுமாக இருந்தவர் அவரே. அவர் யுத்தத்திற்காக முன்னிற்காதது போன்றே சமாதானத்திற்காக வேண்டி முன்னிற்கவும் இல்லை. அதற்குக் காரணம் சந்திரிகாவின் சமாதானப் புறாவான மங்கள சமரவீரவுடன் அவருக்கு இருந்த தனியான மோதல்களையும்விட மகிந்தாவின் அரசியல் கொள்கையேயாகும்.

தற்போதைய அரசியல் பின்னணியில் பொதுசன ஐக்கிய முன்னணிக்குத் தேவையாவது ஜனநாயக அரசியல் மறுசீரமைப்புகளுக்குத் தேவையான ஒரு தலைமைத்துவமேயாகும். கடந்த இரண்டு வருடகாலங்களாக இந்நாட்டு சிவில் பிரஜைகளினால் முன்கொண்டுவரப்பட்ட பல ஜனநாயக மறுசீரமைப்பு நடவடிக்கைகள் சட்டமாவதற்கான நிலையில் ஆயத்தமாக உள்ளன. 17வது சீர்திருத்தத்தைப் பூரணப் படுத்தல், ஊடகத்துறை மறுசீரமைப்புக்கள் சில அவற்றுள் முக்கியமானவைகளாகின்றன. பொதுசன ஐக்கிய முன்னணி இந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக வேண்டி முன்நிற்க வேண்டும். முக்கியமாக உத்தேச ஊடகத்துறை மறுசீரமைப்புகளுக்கு ஒத்துழைப்பை வழங்குவதற்கு அண்மைக் காலத்தில் பொதுசன ஐக்கிய முன்னணி ஊடகத்துறையோடு கொண்டிருந்த பகைமை நிலையில் இருந்தும் விலகிக் கொள்ளல் வேண்டும். அதற்கான திறன் மகிந்த ராஜபக்ஷவிடமே உள்ளது.

எதிர்கட்சித் தலைவர் என்ற முறையில் மகிந்த ராஜபக்ஷ முகம் கொடுக்கும் முக்கியமான சவால் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு உயிர் கொடுப்பதற்கு அடுத்தபடியாக சமாதான முயற்சிகளேயாகும். உண்மையாகவே இன்று ஐக்கிய தேசிய முன்னணியின் கையிலுள்ள சமாதானத்திற்கான, ஜனநாயகத்திற்கான கோஷங்கள் 1994ம் ஆண்டில் இருந்தது பொதுசன ஐக்கிய முன்னணியின் கைகளிலேயே. மகிந்த ராஜபக்ஷ அன்று ஜனநாயக மறுசீரமைப்புகளுக்காக வேண்டி முன்னின்றாலும், அன்றைய காலகட்டத்தில் கூட இனங்களினுடையே ஒற்றுமைக்காக உறுதியாக முன்னிற்கவில்லை. பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்கொண்டுவந்த அரசியல் யோசனைகளுக்கு முன்னிற்க விரும்பாத பிரதான அரசியல்வாதியுமாக இருந்தவர் அவரே. அவர் யுத்தத்திற்காக முன்னிற்காதது போன்றே சமாதானத்திற்காக வேண்டி முன்னிற்கவும் இல்லை. அதற்குக் காரணம் சந்திரிகாவின் சமாதானப் புறாவான மங்கள சமரவீரவுடன் அவருக்கு இருந்த தனியான மோதல்களையும்விட மகிந்தாவின் அரசியல் கொள்கையேயாகும்.

இருந்தாலும் இலங்கை முகம் கொடுத்து வரும் தற்போதைய அரசியல் சந்தர்ப்பங்களினால் எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவுக்கு முன்பு போன்று நழுவிச் செல்வதற்கான சந்தர்ப்பங்கள் மீதமாக இல்லை என்றே கூற வேண்டும். மிக வேகமாக முன்னோக்கிச் செல்லும் சமாதான முயற்சிகள் எமது கண்களின் முன்னே தென்படுகின்றன. நாட்டின் முக்கியமான பிரச்சினையாக இருப்பதும் யுத்தமா சமாதானமாக என்ற கேள்விகளே. சமாதான முயற்சிகளுக்கு வார்த்தைகளால் ஆதரவை வழங்கிவிட்டு, பின்னால் வந்து கத்தியால் குத்தும் கொள்கையினால் (ஐக்கிய தேசிய கட்சிக்குப் போன்றே) பொதுசன ஐக்கிய முன்னணிக்கும் கிடைக்கும் நன்மைகள் எதுவுமில்லை. எதிர்காலம் மகிந்த ராஜபக்ஷவிடம் எதிர்பார்த்து நிற்பது சமாதானப் பார்வையாளரின் பாத்திரமொன்றையன்று செயற்பாடுமிக்க சமாதானத்திற்கான அரசியல்வாதியின் முயற்சிகளையே.

பொதுசன ஐக்கிய முன்னணி தற்போதும் கூட இந்நாட்டின் மாற்று அரசாங்கமே. அது எமது விருப்பத்துக்குப் புறம்பாகவுள்ள யதார்த்தமுமாகும். ஆதலால் அது செயற்பட வேண்டியதும் மாற்று அரசாங்கமொன்றிற்குப் பொருத்தமான முறையிலேயே. அதற்கான "ஸ்டியரிங்"" தற்போது இருப்பது மகிந்த ராஜபக்ஷவின் கைகளில் அதற்காக வேண்டி அவர் பல பாதைகளைத் தாண்டிச் சென்றார். பொய்குழிகளில் இருந்தும் தப்பித்துக் கொண்டார். ஒரு நேரம் அவர் மேலும் செல்ல வேண்டிய பாதை இன்னும் கஷ்டமானதாக இருக்கலாம், அதற்குக் காரணம் பொதுசன ஐக்கிய முன்னணியில் நிலவும் முரண்பாடான சிக்கலான நிலைகள் மட்டுமல்ல. ஒரு நாடென்ற வகையில் இலங்கை தற்போது முகம் கொடுத்திருப்பது பொருளாதாரக் கஷ்டத்தின் உச்ச நிலையிலேயேயாகும். இதிலிருந்தும் எவருக்கும் தனித்தனியாக கரைசேர முடியாது. தமது அரசியல் தனித்துவங்களைப் பாதுகாத்துக் கொண்டு குறுகிய கட்சி நோக்கங்களில் இருந்தும் விலகி நாட்டை முன்னெடுத்துச் செல்வதே மகிந்த ராஜபக்ஷ முகம் கொடுத்துள்ள முக்கிய சவாலாகும்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# படைகளை விட்டு இராணுவத்தினர் தப்பிச் செல்வது ஏன்?

- எஸ்.எம்.ஜி

நன்கு பயிற்சியளித்து வசதிகளும் செய்து கொடுத்திருக்கும் ஆயுதப் படைகளில் சேர்ந்தவர்களில் இருபத்தைந்தாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் படைகளை விட்டுச் சொல்லிக் கொள்ளாமல் வெளியேறித் தப்பிச் சென்றிருக்கிறார்கள். இவர்கள் ஏன் எதற்காகத் தப்பிச் சென்றார்கள்?

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனைக்கு இது பெரும் கவலையைக் கொடுத்திருக்கிறது. படைகளிலிருந்து இப்படி ஏன் இவர்கள் தப்பிச் செல்கிறார்கள் என்பது பற்றி ஆராய வேண்டியிருக்கிறது என்று அமைச்சர் ஒரு வைபவத்தில் பேசுகையில் கவலையோடு கூறியிருக்கிறார்.

முன்னரெல்லாம் பொலிஸ் வேலைக்கு ஆட்களைத் தெரிவு செய்வதானாலும் ஆயுதப் படைகளுக்கு ஆட்களை எடுப்பதானாலும் அவர்களின் கல்வித் தராதரம் உடல் கட்டு, ஆரோக்கியம் ஆகியவற்றை மட்டுமல்ல அவர்களுடைய குடும்பப் பாரம்பரியம், பழக்க வழக்கம், ஒழுக்கம் என்பவையும் கவனத்தில் கொண்டு ஆராய்ந்த பின்னரே சேர்த்துக் கொள்வர்.

இப்பொழுது கல்வித்தரம் என்பது சிங்களம் எழுத, வாசிக்கத் தெரிந்தால் போதும, குடும்பப் பாரம்பரியமோ, உடல் ஆரோக்கியம், உடல்கட்டு, இவர் குற்றச் செயல்களில் ஈடுபட்டவரா என்பன போன்ற விசாரணைகள் எதுவும் தேவையில்லை.



முன்னர் ஒரு தடவை பொலிஸ் வேலைக்கு புதிதாக ஆட்களைத் திரட்டும் நேர்முகப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒரு இளைஞனின் மார்பு அளவு எடுக்கப்பட்டது. தேவையான அளவு இல்லாததால் வீட்டுக்குப் போய் நன்கு பயிற்சி எடுத்து இன்னொரு சந்தர்ப்பம் வந்தால் வா என்று நேர்முகப் பரீட்சை நடத்திய பொலிஸ் அத்தியட்சகர் சிட்னி டி.சொய்சா திருப்பி அனுப்பி விட்டாராம்.

அவன் சென்று சிறிது நேரத்தில் ஒரு அரசியல்வாதியின் சிபார்சுக் கடிதத்துடன் மீண்டும் வந்தானாம். கடிதத்தை வாங்கிப் பார்த்த சிட்னி சொய்சா அந்தக் கடிதத்தை அவன் மார்பின் மீது வைத்துச் சேர்த்து நாடாவினால் மீண்டும் அளவெடுக்கச் சொன்னாராம். பின்னர் அந்தக் கடிதத்தைச் சேர்த்து அளந்தாலும் தேவையான அளவு இல்லை. இதை அந்த அரசியல்வாதியிடம் போய்ச் சொல்லு என்று அந்த இளைஞனைக் கலைத்து விட்டாராம்.

இப்பொழுது அரசியல்வாதி சொன்னால் போதும் படையில் தகுதி பற்றிய சிந்தனையே இல்லாமல் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

முன்னாள் பிரதமர் இரட்னசிறி கதிர்காமத்திலிருந்து படைக்குப் பத்தாயிரம் பேரைத் திரட்டுவதற்கு பாத யாத்திரை சென்றதிலிருந்தே படைக்கு ஆட்கள் தான் தேவை, பொருத்தமான, தகுதியான ஆட்களைப் பற்றிக் கவலை இல்லையென்பது தெறிகிறதல்லவா? இனப்பிரச்சினையில் அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்ட காலத்தில் காவல் துறையையும் இராணுவத்தையும் சேர்ந்தவர்கள் சிலர் தமிழ்ப் பகுதிகளில் கொள்ளைகளிலும் ஈடுபட்டுப் பொருள் தேடியதையும் கண்டு படைகளில் சேர முன்வந்தவர்கள் பலருண்டு.

வன்னியிலும் மற்றும் பகுதிகளிலும் மக்கள் போக்குவரத்துக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதும் 'பாஸ் நடைமுறையும்' கொண்டு வரப்பட்டது. இந்த பாஸ் வழங்குவதிலும் ஆட்களுக்குப் பிணை நிற்பதிலும் சம்பாத்தியம் பண்ணிய புண்ணியவான்களைப் பார்த்தும் படைகளில் சேர்ந்தவர்களிருக்கிறார்கள்.

பணம் சம்பாதிப்பது மட்டுமல்லாது வடக்கிலும் கிழக்கிலும் எவரையும் எதுவும் செய்யலாம். கேட்பதற்கு எவருமில்லை என்ற மனப்பான்மையிலும் படையில் சேர்ந்தவர்களிருக்கலாம்.

ஆனால் விடுதலைப் புலிகளின் கொடூரமான தாக்குதலும் மனித உரிமைக் குழுக்களின் தீவிர கண்காணிப்பும் படைகளிலிருந்து அனுபவிக்கலாம் என்று எதிர்பார்த்த சுகம் சுகமாக இல்லையென்பதால் இவற்றை அந்த ஆயுதங்களை வைத்தே அனுபவிக்கலாம் என்று இவர்கள் படைகளிலிருந்து தப்பியோடி நாட்டில் சுகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தப்பியோடிய படையினரைத் தேடிப்பிடித்து அவர்களையும் அவர்கள் கொண்டு புறப்பட்ட ஆயதங்களையும் கைப்பற்ற வேண்டும்.

ஆயுதப் படைகளில் சேர்ந்தவர்கள் தங்கள் வருமானத்துக்கு அதிகமாகச் சேர்த்த சொத்துக்களைக் கண்டு பிடித்து அவை எப்படிப் பெறப்பட்டன என்பதை அறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

படைக்கு ஆட்களைத் திரட்டும் போது பழைய மரபைப் பேண வேண்டும்.

இந்த நடவடிக்கைகளால் நாட்டுக்கும் நாட்டின் பாதுகாப்புப் படைகளுக்கும் நற்பெயர் கிடைக்க வழி பிறக்கும்.

நாட்டு மக்களும் நிம்மதியாக வாழ முடியும். முடியுமா?

# தொடரும் கொள்ளைகள் பின்னணி என்ன?

- கோபு

அநுராதபுர வங்கிக் கொள்ளை, பண்டாரவளை நகைக் கடைக் கொள்ளை, மன்னார் தேசிய சேமிப்பு வங்கி கொள்ளை. பின்னணியில் உள்ள சக்தி எது?

சில தினங்களுக்கு முன் அநுராதபுரத்தில் மக்கள் வங்கிக் கிளையை உடைத்து நகைகளும் ரொக்கப் பணமுமாக கோடிக்கணக்கில் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த பத்தாம் திகதி இரவு மட்டும் பண்டராவளையில் ஒரு நகைக் கடையில் இரவு கொள்ளையர் புகுந்து ஆறு லட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளைக் கொள்ளை அடித்துச் சென்றிருக்கின்றனர்.

மன்னாரில் இதே இரவு தேசிய சேமிப்பு வங்கியில் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. எத்தனை ரூபாய் பெறுமதியான கொள்ளை போனது என்பது சரியாகத் தெரியவில்லை. இதேவங்கியில் கடந்த மாதம் 39 ஆயிரம் ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதே பத்தாம் திகதி இரவு மாத்தறையிலிருந்து கொழும்பு நோக்கி வந்த இன்ரர்சிற்றி பஸ் வண்டியை பண்டாரகம வெலிகம என்ற இடத்தில் வழிமறித்த கொள்ளையர் பயணிகளிடமிருந்து ஐந்து லட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள், பணம் ஆகியவற்றைக் கொள்ளையடித்தனர்.

இவை கடந்த சிலதினங்களுக்குள் நடந்த கொள்ளைச் சம்பவங்கள்.

இக்கொள்ளைகள் சம்பந்தமாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

வங்கிக் கொள்ளைகளும் தனியார் நிறுவனங்களில் கொள்ளைகள் அதிகரித்து வருவதும் நாட்டின் அமைதிக்கு நல்ல அறிகுறிகளல்ல.

1970 - 71 ஆம் ஆண்டுகளிலும் இது போன்ற கொள்கைகள் நடைபெற்றதை அன்றைய செய்திப் பத்திரிகைகள் வெளியிட்டிருந்தன.

அன்றைய காலகட்டத்தில் ஆயுதப் புழக்கம் நாட்டில் அரிதாகவே இருந்தது. சில பொலிஸ்காரர்களிடம் அன்று துப்பாக்கிகளும் கொள்ளையடிக்கப்பட்டன.

இப்பொழுது நாட்டில் சட்டவிரோத ஆயுதங்கள் தாராளமாகப் புழக்கத்தில் இருக்கின்றன

"பயங்கரவாதத்தை"" எதிர்த்து "தேசாபிமானத்துடன்"" படைகளில் சேர்ந்து போராடுவதற்காகத் தங்கள் உயிரையும் துச்சமென மதித்து இராணுவத்தில் சேர்ந்த இருபத்தையாயிரம் பேர் படைகளில் கொடுத்த ஆயுதங்களுடன், தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத் தப்பியோடி நாட்டில் நடமாடித்திரிகின்றனர்.

நாட்டில் நடந்த பல கொள்ளைச் சம்பவங்கள், கொலைகள் மற்றும் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டதாக அகப்பட்டவர்களில் தப்பியோடிய படையினர்களும் அதிகம் அடங்குவர்.

பாதாள உலகக் கோஷ்டியென்று கூறப்படும் தாதாக்களுடன் தப்பியோடிய படையினர்களுக்கும் தொடர்பிருப்பதாக புலனாய்வுப் பிரிவினர் சில வழக்குகளில் தெரிவித்திருக்கின்றனர்.

இவர்கள் தவிர புலிகளை எதிர்த்து இறுதிவரை போராடுவோம் என்று அறிவித்தும் போர்க் குரல் எழுப்பிக் கொண்டிருப்பவர்களும் உள்ளனர்.

இவர்களோடு தவிர முன்னர் ஈழவிடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள் தங்களுக்குள்ளேயே முட்டி மோதிப் பிரிந்து பின்னர் ஆட்சி பீடத்திலிருப்பவர்களுக்கு ஆதரவாகவும் அரச படைகளுக்குத் துணையாகவும் இருப்பவர்கள் புலிகளின் கையில் ஆயுதம் இருக்கும் வரை தங்கள் கையிலும் ஆயுதம் இருக்க வேண்டியது அவசியம் என்று ஆயுதம் வைத்திருக்கிறார்கள்.

சமாதானப் பேச்சுவாத்தைக்கு முன்பாக புலிகளிடமிருந்து ஆயுதங்களைக்களைய வேண்டு மென்று குரல் கொடுப்பவர்களில் பலரும் தங்கள் கைகளில் தற்காப்புக்காக ஆயுதம் வைத்திருப்பதுடன் தங்களுக்கு ஆயுதப் படைகளின் பாதுகாப்பையும் வைத்திருக்கிறார்கள்.

லண்டனிலிருந்து வந்திருந்த முன்னாள் புரட்சித் தலைவர் ஒருவர் புலிகளை எதிர்த்துப் போரிட ஐம்பதாயிரம் வீரர்களைக் கொடுக்கத் தயார் என்று பொதுத் தேர்தல் பிரசாரத்தின் போது கூறியிருந்தார்.

இப்பொழுதும் ஐம்பதாயிரம் பேருடன் அவரது படை காத்திருக்கிறதோ என்னவோ?

விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்திப் போராடுவதற்கு முன்னர் 1958 ஆம் ஆண்டிலிருந்து 1983 ஆம் ஆண்டு வரை இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இனக்கலவரங்களைத் தூண்டி விட்டு ஆட்சி பீடத்திலிருந்தவர்களின் துணையுடன் தமிழ் இன ஒழிப்பில் ஈடுபட்ட பேரினவாதிகள் இப்பொழுது புலிகளின் கையில் ஆயுதம் இருப்பதால் இதைச் செய்ய முடியாமலுள்ளது.

ஜனநாயகத்துக்குத் திரும்பியும் ஆயுதம் ஏந்தி நிற்கும் தமிழ்க்குழுக்களும் ஆயுதப் படையினரின் பாதுகாப்புடன் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தி வந்தனர். இவர்களுக்கும் இன்றைய சமாதான முயற்சி சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

கலகங்களைத் தூண்டி விட்டுத் தங்கள் காரியத்தைப் பார்க்கும் குண்டர்களுக்கும் சமாதான முயற்சிகள் தடையாக இருக்கின்றன.

இந்தக் கும்பல்கள் ஒன்றையொன்று அறிந்தும் அறியாமலும் சமாதான முயற்சிகளைக் குழப்பி நாட்டின் அமைதியைக் கெடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கக் கூடும்.

எப்படியும் நாட்டில் தொடர்ந்து அதிகரித்து வரும் கொள்ளைச் செயல்களை சாதாரண சம்பவங்களாகக் கருதாமல் இதற்கும் பின்னணி இருக்கிறதா என்பதைக் கண்டறிவது அவசியக் கடமையாகும்.

அந்தப் பின்னணி அரசியல்வாதிகளா? அல்ல அரசியல் கட்சிகளா? பேரினவாத அமைப்புக்களா? என்பது கண்டறியப்பட வேண்டும். செய்வார்களா?

# சிறைக் கைதிகள் விடுதலை பூனைக்கு மணி கட்டுவது யார்?

- விஷ்ணு

மார்கழி 5 மறைந்த கையோடு மாற்றங்கள் பல இலங்கையில், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் பல திசைகளுக்கும், பல தடவைகள் பறக்கின்றார்கள், பலவற்றைப் பேசுகின்றார்கள். அனைத்து கதைகளையும் மேவுவது போல் சமாதானம் பற்றிய கதைகளே மேலோங்கியுள்ளது. சமாதானப் பேச்சுக்களை முற்கூட்டி பலதடைகள் தளர்த்தப்படுகின்ற வேளையில் அதற்குள் ஒரு முக்கியமான விடயம் அமுங்கியுமுள்ளது. அது தான் தமிழ்க் கைதிகள் விடுதலை தொடர்பான விடயம். காலத்துக்குக் காலம் போர் ஓய்வு நிலைக்குள்ளாகிறது. ஆனால் தமிழ்க் கைதிகளின் சிறைக் கூடங்கள் ஓய்வடைவதில்லை. நாட்டின் இறைமைக்கு அச்சுறுத்தலாய் செய்றபட்டார்கள் என பயங்கரவாதத்துடன் தொடர்புபடுத்தி, சோடனை செய்து அப்பாவிகளை கைது செய்வார்கள். பின்னர் அவர்கள் வழக்குத் தாக்கல்களோ, நீதி விசாரணைகளோ இன்றி வருடக்கணக்காக சிறைகளில் வாடுகிறார்கள். புலிச்சந்தேகநபரென இவர்கள் கைது செய்வதில் பத்திற்கு ஒன்பது வீதமானோர் அப்பாவிகள். கைதாகும் முக்கிய புலி உறுப்பினரை இலஞ்சம் பெற்றுக் கொண்டு இலங்கையின் கடமையுணர்ச்சி மிகு அதிகாரிகள் விடுதலை செய்து விடுவார்கள். தற்போது இலங்கையில் உள்ள சிறைகளில் எத்தனை தமிழ் கைதிகள் உள்ளனர் என்பது திட்டவட்டமாக தமிழ் தரப்பினர் யாருக்குமே தெரியாது. இதை அறிவதற்கான சகல உரிமைகளையும் உடைய அரசியல்வாதிகளோ அதைப்பற்றி அலட்டிக்கொள்வதில்லை. கைதிகள் வந்து தமக்கு வாக்குப்போடவா போகிறார்கள் என்ற எண்ணம். ஊர்ஜிதமற்ற தகவலின்படி அண்ணளவாக 3500 கைதிகளளவில் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களின் பெரும்பாலானோர் வயது, பால் வேறுபாடின்றி எந்த விசாரணைகளுமின்றி சிறைகளில் வருடக்கணக்காக வாடுகின்றனர். இவர்களுடைய விடுதலைக்காய் இவர்களே போராட வேண்டிய நிலை. அகிம்சைப் போராட்டம் நடத்தவும் சிறைச்சாலை அதிகாரிகள் அனுமதிக்கமாட்டார்கள். மாறாக அதற்கு அடி, உதைதான் விழும்.

உண்ணாவிரதப் போராட்டத்தை கூட சிலவேளைகளில் அச்சம் காரணமாக சிறைச்சாலை கூரைமீதிருந்து தான் மேற்கொள்வார்கள். இவர்களுடைய விடுதலைக்கு வழிசெய்ய வேண்டிய அரசியல்வாதிகள் ஓரிருவரைத் தவிர ஏனையோர் சிறைச்சாலை பக்கம் எட்டியே பார்ப்பதில்லை. "குமாரின் கட்சித்" தலைவர் மாத்திரம் அடிக்கடி களுத்துறை சிறைச்சாலைக்கு சென்று கைதிகளைப் பார்வையிடுவார். இவர் கூட அண்மித்த காலப்பகுதியில் உண்ணாவிரதம் இருந்தால் மாத்திரம் செல்வது என்ற நிலைக்கு வந்துவிட்டது போல் எண்ணத் தோன்றுகிறது. தமிழ் கைதிகளின் விடுதலையில் பெரும் பங்காற்ற வேண்டியவர் இவரே ஆவர். குமார் தன் காலத்தில் தமிழ் கைதிகளின் விடுதலைக்கு அயராது பாடுபட்டார் என்பதை நினைவில் நிறுத்தி இவர் செயற்பட வேண்டும். கைதிகளின் விடுதலைக்கான சட்டதிட்ட நுணுக்கங்களையும்

தொடர்ச்சி 11ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# என் கதைகள் உணர்வுகளைப் பற்றியன...

கதாசிரியர், வீணை இசைக் கலைஞர் எனப் பரவலாக எல்லோராலும் நன்கறியப்பட்டவர் கீதா பென்னட். நெடுநாள்களாக அமெரிக்காவில் வசித்து வரும் இவர் தமிழகம் மற்றும் அமெரிக்கா இடையிலான கலாசார, பண்பாட்டுச் சிக்கல்களைத் தம்முடைய எழுத்துக்களில் பதிவு செய்து வருகிறார்.



**நீங்கள் எழுத ஆரம்பித்த பின்னணி பற்றிக் கூறுங்களேன்?**

நான் என் கணவர் ஃபிராங்க் பென்னட்டுடன் ஒரு முறை இந்தியாவுக்கு வந்திருந்த போது தான் எழுதத் தொடங்கினேன். அவர் தன் பெயரைப் போலவே ரொம்ப ஃபராங்க். பிடிக்கவில்லை என்றால் உடனே பட்டென்று பிடிக்கவில்லை என்று சொல்லி விடுவார். உடனே மறந்தும் விடுவார். நான் அப்படியில்லை. மனதுக்குள்ளேயே சேர்த்து வைத்துக் கொண்டிருப்பேன். இந்த வித்தியாசத்தை வைத்து இது 'பொறாமையா" என்று ஒரு கதை எழுதினேன். அது மங்கை பத்திரிகையில் வெளிவந்தது.

**உங்களின் தனித்துவமான எழுத்தை நீங்கள் எப்படி கைவரப் பெற்றீர்கள்?**

அதற்கு நான் எழுத்தாளர் சுஜாதாவுக்கு நன்றி சொல்ல வேண்டும். மாம்பலம், மயிலாப்பூர் என்று எத்தனையோ பேர் கதை எழுதுகிறார்கள். நீங்கள் வாழும் நாட்டு மனிதர்களின் கதைகளை எழுதுங்கள் என்ற அவர் சொன்னது உந்துதலாக அமைந்தது. அந்த உந்துதலில் 'வெள்ளை நிறத்தொரு பூனைக்குட்டி" என்ற கதையொன்றை எழுதினேன்.

'டெக்சாஸ்" பள்ளியிலே படிக்கிற இந்தியக் குழந்தையைப் பற்றியது அது. பழுப்பு நிறத் தோல் உடைய அந்தச் சிறுவன் வெள்ளை நிறக்குழந்தைகளிடையே படும் அவதியைப் பேசும் அந்தக் கதையை ஒரு பிரபல தமிழ்ப் பத்திரிக்கை பிரசுரிக்க மறுத்து விட்டது.

அது அமெரிக்காவை விமர்சிக்கிறதாம்! இப்பொழுதுகூட 'மத்தளம்" என்றொரு கதை அனுப்பியிருக்கிறேன். அந்தக் கதை நம் தலைமுறையைப் பற்றியது. நம் தாய் தந்தையர் இங்கே வந்து இருக்க மாட்டேன் என்கிறார்கள். நமது குழந்தைகளோ இந்தியாவில் போய் வாழ்வது சாத்தியமே இல்லை.

ஆனால் ஒவ்வொரு முறை இந்தியாவுக்குப் போகும் எப்போது இங்கே திரும்பி வரப் போகிறாய் என்று நிச்சயம் பெற்றோர்கள் கேட்பார்கள். இரண்டு தலைமுறைகளுக்கும் நடுவில் மாட்டிக் கொண்டு அவதிப்படுகிற தலைமுறை நாம் அதைத்தான் 'மத்தளம்" என்கிற கதையில் சொல்லியிருக்கிறேன்.

இன்னொரு வகையில் பார்த்தால் இந்த நாட்டின் தாக்கத்தினால் 'சுதந்திர சிந்தனை" வேண்டுமென்று ஒரு பக்கம் குழந்தைகளிடம் எதிர்பார்ப்போம். மறுபக்கம் நம் கலாசாரத்தை அவர்கள் பின்பற்ற வேண்டும் என்று சொல்லுவோம். இது மாதிரியான கலாசார மற்றும் தலைமுறை இடைவெளிச் சிக்கல்களை என்னுடைய கதைகளில் பதிவு செய்கிறேன்.

**உங்களுடைய 'வித்தியாசங்கள்" கதையில் ஒரு மகன் மருத்துவச் செலவுகள் அதிகமாகும் என்று அஞ்சி தன்னுடைய தந்தையை இந்திய முதியோர் இல்லமொன்றில் விட்டு விடுவது போல் எழுதியிருக்கிறீர்களே! அதைப் பற்றி...?**

நமக்கு தாய் தந்தையர் மீது மிகுந்த பாசம் இருக்கிறது. அவர்களைக் கொண்டுவந்து வைத்துக் கொள்ள வேண்டும் என்றுதான் நினைக்கிறோம். ஆனால் இந்த நாட்டில் மருத்துவச் செலவு மிக மிக அதிகம். வெகுநாள் முயற்சிக்குப்பின் வசதிகளை அடைகிறோம். ஆனாலும் ஒரு நாளைக்குப் பத்தாயிரம் டொலர் செலவழிக்கம் நிலை வந்தால் அதைத் தாங்குகிற வலிமை நமக்கு இல்லை. அடுத்த தலைமுறையையும் பராமரித்தாக வேண்டும்.

**இது ஒரு இக்கட்டான நிலைதானே?**

இக்கட்டுதான். ஆனாலும் எப்படி நமது பெற்றோர் தம் குழந்தைகளுக்காக எல்லாத் தியாகமும் செய்து உயர்த்தினார்களோ அதையேதான் நாமும் இப்போது நமது குழந்தைகளுக்காகச் செய்கிறோம்.

**பெரும்பாலும் உங்களுடைய கதைகளில் அமெரிக்கத் தமிழர்களைச் சித்திரிக்கும் போது அவர்கள் தான் 'தனக்கு' என்ற குறுகிய வட்டத்துக்குள் இருந்து செயல்படுவதைக் போல் அமைத்திருக்கிறீர்கள். அவர்களோடு ஒப்பிடும் போது இந்தியத் தமிழர்கள் பெருந்தன்மையும் பரந்த மனப்பான்மையும் கொண்டவர்களாக உங்கள் கதைகளில் தெரிகிறார்களே! அது சரியா?**

(சிரிக்கிறார்) எனக்கு ஒரு பாரபட்சம் உண்டுதான். அதிலும் நமக்கு முந்தைய தலைமுறையினர் மேல் எனக்கு ரொம்ப அபிமானமும் மரியாதையும் உண்டு. நாம் கொஞ்சம் சுயநலமிகளாகத்தான் இருக்கிறோம் இல்லையா?

நான் பார்த்ததை எழுதுகிறேன். முன்கூட்டியே தீர்மானித்துக் கொண்டு இவர்களெல்லாம் சுயநலக்காரர்கள் என்ற சொல்லவில்லை. நீங்கள் சொன்னபிறகுதான் என் கதையில் அமெரிக்கத் தமிழர்கள் இப்படிச் சித்திரிக்கப்படுகிறார்கள் என்பதைக் கவனிக்கிறேன். எனக்கே வியப்பாக இருக்கிறது.

**உதாரணமாக 'பாகப் பிரிவினை" என்ற பழைய படத்தில் எம். ஆர். ராதா 'சிங்கப்பூரா"னாக வந்து ஒரு சதி செய்கிற. பொடி வைத்துப் பேசுகிற ஆசாமியாக இருக்கிறாரோ, உங்கள் கதையில் அமெரிக்கத் தமிழரையும் அதுபோலத்தானே சித்திரிக்கிறீர்கள்?**

அப்படியெல்லாம் நான் திட்டமிட்டு வில்லனாகச் சித்திரிக்கவில்லை. என் கதைகள் பொதுவாக மனிதர்களின் உணர்வுகளைச் சித்தரிப்பன,



பாத்திரங்களைப் பற்றியல்ல. அமரர் சாவியும் சொல்லுவார் "கீதா, உங்கள் கதைகளில் நிகழ்ச்சிகளைவிட உணர்ச்சிகள் நிறைய இருக்கின்றன"" என்று.

**நீங்கள் நல்ல இலட்சியவாதியான அமெரிக்கத் தமிழர் பாத்திரங்களையும் படைத்திருக்கிறீர்கள். இது மனித காதலாம்" என்ற ஒரு கதையில் டாக்டரும் அவர் மனைவியும் சம்பாதிக்க வேண்டிய அவசியம் இல்லையென்று பொதுத் தொண்டில் இறங்குகிறார்கள். அவர்கள் மிகவும் அன்பு மிகுந்தவர்களாகவும், மற்றவர்களுக்கு உதவி செய்பவர்களாகவும் மிக அழகாகச் சித்திரிக்கப் பட்டிருக்கிறார்கள். அதில் யாழினி என்ற அழகான தமிழ்ப் பெயரை ஒரு பாத்திரத்துக்குக் கொடுத்திருந்தீர்கள். சரிதானே?**

என்னைவிட என் கதையை நீங்கள் மிக நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள். ஒரு இலங்கைத் தமிழரின் பெயர் அது. எனக்கு மிகவும் பிடித்து விட்டது. நான் என் கதையில் அப்பெயரை உபயோகித்துக் கொண்டேன்.

**உங்களுடைய 'ஊனம்" என்ற கதையில் ஊனமுள்ள மகன் பிறந்ததும் அப்பாவும் பாட்டியும் குழந்தையைக் கொன்றுவிடலாம் என்று சொல்கிறார்கள். அம்மா அதற்கு ஒப்புக்கொள்ளாமல், குழந்தையோடு ஓடிவிடுகிறாள். யாருடைய ஆதரவும் இல்லாமல் அவள் வளர்த்துவருகிறாள். அவள் செய்யும் அவ்வளவு சேவையையும் அவன் மிகத் துச்சமாக கருதுகிறான். அவனுக்கு 18 வயதாகிறது. அப்போது அமெரிக்கத் தமிழ்ப் பெண்ணொருத்தியைச் சந்திக்கிறான். தனக்குப் பிறக்கப்போகும் குழந்தை**



**ஊனமுற்றதாக இருக்கப் போகிறது என்று அறிந்ததும் கருவைக் கலைத்து விட்டதாக அவள் சொன்னதும், தன் தாய் தனக்காக எவ்வளவு பாடுபட்டிருக்கிறாள் என்பது அவனுக்குப் புரியவருகிறது. இந்தக் கதையைப் பற்றி...?**

ஆமாம், ஊனமுற்றவர்களுக்கு எல்லா வசதிகளும் இருந்தும் அப்படி ஒரு குழந்தை தனக்கு வேண்டுமா என்று யோசித்துவிட்டு அவள் கருக்கலைப்பு செய்திருக்கிறாள். ஆனாலும் அந்தக் கதை தாய்க்கும் மகனுக்கும் இடையேயான உறவைச் சித்தரிப்பது.

**அதே மாதிரி உங்களுடைய "இன்னொரு காதல் கதை" என்ற சிறுகதையில்...?**

அமெரிக்காவிலே வளர்ந்த தமிழ்ப் பெண், தமிழ் நாட்டுக்குப் போயிருக்கிறாள். சகோதரர்கள் இருவரில் தம்பி அவளைக் காதலிக்கிறான். அவளும் அவனைத்தான் விரும்புகிறாள். ஆனாலும் கதை வேறு மாதிரிப் போய்விடுகிறது.

**அதில்லை. நீங்கள் அந்தப் பெண்ணைப்பற்றி அங்காங்கே சொல்லிக் கொண்டே போவீர்கள். அவள் ஆடையணிகிற முறை, உதட்டில் தொங்கும் சிகரெட் என்று இப்படி ஒரு தமிழ் நாட்டு ஆணுக்கு இவையெல்லாம் மிகச் சங்கடமளிக்கிற விஷயங்கள். இப்படிப்பட்ட ஒருத்தியை மணந்து கொள்கிறேன் என்று பெற்றோரிடம் சொல்வது மிகவும் கடினம். ஆனாலும், விட்டில் பூச்சி விளக்கில் விழுவதுபோல, இவை அவனைக் கவர்கின்றன. காதல் வேகத்தில் விரும்பத்தக்கவையாய் இருக்கின்ற இதே விஷயங்கள் கல்யாணத்துக்குப் பின் வெறுக்கத் தக்கவையாய் ஆகிவிடுகின்றனவே. அது பற்றி?**

நீங்கள் சொல்வது சரி. கல்யாணத்துக்குப் பின் என்ன ஆகிறது என்பதையே ஒரு நாவலாக எழுதலாம் என்று யோசித்து வருகிறேன்.

**உங்கள் கதைகளைப் படிக்கும்போது இது ஒரு பெண்ணால் எழுதப்பட்டது என்பதைச் சொல்ல முடியும். உணர்ச்சிகள் மட்டும் அல்ல, பல சின்னச் சின்ன கூர்மையான கவனித்தல், அவர்கள் என்ன அணிந்திருந்தார்கள். எங்கு இருந்தார்கள் என்பவையெல்லாம் உங்கள் எழுத்தில் காண முடிகிறது. ஓர் ஆண் பொதுவாக இதையெல்லாம் கவனிப்பதில்லை. எழுதுவதுமில்லைத் தானே?**

உண்மை தான். பலபேர் என்னிடம் இதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னுடைய பெரும்பாலான கதைகள் ஒரு ஆண் பாத்திரம் சொல்லுவதாக அமைந்திருக்கும். "உங்களால் எப்படி ஆண்கள் தங்களுக்கு மத்தியிலே பேசிக்கொள்ளுவதையெல்லாம் எழுதமுடிகிறது? என்று வாசகர்கள் என்னைக் கேட்டதுண்டு.

**நீங்கள் உங்களை ஒரு ஆணின் இடத்தில் இருத்திக் கொண்டு எழுதுவதால் இது முடிகிறதா?**

அதுவும் தான். தவிர நம்மைச் சுற்றி நடப்பவற்றைக் கூர்ந்து கவனித்து மனதில் ஓரிடத்தில் அதைச் சேமித்து வைத்துக் கொள்வதாலும் சாத்தியமாகிறது. 'செவ்வாயும் வெள்ளியும்" என்ற ஒரு கதை அதில் வரும் மனைவி தன்னை நெடுநேரம் அலங்கரித்துக் கொள்வாள். கணவனோ எதையுமே கவனிக்கமாட்டான். "என்னுடைய எல்லா ஆடைகளையும் என் நண்பர்கள் பார்த்துவிட்டனர். புதிதாக எதுவும் இல்லை என்ன செய்வது" என்று கேட்பாள். அதற்கு அவன் "நண்பர்களை மாற்றிவிடு" என்று சொல்வான். (சிரிப்பு) இருவரும் புறப்படுவார்கள். அவன் போகிற இடத்துக்கு வழி எங்கே என்பதைத் தெரிந்து கொள்ளாமலே புறப்பட்டு விடுவான். அவள் சொல்லியும் கேட்கமாட்டான். வேறு யாரிடமும் வழியும் கேட்கமாட்டான். கடைசியில் மிகத் தாமதமாகப் போய்ச் சேருவார்கள்.

**உங்களுக்குப் பிடித்த எழுத்தாளர் என்று யாரையாவது குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா?**

கல்கியின் எழுத்துக்கள் எனக்கு ரொம்பப் பிடிக்கும். அவருடைய 'பொன்னியின் செல்வ"னை எத்தனை தடவை படித்திருப்பேன் என்று கூட கணக்கிட முடியாது. அதைவிட எனக்கு 'சிவகாமியின் சபதம்" மிகவும் பிடித்தது. குறிப்பாக சிவகாமியின் பாத்திரப் படைப்பு. ஒரு ஆண் எழுத்தாளரால் அவளுடைய உணர்வுகளை அவ்வளவு துல்லியமாக எப்படிப் படம் பிடிக்க முடிந்தது என்பதில் எனக்கு ஒரு வியப்பு உண்டு.

**உங்களது கதைக்கான கதை மாந்தர்களை எப்படித் தேர்வு செய்கிறீர்கள்?**

வெவ்வேறு இடங்களில் சந்திக்கும் போது கவனிப்பது தான்.

**இசைக் கலைஞர், எழுத்தாளர் எனப் பல்துறைகளிலும் இயங்கி வரும் நீங்கள் உங்களுடைய தனித்தன்மையையும் காப்பாற்றிக் கொண்டு அதேசமயம் நிறையவும் எப்படி உங்களால் எழுத முடிகிறது?**

நான் செய்யும் எல்லாவற்றையும் மிக நேசித்துச் செய்கிறேன். இசை என் தந்தையின் வழி எனக்கு வந்தது. நான் Systems analyst ஆக இருந்த காலத்தில் மதிய உணவு இடைவேளை அரை மணி நேரம் ஓடிப்போய் புல்வெளியில் உட்கார்ந்து கொண்டு கதை எழுதுவேன். ஒரு வாரத்தில் இரண்டு மூன்று கதைகள் அனுப்பிவிடுவேன். அப்போதெல்லாம் தொடர்ந்து கதைகள் பத்திரிகைகளில் வந்து கொண்டே இருக்கும்.

**எழுத்துத் துறையில் உங்கள் முன்னோடியென்று யாரையாவது சொல்ல முடியுமா?**

குறிப்பிட்டு யாரையும் சொல்வதற்கில்லை.

**உங்களது எழுத்துப் பாணி பற்றி?**

சங்கீதமானாலும் சரி கதையானாலும் சரி எளிமையாக இருக்க வேண்டும் என்று அப்பா சொல்லுவார். அதுதான் மக்களைச் சென்றடையும். படிப்பவர்களுக்குப் புரியவே கூடாது அல்லது அவர்கள் முட்டாள்கள் என்று நினைக்கும் எழுத்தாளர்கள் உள்ளனர். அதை நான் ஒப்புவதில்லை. எளிமையாக எழுதுவது கடினம். படிப்பவருக்கு அது தெரியாது.

**உலக இலக்கியங்களின் அறிமுகம் பற்றி...?**

மாப்பசான், ஓ ஹென்றி போன்ற பலரின் எழுத்துக்களைப் படித்திருக்கிறேன்.

**தமிழ்ச் சிறுபத்திரிகைகள் பற்றி...?**

அவற்றை படிப்பதுண்டு. ஆனாலும், தாங்கள்தான் அறிவுஜீவிகள் என்று அவை செய்கிற பாசாங்கை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.

**அம்பை, ராஜம் கிருஷ்ணன் போன்ற பெண் எழுத்தாளர்களைப் பற்றி.. ?**

இருவரையும் படித்திருக்கிறேன். ராஜம் கிருஷ்ணன் வியக்கத் தக்கவர். ஆண்களைக் கோபப்படுத்துவதுதான் பெண்ணியம் என்பது போல் சிலசமயம் அம்பை எழுதுகிறார். என் கருத்து அதுவல்ல.

**உங்களுக்கு இலக்கியச் சிந்தனை விருது எந்தக் கதைக்காகக் கிடைத்தது?**

'வேலைக்குப் போகும் ஒரு மகள்" என்கிற கதைக்குக் கிடைத்தது.

**ஒரு அமெரிக்கரைத் திருமணம் செய்துகொண்டு, அமெரிக்காவிலேயே தங்கிவிட்ட பிறகும் கூட எப்படி நீங்கள் இன்னும் தமிழிலே எழுதுவதையும், வீணை வாசிப்பதையும் நிறுத்தாமல் செய்கிறீர்கள்?**

என் கணவர் தான் காரணம், எனக்கு எதெல்லாம் முக்கியமோ அதையெல்லாம் செய்வதற்கு நூறு சதவீதத்துக்கும் மேல் சுதந்திரம் உண்டு. Fasion music முதலியவை செய்வதற்காக இதர கலைஞர்களுடன் உலகம் முழுவதும் சுற்றி வந்திருக்கிறேன். அதற்கு அவர் முழு மனதோடு உடன்பட்டிருக்கிறார். அந்தப் புரிதல் தான் மிக முக்கியம் என்று நினைக்கிறேன்.

அவருக்குத் தமிழ் தெரியாது என் கதையை அவருக்குப் படித்து காண்பிக்க முடிவதில்லையே என்ற வருத்தம் எனக்கு உண்டு. சில சமயங்களில் அவரே 'என்ன எழுதியிருக்கிறாய், எனக்குச் சொல்" என்பார். நான் ஆங்கிலத்தில் சொல்வேன். அபூர்வமாக, ஒரு கதையை எப்படி முடிப்பது என்று குழப்பமாக இருக்கும் போது, கதை என்று சொல்லாமல் அவரிடம் விவாதிப்பேன். அவர் சொல்லும் கருத்து நன்றாக இருக்கும். பின்னால் அது கதையாக வந்திருக்கிறது என்று சொல்வேன். 'உன்னிடம் பேசும்போது மிகக் கவனமாக இருக்கவேண்டும்" என்று கேலி செய்வார். ○

நன்றி: [illegible]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




நூல் மதிப்பீடு

- எம்.கே.எம்.ஷகீப்

# அம்ரிதா ஏயெம்மின் "விலங்குகள் தொகுதி ஒன்று அல்லது விலங்கு நடத்தைகள்"

## - ஒரு வாசக மதிப்பீடு -




*சிறுவர்களைத் தொழிலுக்கு அமர்த்தக் கூடாது, அப்படி அமர்த்துபவர்கள் கடும் தண்டனைக்குள்ளாவார்கள் என்பதெல்லாம் பொதுவாகவே உலக நாடுகளின் அரசாங்கங்கள் பிரகடனப்படுத்தியிருக்கின்ற சட்டங்களாகும். இலங்கையிலும் பல அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் குழந்தைகள் உரிமைக்காகச் செயற்படுகின்றன. ஆனால் இவற்றால் எதனையும் கட்டுப்படுத்த முடிவதில்லை. சிறுவர்களைத் தொழிலுக்கு மாத்திரமின்றி பாலியல் பலாத்காரத்திற்கும், வெளிநாட்டவர்களின் பாலியல் இச்சைக்கும் பலியாக்குகிற நிகழ்வுகளில் நம் நாடு முன்னணியில் நிற்கிறது. சிறுவர்கள் எங்காவது இம்சைக்குள்ளானால், வேலைக்கமர்த்தப்பட்டால் இந்த இலக்கத்திற்குத் தெரிவியுங்கள் எனக்காட்டுகிற அழகான விளம்பரப் படங்களை இரண்டரை வருடங்களுக்கு முன்னர் இலங்கைத் தொலைக்காட்சிகளில் பார்த்திருக்கிறேன்.*

வித்தியாசமான தலைப்பு, வித்தியாசமாகப் பிரவாகிக்கிற மொழி, விபரமான பார்வைப்புலன் என பல வித்தியாசங்களைக் காட்டிக் கொண்டு அம்ரிதா ஏயெம்மின் 'விலங்குகள் தொகுதி ஒன்று அல்லது விலங்கு நடத்தைககள்' என்கிற சிறுகதை நூல் மூன்றாவது மனிதன் நூல் வெளியீட்டுத் தொடராக வந்திருக்கிறது.

இலக்கியப் படைப்புக்கள் எது சார்ந்தும் கேள்விகள் எழுப்பப்படுவதை விட - இந்த மதிப்பீட்டில் கூட பல கேள்விகள் எழுந்திருந்தாலும் -சிந்தனைகளை எழுப்பிக் கொண்டு செல்வது தான் சிறந்ததாக இருக்குமென்று கருதுகிறேன். இந்தத் தலைப்பைத் ஏன் தேர்ந்தார், கதைகளுடன் தொடர்புறாத - கதைகளில் அனேகமாக குரங்குகளே வருகின்றன - விலங்கொன்றின் அட்டைப்படம் ஏன்.. சில மயக்கமான அல்லது வாசகர்களை இலகுவில் பற்றாத மொழிப்பிரயோகங்கள், சிலேடைகள் அல்லது குறியீடு, குறிப்பான்கள் ஏன் என்றெல்லாம் கேள்விகள் எழுப்ப இடமிருந்தாலும் அவை பெருமளவு முக்கியத்துவத்திற்குரியவையல்ல.

அம்ரிதாவின் கதைகளின் மொழி, கதைப்பாத்திரங்கள், அவர் சொல்ல முயல்கிற அர்த்தப்படுத்தல்கள் என்பன அலாதியானது. பொதுவாகவே இவரின் கதைமொழி பிரவாகமெடுத்ததென்று சொல்வார்களே. அது போன்றது. சிலபோது உள்ளடக்கங்களை விட அவை பெறுமதியாகத் தெரிகின்றன. வாசகர்களை விட்டுவிடாமல் அழைத்துச் செல்ல வல்லன இவரது மொழிப்பிரயோகம். ஓர் உயிரியல் மாணவனாக, தற்போதைய விரிவுரையாளராக எனவுள்ள இவரது விஞ்ஞானத்தளம் கதைகளில் கலைத்தளமாகிறது (அ.யேசுராசாவின் பத்தி எழுத்துக்கள் ஒன்றில் குறிப்பிடும் அறிவியற்துறைசார் இலக்கியவாதிகள் வரிசையில் இவரையும் சேர்த்துக் கொள்ளலாம்). நிகழ்வுகள், கதை மாந்தர்கள் அல்லது கதை "மந்தி"கள் (இவரின் கதைப்பாத்திரங்கள் பல குரங்குகள்தான்!) மொழியென்னும் மாயவீதியில் அழைத்துச் செல்கின்றன. நாமும் வாசகர்களாக சிந்தனைகளை ஓடவிடுகிறோம். பொருட்கள் பல வடிவம் கொள்கின்றன. படைப்பாளி ஓர் அர்த்தம் கொள்கிறார். படைப்பாளி அர்த்தம் கொள்ளாதவைகளை வாசகனாக நாம் சிலவேளைகளில் கண்டு கொள்கிறோம். அல்லது புரிபடாமல் தவிக்கிறோம். ஆக மொத்தத்தில் அது சிறந்த கதைகளுக்கான தகுதியினைப் பெற்றுவிடுகிறது.

இவை அம்ரிதாவினையும், பௌசர் சொல்லியிருப்பது போன்று -திசேராவினையும் ஈழத்தின் நவீன பாணிக் கதைசொல்லிகளாக மாற்றி விடுகின்றன. திசேராவின் சில கதைகளில் இருக்கிற இறுக்கம், வாசகப் புரியாமை அம்ரிதாவின் கதைகளில் பெரும்பாலுமாகக் காணக்கிடைப்பதில்லை.

அம்ரிதாவின் கதைகள் பாத்திரங்களை செயற்கைத்தனமாக உருவாக்கி விடுவதில்லை. மனிதரைச் சூழ்ந்த நிலைபேறான பாத்திரங்களே அவரின் கதைகளை உருவாக்கி விடுகின்றன. ஓணாண்கள் கதையில் "யுத்தத்தினால் சேதமாக்கப்பட்ட இந்த வீடே பேசுவதாக ஒரு வடிவான கதை.." என்ற வார்த்தைகளை இங்கே நாம் கவனிக்கலாம். சேதமாக்கப்பட்ட வீடுகளில் "வடிவான" கதை எப்படி உருவாகும் என்கிற கேள்விக்கான விடையாக இருப்பதுவே அம்ரிதாவின் கதை சொல்லும் முறையும் திறனுமாகும். இதனோடு ஒட்டியதாக கலாநிதி நுஃமானின் "எல்லாக் கதைகளுமே படைப்பாளியின் சொந்த அனுபவத்தின் ஒளித்தெறிப்புக்களாகவே தோன்றுகின்றன. எல்லாக் கதைகளிலும் கதை சொல்லி ஒரு பாத்திரமாக இருக்கின்றார். அல்லது ஒரு பாத்திரம் கதை சொல்லியாக இருக்கிறது" என்பதையும் கவனத்திற் கொள்ளலாம். அதுமாத்திரமின்றி அவரின் சில கதைகள் வாசகர்களையும் படைப்பாள அனுபவத்தோடு கூட்டிச் செல்கிறது. பொதுவாகவே கதைசொல்லியின் நிகழ்தளங்கள் பொது வாசக அடையாளங்களுடன் தெரிகிற போது இந்நிகழ்வுத்தளம் சார்ந்த வாசகன் பெரும் ஈர்ப்புக்குள்ளாகி விடுகிறார்.

உதாரணத்திற்கு முதற்கதையில் வரும் கப்பல் பயணம், கோதுமைத் தொழிற்சாலை என்ற அடையாளங்கள் திருகோணமலை-மூதூர்ப் பிரதேசங்களைக் கண்ணுக்குள் கொண்டு வந்துவிடுகிறது. இத்தளத்தினைச் சார்ந்த -என்னைப் போன்ற- வாசகர்கள் இவ்வாறான கதைகளில் அந்நியோன்யப்பட்டு விடுகிறார்கள். கதை பேசாத அல்லது கதை மையப்படுத்தாத அதுவுமில்லாவிட்டால் கதை [illegible]யாக உருவாக்கியிருக்கிற என பல [illegible]யங்களை சார்ந்து [illegible]ஞானத்தை எழுப்பத் தொடங்குகிறார்கள். சூழலை மாசுபடுத்துகிற மாதிரியான பெரிய புகை போக்கிகள் பிரிமா மா ஆலையில் எங்கே தெரிகின்றன? குரங்குகள் அதிகமுள்ள இடம் கட்டைபறிச்சானா? சேனையூரா? சம்பூரா எனக் கேட்கத் தொடங்குகிறார்கள்?. சிலவேளை அவர்களுக்குத் தெரியாத விடயங்களையும் சொல்லித் தந்து விடுகிறார் படைப்பாளி. (சத்தியமாய் குரங்குகள் அதிகமான ஊர் அது என்று எனக்குத் தெரியவே தெரியாது). வாசக அனுபவங்களும், படைப்பாள அனுபவங்களும் எங்கெங்கே எவ்வாறு வித்தியாசப்படுகின்றன என்பதற்கு முதற்கயையும் இத்தொகுப்பிலுள்ள ஏனைய பல கதைகளும் நல்ல உதாரணம்.

மேலும், அந்தக் கதை படம் பிடித்திருக்கிற மனிதரின் குரங்குப் புத்திகள் அல்லது குரங்கின் மனிதப் புத்திகள் என்கிற விடயம் அண்மையில் வெளிவந்த Planet of Apes என்ற படத்தை ஞாபகமூட்டுகிறது என்பதனை இங்கு சொல்லித்தான் ஆகவேண்டும்.

சிறுவர்களைத் தொழிலுக்கு அமர்த்தக் கூடாது, அப்படி அமர்த்துபவர்கள் கடும் தண்டனைக்குள்ளாவார்கள் என்பதெல்லாம் பொதுவாகவே உலக நாடுகளின் அரசாங்கங்கள் பிரகடனப்படுத்தியிருக்கின்ற சட்டங்களாகும். இலங்கையிலும் பல அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் குழந்தைகள் உரிமைக்காகச் செயற்படுகின்றன. ஆனால் இவற்றால் எதனையும் கட்டுப்படுத்த முடிவதில்லை. சிறுவர்களைத் தொழிலுக்கு மாத்திரமின்றி பாலியல் பலாத்காரத்திற்கும், வெளிநாட்டவர்களின் பாலியல் இச்சைக்கும் பலியாக்குகிற நிகழ்வுகளில் நம் நாடு முன்னணியில் நிற்கிறது. சிறுவர்கள் எங்காவது இம்சைக்குள்ளானால், வேலைக்கமர்த்தப்பட்டால் இந்த இலக்கத்திற்குத் தெரிவியுங்கள் எனக்காட்டுகிற அழகான விளம்பரப் படங்களை இரண்டரை வருடங்களுக்கு முன்னர் இலங்கைத் தொலைக்காட்சிகளில் பார்த்திருக்கிறேன்..(இப்போதும் கூட ஒளிபரப்பாகலாம்). ஆனால் எதுவுமே சாதகமாக நடக்கவில்லை. ஈழத்துச் சூழலில் அநாதைகள், விதவைகளின் எண்ணிக்கையற்ற உருவாக்கத்திற்கு முழு முதற்காரணம் உள்நாட்டு யுத்தம். (இந்த யுத்தம் பற்றிய எள்ளல்கள், அது உண்டாக்கிச் சென்ற காயங்கள், அது கலைத்த கனவுகள் என பலது பல கதைகளில் வெவ்வேறு குறியீட்டு வடிவங்களில் வருகின்றன.) இந்த யுத்த அபத்தத்தின் ஒரு விம்பம்தான் கிருஷ்ணபிள்ளை(கள்). அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது கதை. இருந்தாலும் அதில் நெருடலாய் வருகிற விடயம் பல்கலைக்கழக சூழலில் ஒரு கிருஷ்ணபிள்ளையின் வயதையொத்த மகனுடன் கென்ரீனுக்கு வருவது. அம்ரிதாவின் பல்கலைக்கழக சூழல் அப்படியானதா என்பது எனக்குத் தெரியாது.

படைப்பாளி மேலோட்டமாய்ச் சொல்லிச் செல்லும் சில விடயங்கள் வாசகர்களிடையே பெரும் தாக்கத்தையும் ஆழமான பார்வையையும் ஏற்படுத்திவிடக்கூடியதென்பதற்கு நானுணர்ந்த ஒரு விடயத்தை - அது கதையின் மையங்களை விட்டுச் செல்லினும் - இங்கு கதைப்பது நல்லது. கிருஷ்ணபிள்ளைக் கதையில் அவனின் அம்மா வெளிநாடு போனதும், கடிதங்கள் கிடைக்காததும் பற்றிய மேலோட்டமான குறிப்பு இருக்கிறது. நான் இங்கு மத்திய கிழக்கு நாடான சஊதியில் தொழில்புரிவதால் இது பற்றிக் கொஞ்சம் சொல்லலாம். இங்கு வீடுகளில் பணிபுரியும் பெண்கள் வெளியுலகத்துடன் எதுவித நேரடித் தொடர்புமற்றவர்கள். அவர்களின் எஜமானர்கள் ஏதாவது நிறுவனங்களில் பணிபுரிபவர்களாகயிருந்தால் அந்நிறுவன முகவரியையே தங்கள் பணிப்பெண்களுக்காகக் கொடுப்பார்கள். சிலரிடம் தனித் தபால் முகவரி இருக்கிறது. அவற்றைத் தபாலகங்களில் மாதமொருமுறை இருமுறை என்ற அளவில் தான் சென்று பார்க்கிறார்கள். பல எஜமானர்கள் பணிப்பெண்களுக்குக் கடிதங்களைக் கொடுப்பதில்லை. பலர் கடிதங்களை உடைத்துப் பரிசோதிக்கிறார்கள். அவர்களில் பலருக்கு சூனியம், டீட்ய்உம ஆயபஉை போன்றவற்றையிட்டுப் பயமிருக்கிறது. அப்படி ஏதாவது நிகழலாம் என்ற பயத்தை என்னிடம் கூட பலர் வெளியிட்டிருக்கிறார்கள். ஒரு முறை ஒரு பணிப்பெண்ணுக்கு கடிதம் வந்திருந்தது இரண்டு புகைப்படங்களுடன்.. அதில் ஒன்று மதில்மேல் குந்திக் கொண்டிருக்கிற ஒரு கறுப்புப் பூனையின் படம். அது அவள் நாட்டிலிருந்த போது வளர்த்த செல்லப் பிராணியின் படம். இதைப் பார்த்த எஜமானுக்குப் பயம் வந்துவிட்டது. இது ஏன் என்று கேட்டான்? நான் கடிதத்தை வாசித்து விளக்கிச் சொன்னேன். அதைக் கொண்டு போய் அவளிடம் கொடுத்தானா இல்லையா என்பது தெரியாது? பணிப்பெண்கள் பதிலனுப்புகையிலும் கவனயீனம் நடைபெறுகிறது. பொதுவாக இங்குள்ள எஜமானர்கள் மறதிக்காரர்களாக இருக்கிறார்கள். கடிதங்களை நாட்கணக்கில் காரிலோ வீட்டிலோ வைத்துவிடுகிறார்கள். அது தபாலிடப்படாமல் போவதுமுண்டு. சில கடிதங்கள் விடுமுறையில் செல்பவர்களிடம் கொடுத்துத் தபாலிடப்படுவதுண்டு. அது பெரும்பாலும் சேருவதுண்டு. என்றாலும் இந்த சந்தர்ப்பம் பணிப்பெண்களுக்குக் கிடைப்பதில்லை. நான் என்னுடன் தொழில்புரியும் இலங்கைப் பெண்களை பணிக்கமர்த்தியிருக்கும் சிலரிடம் விடுமுறையில் இலங்கையர்கள் செல்லும் நாட்களைக் குறிப்பிட்டு பணிப்பெண்களின் கடிதங்கள் இருந்தால் கொண்டு வரும்படி கேட்டு அனுப்பிவைக்கிறேன். இது தவிர பல பணிப்பெண்கள் எழுதத் தெரியாதவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்களுக்கான கடிதங்களை வாசிக்க, எழுத -எஜமானர்கள் நல்லவர்களாக இருந்தால்- நகரசுத்தித் தொழில் புரியும் அந்தந்த மொழிக்காரர்களை அழைக்கிறார்கள். இது சஊதியைப் பொறுத்தவரைக் குறைவு. இப்படி இந்தக் கடிதவிஷயம் நீள்கிறது. அதுவும் சின்ன அநாதைப்பையனுக்கான கடிதம் வெளிநாட்டு இடையூறுகள் மாத்திரமின்றி நாட்டிலுள்ள இடையூறுகளையும் சந்திக்குமல்லவா. (இந்த விஷயத்தை எழுதுவதற்கான சந்தர்ப்பத்தைத் தந்த அம்ரிதாவுக்கு நன்றி).

மீண்டும் அம்ரிதா நுஃமான் அறிமுகப்படுத்தியது போன்று தன் கல்விசார் அனுபவங்களுடன் குரங்குகளின் ராஜ்யத்துள் நுழைகிறார். விலங்கு நடத்தைகளின் இன்னொரு பகுதியாக அல்லது தொடர்ச்சியாகக் கொள்ளத்தக்க கதையிது. குரங்குகள் இதிலும் பிரதான கதாபாத்திரங்களாகி படைப்பாளச் சிந்தனையில் பல கருத்துருவாக்கங்களை ஏற்படுத்தி, வாசகரிலும் பல விரிவுகளை ஏற்படுத்துகிறது. (என்றாலும் மன்னிக்க வேண்டும அம்ரிதா, இக்கதையை வாசிக்கையிலும் "டயநெவ ழக யிநள ஐ என்னால் ஞாபகப்படுத்தாமல் இருக்க முடியவில்லை. அம்ரிதா இப்படத்தை கட்டாயம் பார்க்க வேண்டும். தன் கதைகளுடனான நெருக்கத்தை அவரால் காணமுடியும். தன் கதாபாத்திரங்கள் பெற்றிருக்கிற ஹொலிவூட் சினிமா அந்தஸ்தைக் கண்டு பெருமையும் படமுடியும்) இந்தக் கதையில் மொழிக்கையாளுகையில் அல்லது நுஃமான் பயப்படுவது போன்று மொழிவிளையாட்டாய் அமைந்து போகக்கூடியதற்கு ஒரு உதாரணத்தைக் குறித்துச் சொல்லலாம் என நினைக்கிறேன்.

பொதுவாக நாம் லேக்ஹவுஸ் பத்திரிகைகளை ஏரிக்கரைப் பத்திரிகைகள் என்றே சொல்வது வழக்கம். அதுதான் சரியானதும் கூட என நினைக்கிறேன். அம்ரிதா வித்தியாசங்களுக்காக குளக்கரை என்று பாவித்திருக்கிறார். குளம், ஏரி என்பவற்றிற்கிடையிலான வித்தியாசங்கள், (குளங்கள் பற்றிய கதையில் அவை பற்றிய குறிப்புக்களும் வருகின்றன) லேக்ஹவுசின் அமைவிடம் என்பதைத் தெரிந்த வாசகர்கள் இந்தக் "குளக்கரை"யின் நெருடலை உணர்வார்கள். நான் உணர்ந்தேன்.

ஒவ்வொரு பொருட்களையும் உன்னிப்பாகப் பார்த்து, அவதானித்து அவற்றில் மனித உணர்வுகளைக் காண்பது, மனித சிந்தனைகள் விதைப்பது என்பது பொதுவாகவே இவர் கதைகளில் காணக்கிடைக்கிற அம்சமாகும். படகு அல்லது ஜெயபால் கதையில் மானுட அந்தஸ்தும், அவலங்களும் எடுத்துரைக்கப்படுகின்றன. மானுடவாழ்வின் ஒவ்வொரு தெறிப்புக்களையும் அஃறிணைப் பொருட்களில் அர்த்தப்படுத்துகிறார் அம்ரிதா. பாம்புகள் கதையில் பாம்பு பற்றிய சில உயிரியல் குறிப்புக்களுடன் பாம்பின் பரிமாணங்கள் படிமங்களினூடாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆட்டோ ஓட்டி கோவிந்தன் அண்ணனின் செய்கைகள் சமூக உறவுகளின் ஓர் உயர்ந்த வடிவம். காவலரண் "பாம்புகள்" நல்லதொரு குறியீடு.. ஆனால் அந்தப் பாம்புகளும் "பாம்புகள் வேண்டுமென்றே கொத்தி மனிதனைக் கொன்று வாழ்வை முடிக்காத" பாம்புகளில் அடங்குமா? அத்துடன் 'கோரப்பல் விசத்தால் மனித வாழ்வை முடித்துவிடுவதன்றோ' என்பவை வேறு பாம்புகளா? முரண்நகை யதார்த்தங்கள் பளிச்சிடுகிற கதையது!

அம்ரிதாவின் கதைகளின் தலைப்புக்கள் மிகச் சாதாரணமானவை. ஆனால் அவர் அதன் ஊடாகத் தரும் விடயங்கள் அசாதாரணமானவை, சிந்தனைகளை உசுப்புபவை. ஓர் உயிரியல்துறை விரிவுரையாளர் அன்றைய பாடத்தலைப்பை எழுதிவிட்டு அது பற்றிய விரிவுரைகளை, கேள்விகளுக்கான விடைகளை, அது பற்றிய உசாத்துணைகளை வழங்குவது போன்றதான விரிவுகளுடனும் இவரின் கதைகளின் நகர்ச்சியைக் காண்கிறோம். படைப்பாளருக்கு அனுபவங்களில் உயிர்த்தெழுதல் என்பது முக்கியமான விடயம். அந்த அனுபவங்களை, அதன் அறிவுரீதியான முதிர்ச்சியை, கலைரீதியான பார்வைகளை இவரின் ஒவ்வொரு கதைகளிலும் காணலாம்.

தொடர்ச்சி IIIம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குளங்கள், கூண்டுகள், மழுங்கடிக்கப்பட்ட விதைகள் என ஒவ்வொரு கதைகளும் இதற்கு உதாரணம். மழுங்கடிக்கப்பட்ட விதைகள் கதை சூழலியல் அக்கறையோடு தொடங்கி விரிவு கொள்கிறது. முன்னர் குறிப்பிட்டது போலவே பின்னுள்ள சில கதைகள் என் மண் வாசனையோடு போவது எனக்கு ஈர்ப்பையும் பூரிப்பையும் தருகிறது. வெறுமனே அனுபவப் பதிவுகளாக இவர் கதைகள் இல்லாதிருப்பதும் சிறப்புக்குரியது. அவர் சொல்ல வருகின்ற ஒவ்வொன்றிலும், பாவிக்கின்ற ஒவ்வொரு சொற்களிலும் அர்த்தங்கள் பல விரவிக் கிடக்கின்றன. இருந்தும் சில இடங்களில் இந்த அர்த்தப்பிரயோகங்களுக்காக, படிம, குறியீட்டு மற்றும் உவமானங்களுக்காக தேர்ந்தெடுக்கிற பாத்திரங்கள் அல்லது சொற்கள் வாசக சலனத்தை ஏற்படுத்துகின்றன. இது அவரே ஒரு கதையில் கூறுவது போன்று 'இப்போதெல்லாம் எனக்கு குறியீடு குறிப்பான் போன்ற தத்துவச் சிக்கல்தான் உள்மனவெளியெங்கும் போராய் அறைகூவலுடன் நடந்து கொண்டிருக்கிறது' இருக்கலாம், இன்னுமோரிடத்தில் சொல்கிறார் : 'நான் இப்போது பேசுவதும் எழுதுவதும் விளங்குவதில்லை என்று சொல்லிக் கொண்டு என்னைவிட்டுத் தூரமாகுபவர்கள் அதிகமாகிக் கொண்டு தான் இருக்கிறார்கள்.' இந்த அச்சத்தின் பாலான அக்கறை அவரை இன்னும் செழுமைப்படுத்த உதவலாம்.

இவர் கதைகளில் காணக்கிடைக்கிற இன்னொரு அம்சம் மானுடக் காதல். எந்தப் பேதங்களுமற்று ஒவ்வொருவரும் இவரின் கதைகளில் மனிதப்பெறுமானங் கொள்கிறார்கள். இன முரண்பாடு நிறைந்த இன்றைய ஈழத்துச் சூழலில் இவர் கதைகளில் காட்டும் மானுடர்கள் சமாதானத் தூதர்களாக வந்து போகிறார்கள். கோவிந்தன் அண்ணன், கூண்டுகள் கதையில் வரும் நபர் போன்றோர் பெறுமதிவாய்ந்தவர்கள். செருப்பு கதை சமகால அக்கறைக்குரிய விடயங்களை மிகச் சிரமம் தரும் விதத்தில் பேசுகிற சற்றுப் பெரிய கதை. இலக்கிய வாசிப்பு என்ற ஒற்றை அம்சத்திற்காக மட்டும் அதை வாசித்துவிட்டுச் செல்லலாம். ஆனால் அதையும் தாண்டியவைகளுக்காக எழுத்தாளரின் சிந்தனைத்தரத்திற்கேற்ப - அல்லது "தத்துவச் சிக்கலுக்கேற்ப" ஒரு புத்தி ஜீவித்துவப் பயணம் மேற்கொள்ள வேண்டும் வாசகர்கள். கடலாமைக் குஞ்சுகள்,. மாயமான் போன்ற கதைகளும் அம்ரிதாவின் குறியீட்டு அல்லது குறிப்பான் பண்புகளோடும், உயிரியல் துறைத் தகவல்களோடும், அகலித்த பார்வைகளோடும், பல இலக்கிய வாசகர்களை எட்ட நிற்க வைக்கும் சிரமங்களோடும் சொல்லப்பட்டிருக்கின்றன. இவரின் கதைகளில் கடல் அதிகம் வருவது பற்றிக் குறிப்பிட வேண்டும் என்று ஆரம்பக் கதைகளை வாசித்தபோது நினைத்திருந்தேன். ஆனால் கடைசியில் அவரே அதை ஒத்துக் கொண்டு சொல்லியிருக்கிறார்.

ஆறுதலாக, ஆழமாக கற்றல்தனத்துடன் வாசிக்க வேண்டிய நூலிது. மூன்றாவது மனிதன் பௌசர் புதிய தலைமுறைத் தனித்துவங்களை (திசேரா, அம்ரிதா) அடையாளம் காட்டியிருக்கிறார். என்றாலும் இவர்கள் தொடர்ந்தும் இலக்கியத் தளத்தில் இயங்க வேண்டும். இடைவெளிகளை நிரப்ப வேண்டும். சில விமர்சகர்கள், ஆய்வாளர்கள் மேடைகளிலும், கட்டுரைகளிலும் திரும்பத் திரும்பப் போட்டு வரும் (உமா வரதராஜன் மூ.மனிதன் நேர்காணலில் சொல்லியுள்ளது போல்) ஒரே கீறல் விழுந்த தட்டை மாற்றியாக வேண்டும். உச்சத்தில் ஏற்றி வைப்பதன் மூலமும், கண்டுகொள்ளாமலிருப்பதன் மூலமும் இரு துருவங்களிலிருந்தும் திறமைசாலிகளை முடங்கிகளாக்கும் "புத்திஜீவிப்" பணியை தயவுசெய்து யாருமே மேற்கொள்ளாதீர்கள் உங்களின் பட்ட மற்றும் ஏனைய ஆய்வுகளுக்காக!

## நம்பிக்கை ஒளி

நான் பறக்கத் துடிக்கிறேன்...
என்னால் முடியவில்லை...

என் கைகளும், கால்களும்
பிணைக்கப்பட்டு
சிரசிலே முள்முடி தரிக்க
நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளேன்

என் முழுச்சக்தியையும் திரட்டி
நான் பறக்கத் துடிக்கிறேன்
என்னால் முடியவில்லை

ஒடுக்குமுறைகள் என்
குரல்வளையை நெரிக்கின்றன
மூடநம்பிக்கைகளோ என் மேனி மீது
பாம்புகளாய் நெளிகின்றன
சாக்கடை நாற்றத்தை விஞ்சிய
துர்வாடை என் நாசிகளை
மூச்சு முட்ட முனைகின்றது

ஆனாலும்
என்னுள் முகை கொண்டுள்ள
அசைக்கவியலாத ஒளி பொருந்திய
நம்பிக்கை மீது மட்டும்
ஆணியறைந்திட
எவற்றாலும் முடியவில்லை.

- செந்தணல் -

## சமர்ப்பணம்

ஒரு தேசத்தின் இருளை
விடியலை நோக்கி அசைக்கும்
ஆயிரமாயிரம் பேருடனான
என் பயணமும்
ஒரு நாள்
இலக்கை அடையும்
இருள் என்பதே அர்த்தமிழந்து
எங்கும்
ஒளிப்பிரவாகம் நிறையும்
இருளைச் சுமந்த மக்கள்
ஒளி தெறித்து எங்கும் உலாவருவர்
இந்த மண்ணின்
பிறப்பு ஒவ்வொன்றும்
வாழ்வின் அர்த்தத்தைக் காணும்
அப்போது நான்
உயிருடன் இருந்திடக் கூடுமா/
இல்லை
அதற்காய் இன்றே என்னுயிர்
அர்ப்பணமாகுமா/

- கப்டன் ஞானமதி -

## தேடி அடைவாய்

பசுமைப் போர்வையிழந்து
சாம்பல் கவிந்த
மேனியளாயுள்ளேன்
மாரிக்குளிரில் நனைந்திருப்பினும்
தணல் பூத்துக் கிடக்கிறதென்பதால்
துன்பத்துக்கும் துயரத்துக்கும் நடுவில்
உன்னை வாரியணைக்க முடியாத
தாயானேன் நான்
ஒரு அழகிய காலையை
உனக்குக் காட்ட முடியாத
வசந்த காலத்தில்
விளையாட முடியாத
பாலைவன நாட்களையே
உனக்குப் பரிசளிக்கின்றேன்
எந்த நேரமும் வீழ்ந்து வெடித்து
உயிர்குடிக்கும் எறிகணைக்குள்
முகில் கலைத்து வானிரையும்
எமதூதப் பறவைகளின்
வுருகைகளிற் கிடையில்
துப்பாக்கி வெடியோசையின்
சத்தங்களுக்கிடையில்
எப்படி என்னால்
இனிமையை உனக்குத் தரமுடியும்
என்னால் பரிசளிக்க முடியாத வாழ்வை
நீயே சென்றடைவாய்!
விழிகளில் சிவப்பும்
இறக்கைகளில் நெருப்பும்
உனக்குச் சொந்தமாகட்டும்
எம்மை வேகவைத்த காலம்
உன்னால் வேகி சாம்பராகட்டும்
ஒரு புதிய வாழ்வு
உன் கரங்களிலே பிறக்கட்டும்

- அம்புலி -

# எழுதாத உன் கவிதை
## தமிழீழ பெண்களின் கவிதைகள்

தமிழீழப் பெண்களின் கவிதைகளினை உள்ளடக்கிய தொகுதி ஒன்று 'எழுதா உன் கவிதை' என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது. இத் தொகுப்பில் போராளிகளாக இருப்பவர்களதும் மற்றும் சிலரதும் கவிதைகள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. இக்கவிதைகள் அவர்களின் உயிர் வாழ்வுக்கான போராட்டம், அதனோடு இணைந்த இழத்தல்கள், அந்தச் சூழலின் வாழ் நிலை நிம்மதியான வாழ்விற்கான ஏக்கம் என பல தளங்களை மையப்படுத்துவதாக உள்ளன. 'எழுதாத என் கவிதையை எழுதுங்களேன்' என்று சொல்லி போராளியாய் உயிர் நீத்த கப்டன் வானதிக்கு காணிக்கையாக்கி வெளியிடப்பட்டிருக்கும் இத்தொகுப்பில் இலட்சியமும் கோபமும் நிறைந்த கவிதைகள் போராளிகளையும் போர்ச்சூழலில் வாழுபவர்களின் உணர்வு நிலைகளையும் எடுத்தியம்புவதில் வெற்றி பெற்றனவாகவே காணப்படுகின்றன.

அடக்கப்பட்டுக் கொண்டிருந்த உணர்வுகள் கவிதைகளாக வெளிவருவதில் ஏற்படும் இலக்கிய தரம் தொடர்பான பிரச்சினை இவற்றிலும் இருந்தாலும் இவை தொடர்பாக யாரும் சரியான விமர்சனங்களை இதுவரை முன்வைக்கவில்லை.

ஆயினும் கவிதையின் வெற்றி என்பது அது தன்னகத்தேக் கொண்ட கருத்தின் உணர்வு நிலையை தொற்ற வைக்கின்றதா இல்லையா, என்பதிலேயே தங்கியுள்ளன.

அந்த வகையில் இவை பெரும்பாலும் வெற்றி பெற்ற கவிதைகள் தான். 26 பெண்களின் கவிதைகள் அடங்கிய இத்தொகுதி ஈழப் பெண்களின் 'கவிதைகளின் இன்னொரு பரிமாணம் என்றே சொல்ல வேண்டும். ஆனால் இவை கவிதையின் அரசியல் சார்ந்தது. இவற்றினை அடையாளங் காணலும் இது தொடர்பான சரியான பார்வையை முன்வைத்தலும் அவசியம். கப்டன் வானதி வெளியீட்டகத்தினால் இத் தொகுதி வெளியிடப்பட்டுள்ளது.




எழுதாத உன்
கவிதை
தமிழீழ பெண்களின்
கவிதைகள்
விலை - 125/=
வெளியீடு - கப்டன்
வானதி
வெளியீட்டகம்
அரசியற்துறை
மகளிர்
தமிழீழம்

## அம்மா

நான்
எரிமலையிலிருந்து தான்
தோன்றியிருக்க வேண்டும்
ஆம். அப்படித்தான் இருக்கும்
இல்லையேல்
எனக்குள்ளிருக்கும் நெருப்பு
எங்கிருந்து வந்தது/
அம்மாவிடமிருந்தா/
இருக்காது - அவள்
ஊருக்கெல்லாம் சோறு போட்டு
தன் பசியாறுபவள்
என் சிரிப்புக்காகவே
உயிர் வாழ்பவள்
அவளிடம் நான்
எரி நெருப்பை
ஒரு போதும் கண்டதில்லை

ஓ! ஒரு வேளை
அவள் ஒடுக்கப்பட்ட ஒவ்வொருமுறையும்
அடக்கி வைத்த ஆத்திரம் தான்
என்னிலிருந்து
பெரும் பொறியாய் எழுகிறதோ/
அவளது உரிமைகள் மறுக்கப்பட்டதால்தான்
நான் சிலிர்த்தெழுந்தேனோ/
அவள் குரல்வளை நசுக்கப்பட்டதால் தான்
என் குரல் ஓங்கி ஒலிக்கின்றதோ/

யார் காலில் மிதிபடவும்
தயாரில்லாமல்
எனை எவரும் வேரோடு பிடுங்கியெறிய
அனுமதியாமலும்
நான் செய்யும் போரின் வேர்
உன்னுடையதுதானேயம்மா
உரிமைப் போரில்
உன் குஞ்சு
தோற்றுப் போகாதிருக்க
எந்த வேளையிலும்
என்னை இழக்காமலிருக்க
என்னை
ஆசீர்வதி அம்மா

- மலைமகள் -

## மலைக் காலங்கள்

மழை ரசிக்கத் தக்கது
காற்றுக் கட்டுப்படுத்தப்பட்ட அறைக்குள்
கண்ணாடி சாளரங்களினூடே
பூமரங்களைத் தழுவி வழிவதை
சூடான தேநீரை அருந்தியபடி பார்க்கும் பொழுது
மழை மிகவும் ரசிக்கத் தக்கது

மழை வெறுக்கவும் தக்கது
வேயாத கூரைகளினூடே விழுந்து
போர்வையற்ற மனிதர்களைத் தழுவி
மருந்துகளற்ற மருத்துவனைகளில்
படுக்க வைக்கும் பொழுதும்
உரமற்று விளையும் பயிர்களை
வரம்பின்றிப் பெருகி அழிக்கும் பொழுதும்
பதுங்குகுழிக்குள் நிறைந்து
நகர்வுகளைத் தடுக்கும் பொழுதும்
எங்கள் சுவாசமாய் இயங்கும் ஆயுதங்களில்
இயங்குநிலைத் தடைகளை
ஏற்படுத்தும் பொழுதும்
மழை வெறுக்கத்தக்கதாகவே இருக்கின்றது
எனினும்
மழையை எவரும் வெறுப்பதில்லை

சில வேளைகளில்
நாங்களும் மழையை ரசிக்கக் கூடும்
காற்றுக் கட்டுப்படுத்தப்பட்ட அறைகளும்
கண்ணாடிச் சாளரங்களும்
பூமரங்களை மழை தழுவம் காட்சியும்
அனைவருக்கும் கிடைக்கும் பொழுது
நாங்களும் மழையை ரசிக்கக் கூடும்
உதடுகளில் பொருத்தப்பட்ட
தேநீர் கோப்பையை மறந்து
மழைத்துளிகளில் ஒளிரும்
தோழர்களின் நினைவில் தோய்ந்தபடி..

- சூரியநிலா -

## உயிர்ப்பு

காலத்தின் சுமைகள் என்
இதயத்தை அழுத்துகின்றன - நான்
விடுகின்ற மூச்சுக்கூட
முனகியபடியேதான்...
இருப்பினும் ஊன்றிச்
சுவாசிக்கின்றேன்
அது
செல்லட்டும்
தூரச் செல்லட்டும்...
மிகத் தூரச் செல்லட்டும்..
ஒருசிறிய மூலைக்குள்ளும்
பொந்துக்குள்ளும் கூடச்
செல்லட்டும்
அங்கே...
என்னைப் போன்ற
இன்னொருவருக்கு
அது...
உயிர்ப்பளிக்கலாம்.

- கி. கிருபா -

## நாளையும் நான் வாழ வேண்டும்

கண்ணுறக்கம் தவிர்த்த நடுநிசி
எல்லை வேலியில்
நெருப்பேந்துகிறது என்னிதயம்
ஓராயிரம் விழிகளின் உறக்கத்துக்கான
என் காவலிருப்பு
நாளையும் நான் வாழவேண்டும்

எனதிழப்பின்
நிரப்ப முடியாத இடைவெளி புகுந்து
பகை வரலாம்
புதிதாய் ஒரு புலி
விரைந்து வரும் வரை
இரட்டிப்பு விழிப்போடு காத்திருக்கும்
என் தோழியின் காவலுக்கு
என்னிழப்பு காரணமாயிருக்கக் கூடாது
நாளையும் நான் வாழ வேண்டும்

- அம்புலி -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மூன்று மரணங் பற்றிய மூ

தூக்கம் கலைந்து போக முன்னரே தட்டினார்கள். எனக்குரிய தண்டனையை உடனடியாக நிறைவேற்றியாக வேண்டுமென்பதால், நான் எழுந்து வர வேண்டுமாம். இங்கு அதை நடாத்தினால் கட்டில் பாவனைக்கு உட்படுத்த முடியாத நிலை ஏற்படுமாம். எனக்காக தண்டனையை மாற்றிக் கொள்ளவும் முடியாதாம். வேண்டுமானால் வழியை மாற்றிக் கொள்ள முடியுமென கயிற்றைக் காட்டினார்கள். அதற்கும் வெளியே தான் போயாக வேண்டுமாம். சரியாகப்பட்ட வசதி இல்லையென்பது முக்கிய காரணமாக இருக்கின்றதாம். உத்தரவை தங்களால் மீறமுடியாது என்றார்கள். உடன் போக எழுந்த போது தூக்கம் கலைந்தது. இப்படிக் கனவுகளுள் தினமும் யாராவது வந்து சொன்னார்கள். அன்றைய தினம் வந்தவன் வைத்தியனாக இருக்க வேண்டும். அவர்கள் போலவே உடையணிந்திருந்தான். செய்கைகள் கூட அவ்வாறே இருந்தது. இதயத் துடிப்பைப் பார்த்து, முதுகில் தட்டி, நாக்கை நீட்ட வைத்துப் பார்த்து விட்டும், அந்தச் செய்தியைச் சொல்லிப் போனான். கனவில் தான் அதுவும் நிகழ்ந்தது. துரத்தினார்கள் அருகில் நிற்க வேண்டாமென, தற்செயலாக நிற்க நேரிலும் தள்ளி நின்று கொண்டு மூக்கைப் பிடித்தார்கள். பிணக்களையும், பிணவாடையும் என்னிடமிருந்தது என்பது அவர்கள் முறைப்பாடு. - இது நனவுகளில் - இப்படியான ஒரு நாளில் தான், கனவுக்குள் அந்த ஒலி கேட்டது. என்னுடைய குரல் போலவே இருந்தது. என்றாலும் எங்கிருந்து எப்படி என்பது ஆரம்பத்தில் தெரியாமல் இருந்தது "நீ ஏன் இன்னமும் தாமதித்துக் கொண்டிருக்கின்றாய் எனத்தான் விளங்கவில்லை. தாமதமாக்கப்படுவதாகவும் இருக்கலாம். எல்லோருக்கும் நிச்சயிக்கப்பட்டதாக இருந்தாலும், உனக்கு விரைவாய் வந்து சேரும், தேவையாய் இருப்பதும் அதுதான். அதுவே தான் உன்னை விடுதலையடையச் செய்யும், உன்னால் நானும் அவமானப்பட்டுப் போனேன். இனிக்கவலை இல்லை" இருமியது "உனக்குரிய மரணம்.. நெருங்கி விட்டது. அதை எதிர் கொள்ளத் தயாராய் இரு, பயப்பட மாட்டாய், அதையும் நானே செய்ய வேண்டி இருக்கும். எதற்கும் அறிவிக்கிறேன். இனிமேல் சுற்றித்திரிய முடியும் என்ற சந்தோசம் எனக்கிருந்தாலும், உருக்குலையப் போகின்றாய் என்பதில் சிறிது வருத்தமுண்டு" என்னால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் கூடச் சொன்னது. "எதிர்பார்த்திருக்கிறேன். அது நல்லது தான். ஆனாலும் எனக்கு மட்டும் முதலில்..."


நேரடியாக விடை சொல்லாமல் கதை சொன்னது. "உமாதேவியைச் சிவன் ஒரு நாள் நந்தவனத்துக்கு அழைத்துச் சென்றார். செடிகள் அழகாய்ப் பூத்துக் குலுங்கியது. மலரொன்றைப் பறித்துத் தர முடியுமா? என்றார். அதிகமாகச் சிந்தித்தாள். முன்னர் பறிக்கப்பட்ட அடையாளங்கள் தென்பட்ட, கிளை சாய்ந்து கிடந்த செடியிலிருந்து பூவொன்றைப் பறித்து வந்தாள். அதற்காக சற்றுத் தூரம் செல்ல வேண்டி இருந்தது. ஏன் இத்தனை செடிகளைத் தாண்டி அதில் சென்று பறித்தாய் என்றார் சிவன். அவள் சொன்னாள், இவைகளின் அழகு கெட்டு விடுவதில் எப்போதும் உடன்பாடு இருக்கவில்லை என்று. இதன் காரணமாகவே, துன்பப்பட்டவையே இன்னமும் [illegible] றன. நீ கூட அது போல் தான்." கனவிலும் அழுகை வந்தது. "என் விடுதலையைக் கருத்திற் கொண்டேனும், அதை ஏற்றுக் கொள்ளுதல் நல்லம், நானும் விரும்புகிறேன். எனக்குச் செய்யும் பெருதவியாகக் கூட இருக்கும். அதைவிடச் சிறந்த உதவி உன்னால் செய்ய முடியாது எனவே நினைக்கிறேன். இதன் காரணமாக உனக்கேதும் நடந்து விடப் போவதில்லை என்பதில் நீ தெளிவுற்றிருக்க வேண்டும்." மறைந்து போனது. அது என்னுடைய ஆத்மா என்பதையும், எனது குரலிலேயே உரையாடிக் கொண்டிருந்தது என்பதையும் பின் நாட்டிகளில் உணர முடிந்தது. இப்படியான கதைகளும், கனவுகளும் தொடர்ந்து கொண்டே இருந்தன.

## 2

வீட்டுக்காரப் பெண்மணி எனக்காகக் காத்திருந்தது போல் ஒரு பார்சலை நீட்டினாள். என் வரவை எதிர்பார்த்திருந்திருக்கிறாள். வழமையை விட அழகான உடையுடன் கணப்பட்டாள். அன்று அவளுடைய பிறந்த தினம் என்பதை ஞாபகப்படுத்தினாள். அதனால் தான், அது தனக்கானது என நினைத்துக் கொண்டாளாம். ஆனாலும், அதைத் தந்தவன் எனக்கானது என்பதை வலியுறுத்தி, நான் மட்டுமே பிரித்துப் பார்க்க வேண்டும். எனக் கட்டளையிட்டுச் சென்றதால் பிரிக்கவில்லை என்றாள். குண்டுப் பொதியாகவோ, வைரஸ் பொதியாகவோ இருக்கலாம் எனக் கூட ஒரு கணம் எண்ணி விட்டிருந்தாளாம். சிரித்துக் கொண்டே பூவினால் அலங்கரிக்கப்பட்டு வெட்டப்பட்டிருந்த ஒரு துண்டு கேக்கைத் தந்தாள். மௌனமாய் இருந்து விட்டு இருவரும் ஒன்றாய்க் கதைத்த போது வார்த்தைகள் கலந்து கொண்டாலும், என்குரல் பெரிதாக இருந்ததனால் அவளுக்கு விளங்கி இருக்க வேண்டும். அவனை எங்குமே பார்த்ததில்லையாம். அதற்கான ஞாபகங்கள் கூட இல்லை என்றாள். பிச்சைக்காரனுடைய தோற்றத்தில் இருந்தாலும், சென்ற பின் சந்தணவாசம் வீட்டை நிறைத்துக் கொண்டதாம். கண்கள் பக்குவப்பட்டவன் என்பதைக் காட்டியதால் அதிகம் பேசாமல் இருந்திருக்கலாம், என ஊகித்துக் கொண்டாளாம். வெட்கத்தை மறைத்திருந்த ஒரு துண்டுத் துணியை விட வேறு எதுவும் இல்லாத போது, இதை அவனால் எப்படி வாங்கிருக்க முடியும் என்பதை சிந்திக்கவேனும் முடியவில்லையாம் என்றவள், அதற்கான விடை இன்னமும் கிடைக்கவில்லை என்றும் சொன்னாள். தன்னைப் பற்றியோ - பார்சலைத் தட்டி - இதைப் பற்றியோ எதுவும் சொல்லவுமில்லை, வந்தமர்ந்து கொள்ளவுமில்லை. நான் அழைக்கவில்லை எனக் கருதிக் கொள்ளக் கூடாது. பொதியைக் கையளித்து விட்டுச் சென்றவள், சட்டையின் இரு பொத்தான்களை கழற்றி இருந்த போது அறையின் கதவைத் தள்ளி விட்டு, தலையை நீட்டி "அவனின் முகத்தில் உன் சாயல் தென்பட்டது" என்று விட்டு தலையை இழுத்து மறைத்தாள்.

என்னவாக இருக்குமென்பதில் சந்தேகமிருந்தது. யார் என்பதிலுங் கூட, அவள் சொன்ன உருவத்திற்கு மனத்திலிருந்த படங்களில் எதுவும் ஒத்து வரவில்லை. சுற்றியிருந்த கடதாசியை அகற்றிக் கூடைக்குள் போட்டேன். பெரிதான புத்தகம். விஷ்ணுபுரத்தைப் போல தடிப்பானது. ஆனால், நீள அகலங்கள் கூடியது. அட்டை பல நிறங்களில் அலையலையாக இருந்தது. - எதுவும் எழுதப்படவில்லை - உள் முகப்பில் "மரணம்" என்ற வாசகத்தைத் தவிர வேறு எதுவும் எழுதப்பட்டிருக்கவில்லை. நான்காக மடிக்கப்பட்ட ஒரு துண்டு இருந்தது. உட்பக்கங்களெல்லாம் எழுத்துக்களால் நிறைந்திருந்தது. எதுவும் வாசித்துப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை. அரைகுறையானவை போலத் தென்பட்டது. "தேவைப்படும் போது மாத்திரம் திறக்கப்பட வேண்டும். உன் ஐயங்களைப் போக்கும், சஞ்சலத்தின் விளக்கம். இது மரணம் மட்டுமல்ல, வாழ்க்கையும் உலக நியதியும்" - துண்டில் எழுதப்பட்டிருந்தது. நிறையவே தத்துவங்கள் உள்ளிருக்க வேண்டுமெனத் தோன்றியது. கொஞ்ச வார்த்தைகளும் வாழ்க்கையை முழுமையாகச் சொன்னது.

கனவுகளின் ஆக்கிரமிப்பைத் தெரிந்து கொள்ள வேண்டி இருந்தது. திறக்க முற்பட்டேன். "வரலாமா" கதவைத் தட்டி வந்தவள் தேநீர்க் கோப்பையை மேசையில் வைத்துவிட்டு புத்தகத்தைப் பார்த்தாள். "தேசப்படமா" - "தேசப்படமா" - ஆம் எழுதியுள்ளதைச் சொன்னேன். தலையைத் திருப்பிக் கொண்டு போனாள். திறந்த பக்கத்தில் "உனக்கு சந்தோசம் அருகில் இருக்கிறது" என்று மட்டும் இருந்தது திரும்பவும் அட்டையையும் கொஞ்சம் தாள்களையும் விலக்கிய போது தெரிந்த பக்கத்தில் "மரணம் நெருங்கிவிட்டது" என்றிருந்தது. இன்னமும் குழப்பம். சந்தோசம் - மரணம், இருதிசைப்பட்ட சொற்களை சேர்த்துக் கட்டியது போல இழுபட்டிருந்தாலும் மங்கிய ஒளி போலப் புரிந்திருந்தது. விடுதலையின் மார்க்கமாகச் சுட்டப்பட்டிக்கலாம். மேலும் விளக்கம் தேடிப் புரட்டினேன். அது எழுத்துக்களால் நிரப்பப்பட்டிருந்த பக்கம்.




"மாபெரும் கடல் எல்லோரும் மூழ்க வேண்டியதும், தழுவிக் கொள்ளவென அலைகளை நீட்டிக் கொண்டே இருக்கும். அதன் சுருளைக் கண்டு பயந்து கொண்டிருக்கிறோம். அதைப்பற்றிக் கதைக்கக் கூட அஞ்சி வாயில் கைவைத்து வார்த்தைகளை அடைத்துக் கொள்கின்றோம். அது ஒன்றும் அவ்வளவு மோசமானதல்ல, அதன் ஆழம் சலனமற்றது. மரணம் அழகிய பாடல், நறுமணம் கொண்டதும் சுதந்திரமானதும் ஆகும். அங்கு யாரும் ஒதுக்கப்படுவதுமில்லை, அணைக்கப்படுவதுமில்லை. அவரவர் எண்ணங்கள் பாதுகாக்கப்படும். காதுகளுள் இனிய ஓசை ரீங்கரித்துக் கொண்டே இருக்கும்."

இன்னமும் நிறையச் சொல்லப்பட்டிருந்தது. மரணம் சந்தோசமானதென்ற சாராம்சத்தினால், முன்னையை விட அதிகமாகவே மரணத்தை நேசிக்கத் தொடங்கினேன்.

## 3

"நான் இடைவிடாமல் போராடுகிறேன். அது யாருக்கும் தெரியாது. ஒரு சிலர் அதைப் புரிந்து கொண்டிருக்கலாம். அது தவிர்க்க முடியாதது தான். ஆனால் எவருக்குமே அதைப் பற்றிச் சரியாகத் தெரியாது ஆனாலும் தினசரிக் கடன்களைப் பூர்த்தி செய்து கொண்டு வருகிறேன். ஓரளவுக்கு கவனக் குறைவு என்னிடமுள்ளதைப் பற்றி குறை கூற முடியும். ஒவ்வொரு மனிதனும் போராடுகிறான். ஆனால், நான் மற்றவர்களைவிட கூடுதலாகப் போராடுகிறேன். கனவில் ஏதோ உருவத்தை விரட்டக் கைகளை அசைப்பது போன்று பிறர் தூக்கத்தில் போராடுவார்கள். ஆனால், நான் விழிப்புடன் என்னிடமுள்ள சக்தியை எல்லாம் ஒன்று திரட்டி மிகவும் கவனமாகவும், நன்கு திட்டமிட்டும் போராடுகிறேன். தங்களுக்காக மட்டும் கூவிக் கொண்டு, அதே நேரத்தில் பயத்தைக் கிளப்பும் அமைதியில் ஆழ்ந்திருக்கும் கூட்டத்திலிருந்து எதற்காக நான் விலகி எழுந்து போராடுகிறேன்? ஏன் பிறர் கவனத்தை என் பால் ஈர்க்கிறேன்? விரோதிகளின் முதல் பட்டியலிலேயே ஏன் என் பெயர் முதல் இடத்தில் இருக்கிறது" இறப்பைப் பற்றிப் புரிந்து கொள்ள முன்னான வேளைகளில் குழம்பியிருந்த என் நினைவுகளைப் போன்று. குழம்பியிருந்த காஃப்காவை நாட் குறிப்பில் காண முடிந்தது. குழப்பங்கள் தெளிவில் முடியுமாம். உலகம் லீலை, விளையாட்டு, அதிக கவனத்துடன் ஒன்றித்து பங்காளியாகப் போகின்ற போது அதீத பேராட்டம் - கவலை - வெறுப்பு தொற்றிக் கொள்கின்றது. சோக கீதத்துள் மனம் தொங்கிப் போகின்றது. தொடர்ந்து கேள்விகள் எழுந்து கொண்டே இருக்கும். படைப்பு விளங்கியபின், வாழ்க்கை இலகுவாகும். மரணம் தெரிவதால் முயற்சி வேகங் கொள்ளும். சந்தேகம் இல்லாமற் போகும். இப்போதெல்லாம் நண்பர்களுக்கு நான் மரணம் பற்றி விளக்கம் தர ஆரம்பித்திருந்தேன். என் ஆத்மாவை புரியவும், சந்தோசப்படுத்தவும் தவறியிருந்ததால் போகத் துடித்துக் கொண்டிருந்தது. கனவுக்குள் பயமுறுத்தியது. மற்றைய ஆத்மாவைச் சந்தோசப் படுத்துவது தான் அதற்குச் சந்தோசமாம். எப்படியும் அவைகள் தான் ஓரிடத்தில் வாழப் போகின்றவையாம். சடப்பொருளின் மதிப்பில் பிரிவினைகள் காட்டக் கூடாதாம். முதல் இறப்பு சடப்பொருளிலான உடல் இறந்து போதலில் ஆரம்பிக்கின்றது. உண்மையான மரணமும் கூட, இதன் பின்னான எதுவும் நமக்குத் தெரிவதில்லை. ஆனாலும் அரை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ங்கள் குறிப்பு------

திசேரா-

குறையானது இதன் பின் இன்னமும் இரண்டுள்ளது. மூச்சு நின்று போதல் முழு மரணமில்லை. நரம்புகளும் கலங்களும் துடித்துக் கொண்டிருக்கும். சுற்றியிருந்து சும்மாவேனும் ஒப்பாரி வைத்துக் கொண்டிருப்பார்கள். பாதிப்பேர் குடும்பக்கதை கதைக்கவும், வெற்றிலை போட்டுக் கொள்ளவுமென அமர்ந்திருப்பார்கள். தசையும், தோலும் போர்த்து எலும்புக் கூட்டைப் பார்க்க யாராவது வரும்வரை வைத்திருக்க வேண்டியுமிருக்கும். வயிற்றைக் குமட்டும் நாற்றமெடுக்கும் வரை அது நீடிக்கலாம். மூக்கைப் பொத்திக் கொண்டு அஞ்சலி செலுத்த வேண்டியுமிருக்கும். சொந்தங்களின் குரல் அடைத்து புத்தி பேதலித்து அவசர அவசரமாய் தொலைந்த எதையோ தேடிக் கொண்டிருப்பார்கள்.

என்னுடன் கதைப்பவர்களின் எண்ணிக்கை அண்மைக் காலமாகக் குறைந்து போயிருந்தது. ஒதுங்கித் தலைமறைவானார்கள். மரணத்தின் தூதுவன் என பெயர் சூட்டப்பட்டிருந்தது. சில வேளைகளில் மரண தேவன் எனக் கூட அழைக்கப்பட்டேன்.

4.

அப்பா,

மிக விரைவாகவே சில விடயங்களை தங்களுக்கு அறிவிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. அதையிட்டு தங்களின் உணர்வு பற்றி சரியாகக் கூற முடியாதுள்ளேன். மகன் எனக் கவலையும் படலாம், தொலைந்தான் எனச் சந்தோசமும் படலாம். எப்படியாகினும் சந்தோசப்படுதலை விரும்புகின்றேன்.

இது கடிதமாக இருக்கின்றபடியினாலும் தாங்கள் கேட்டு எழுதுகின்றபடியினாலும், உடல் பற்றி எழுத வேண்டுமென நினைக்கின்றேன், அது நலமாகக் காணப்படுகின்றது. ஆனபடியினால் சுகமாய் இருப்பதாக முடிவெடுக்க வேண்டாம். அது தான் எல்லோருக்கும் வேண்டியதாய் இருக்கின்றது. நிலையாமையைப் பற்றியே அனைவரும் சிந்திக்கின்றோம். இன்புறுகின்றோம். அதையே சகலமுமாய்க் கருதுகின்றோம். வாழ்க்கையில் தத்தளித்துக் கிடந்த எனக்கு துடுப்புக் கிடைத்திருக்கின்றது. அதன்படி விரைவாக எனது பயணத்தை மரணம் நோக்கியதாக்கிக் கொண்டுள்ளேன். எல்லோர் பயணமும் அதை நோக்கியதாக இருந்தாலும், நான் பயமேதும் இன்றி மரணத்தை நோக்கிச் சரியான திசையில் எதிர்கொள்ளச் செல்கின்றேன். தாங்கள் சந்தோசப்பட இதில் நிறையவுள்ளது. பயமொழித்தல் கண்டும், திசையைத் தேர்வு பண்ணியது கண்டும் என்னைப் பாராட்ட வேண்டும். இவற்றுக்கு கனவில் தோன்றிய ஆத்மாவும், கையளிக்கப்பட்ட மரண புத்தகமும் பேருதவியாய் அமைந்தன. மரணம் நெருங்கி இருப்பது ஊர்ஜிதப்படுத்தப்பட்டு விட்டது. அது பற்றி தெரியப்படுத்தவும், உடலைப் பற்றிக் கூறவுமே எழுதத் தொடங்கினேன்.

ஆவி போன பின்னர் எவ்வித காரணத்தினாலும் நாற்றமெடுக்கும் வரை வைத்திருக்க வேண்டாம். அது பலரை சங்கடப்படுத்துவதுடன் வேலையையும், இடைஞ்சலையும் உண்டாக்கும். எரித்துப் போட சிரமப்பட வேண்டாம். அதனால் இறந்து போகாத கலங்களும், உறுப்புக்களும் துடித்துப் போகும். எங்காகிலும் தொங்க விட நேர்ந்தால் சந்தோசப்படுவேன். பலவற்றுக்கு இரையாகும். நாட்டு நிலமையைக் கருத்திற் கொண்டால் முடியாமல் போகலாம். ஆறடிக்குள் போட்டு மண்ணைப் போடுங்கள், சிறு அங்கிகளாவது தின்னட்டும், கறையான்கள் வாய்க்குள் புகுந்து குடலை ஒரு குழுவும், நுரையீரலை இன்னொரு குழுவுமாக அரிக்கட்டும், உணவாகிப் போன திருப்தி இருக்கும். சிந்தனைகளேனும் அவைகளைச் சென்றடையட்டும். மரணம் சந்தோசமானது மட்டுமல்ல, சந்தோசப்பட வேண்டியதும். எப்படியும் என் மறைவு பலரை

ஆவி போன பின்னர் எவ்வித காரணத்தினாலும் நாற்றமெடுக்கும் வரை வைத்திருக்க வேண்டாம். அது பலரை சங்கடப்படுத்துவதுடன் வேலையையும், இடைஞ்சலையும் உண்டாக்கும். எரித்துப் போட சிரமப்பட வேண்டாம். அதனால் இறந்து போகாத கலங்களும், உறுப்புக்களும் துடித்துப் போகும், எங்காகிலும் தொங்க விட நேர்ந்தால் சந்தோசப்படுவேன். பலவற்றுக்கு இரையாகும். நாட்டு நிலமையைக் கருத்திற் கொண்டால் முடியாமல் போகலாம். ஆறடிக்குள் போட்டு மண்ணைப் போடுங்கள், சிறு அங்கிகளாவது தின்னட்டும், கறையான்கள் வாய்க்குள் புகுந்துகுடலை ஒரு குழுவும், நுரையீரலை இன்னொருகுழுவுமாக அரிக்கட்டும், உணவாகிப் போன திருப்தி இருக்கும். சிந்தனைகளேனும் அவைகளைச் சென்றடையட்டும்.

மகிழ்ச்சி கொள்ளச் செய்யக் கூடியது. அதில் எல்லோரையும் இணைந்து கொள்ளச் சொல்லுங்கள். அழுவதனால் பயன் ஏதும் இல்லை. இது தொடர்பில் யாவருக்கும் அறிவித்துள்ளேன். இனிமேல் சந்தோசப் பட்டவனாகவே இருப்பேன். மன உளைச்சலில் இருந்து அந்நியப்பட்டு சந்தோச மரணத்துள் மூழ்கக் காத்திருக்கும்.

- இவன் -

இரண்டாம் இறப்பு எனக்கில்லையாம். சந்ததியில் உயிரணுக்கள் வாழ்ந்து கொண்டிருந்து. அவர்கள் இறப்பதனால் ஏற்படுகின்றதாம். திருமண வயதைத் தாண்டி இருப்பினும் நிகழாதது மகிழ்வாக இருந்தது. என் பாவச் சுமைகளை யாரும் சுமக்க வேண்டிய தேவையிராது போனது. அவைகள் என்னுடனேயே புதைந்து போகும். "அதிலிருந்து நீ பிழைத்ததனால் என் விடுதலை விரைவுபடும்" என்றது ஆத்மா. அதற்கு விரைவாகப் போய்ச்சேர வேண்டுமென்ற நோக்கம் இருந்தது.

மூன்றாம் மரணம் ஏற்பட வாய்ப்பிருந்தது. ஆனாலும், உடலழிந்து ஒரு வாரத்துள் அதுவும் நிகழ்ந்து விடும். அது புகழின் மரணமாக இருக்கும். மாத ஆண்டுக் கணக்காக விவாதிக்கப்படும் அளவிற்கோ, ஆய்வு செய்யப்படும் அளவிற்கோ எதையும் சாதித்திருக்கவில்லை என்பதானால் கூடிய அவகாசம் தேவைப்படாது. ஆனால் திட்டித் தீர்க்கவென கொஞ்சமாவது தேவை. பாரிய பாவங்கள் நிகழ்த்தப்படாவிட்டாலும் செய்தவற்றுக்கு தூஷிக்க ஒரு வார காலம் போதுமானதாயிருக்கும் என எண்ணுகிறேன். அதன் பின் நிகழும் மூன்றாவது மரணத்துடன் முற்றாய் நீங்கிட முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. மீள் பிறப்பு கதைகளுக்கு மட்டும் உரித்தானதாக இருக்க வேண்டும். விஞ்ஞானம் அதை மறுதலிப்பதனால் இன்னமும் மகிழ்வாய் இருந்தது. நிகழினும், அறிந்து கொள்ளக்கூடிய பூர்வ ஜென்ம பாதிப்புகள் ஏற்படாமல் இருப்பின் நல்லதாய்ப் போகும். "உன் மூன்று இறப்புக்களிலும் எனக்கு இடைஞ்சல் இருப்பதாகத் தெரியவில்லை" சந்தோசப்பட்ட ஆத்மா எதிர் கொள்ளத் தயாராகும்படி மறுபடி, மறுபடியும் வலியுறுத்தியது. சகோதரர்களே, ஆத்மாவைப் போன்ற நண்பர்களே.

என் மரணம் குறித்து கவலை கொள்ளாதிருப்பீர்களாக. ஆன்மா போக வேண்டுமென உரைத்ததற்காக நீங்களும் விட்டுப் போக எண்ணுகின்றீர்கள் என்றில்லை. அவ்வாறு எண்ணிக் கொள்வது தான் சாலச் சிறந்தது எனக் கருதுகின்றேன். தங்களனைவரையும் முற்றாகப் புரிந்து கொண்டு நடந்தேன் என்பதற்கில்லை. எனைப் புரிய வழியின்றி முடியாமல் தவித்தேன். என்பது தெரிந்திருக்கும். தங்களுக்காக வேண்டி எவ்வித உதவிகளையும் - முடிந்ததைக் கூட - செய்யவில்லை எனக் கருதுகின்றேன். கவலையீனமும், சோம்பேறித்தனமும் முற்றாக என்றில்லாவிட்டாலும். ஓரளவுக்கேனும் ஆட்கொண்டிருந்தது. என்னால் இழைக்கப்பட்டவற்றுக்கும், கொட்டப்பட்ட வார்த்தைகளின் பொருட்டும் மறுபிறப்பில் பிராயச்சித்தம் தேடமுடியாது. - நம்பிக்கை இல்லை - இவ்வேளையிலேயே மன்னித்து மறந்து போகுமாறு வேண்டிக் கொள்கின்றேன். இன்னமொன்றும் கேட்டுக் கொள்ள வேண்டிய தேவையுள்ளது. ஆத்மாவின் பொருட்டு, உடலின் மரணத்தின் போது அழுது கொண்டிருக்க வேண்டாமாம். அது மகிழ்வாய் வழியனுப்பும்படி கேட்கிறது. இருக்கும் போது பட்ட துன்பம் போதுமாம். புதைக்கப்பட்ட பின்னரும் உடலது செய்கைகளைக் கதைக்க வேண்டாம் என்கிறது. தன்பயணம் இதன் பொருட்டு பாதிக்கப்படலாம் என அஞ்சுகிறது. என் நினைவுள் நீங்கா வடுவாக தங்களிடம் நீடித்திருக்கக் கூடியதல்ல என்பதையும் நான் அறிவேன். அந்தளவிற்கு ஏதும் நிகழ்ந்து விடவில்லை. இவைகள் சாத்தியப்படுத்தக் கூடிய செயல்களாக உள்ளதனாலும், தங்களனைவர் மீதும் கொண்டிருக்கும் நம்பிக்கையின் காரணமாகவும், செயற்படுத்துவீர்களென கருதிக் கொள்கின்றேன் - அவ்வாறே நினைக்க வேண்டியும் உள்ளது.

- இவன் -

ஆட்சி அதிகாரத்துக்கு அ.தி.மு.க வந்ததிலிருந்தே பல்வேறு விமரிசனங்கள் பல்வேறு மட்டங்களிலும் இருந்து வருகிறது. அ.தி.மு.க. ஆட்சியின் கவனயீர்ப்புக்குரிய நடவடிக்கைகளும் நடந்து கொண்டு தான் இருக்கிறது. அரசியல் மற்றும் அதிகார வர்க்கத்தின் முக்கிய பொறுப்புகளுக்கு சில பெண்கள் நியமிக்கப்படும் போக்கு உருவாகி வருகிறது.



# கண்டனத்துக்குரிய பாரபட்சம்

அரசியல் மற்றும் அதிகார வர்க்கத்தின் முக்கிய பொறுப்புக்கள் யாவும் ஆண் தலைமைத்துவம் சார்ந்தே இருக்க வேண்டுமென்ற எழுதப்படாத 'சமூகநியதி' பின்பற்றப்படும் போக்கே இதுவரை நடைமுறையில் இருந்துள்ளது. இதையும் மீறி சில உயர் பதவிகளுக்குப் பெண்கள் நியமிக்கப்படும் போது, அதற்கெதிரான கண்டனங்களும் எதிர்ப்புகளும் கிளம்புவதும் நடைமுறையில் இருக்கத்தான் செய்கிறது.

தற்போது முஸ்லிம்களின் வக்ஃப்களை நிர்வகிக்கும் வக்ஃப் வாரியத் தலைவராக, பதோ் சயீத் என்கிற பெண் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ்நாட்டில் தான், ஒரு பெண், வக்ஃப் வாரியத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முஸ்லிம் மக்களால், பள்ளிவாசலுக்காகவும், ஏழைகளின் நலன்களுக்காகவும், பொதுக்காரியங்களுக்காவும் விட்டுச் செல்லப்படும் சொத்துக்களே வக்ஃப் என்று அறியப்படுகிறது. இந்த வகையான சொத்துக்கள் தமிழ் நாட்டில் ஆயிரம் கோடிக்கு மேலாக உள்ளன. அதனை நிர்வகிக்கும் பொறுப்பை தான் தற்போது பதோ் சயீத் ஏற்றுள்ளார்.

இந்த நியமனத்திற்கு சில மட்டங்களில் எதிர்ப்பு கிளம்பி இருக்கின்றது.

வக்ஃப் வாரியத் தலைவர் தமிழகத்திலுள்ள பல பள்ளிவாசல்களுக்குப் போக வேண்டிய நிலைமை உருவாகும். அப்போது அவர் தொழுகையில் கலந்து கொள்ள வேண்டி ஏற்படும். பதோ் சயீத் ஒரு பெண்ணாக இருப்பதால் தொழுகைக்கு அவர் தலைமை தாங்க முடியாது. மேலும் ஷரீஅத் அடிப்படையில், மாதவிடாய்க் காலத்தில் பெண்கள் பள்ளிவாசலுக்கு அனுமதிக்கப்படுவது இல்லை என்பதாலும் பதோ் சயீத் இந்த தலைமைப் பொறுப்பில் இருக்க முடியாது" எனச் சிலர் வாதிடுகின்றனர்.

மத நம்பிக்கைகள் ஆண் பெண் இருபாலாருக்கும் சம அந்தஸ்த்தை தான் வலியுறுத்துகின்றன. நபிகள் நாயகம் காலத்திலேயே பெண்கள் பள்ளிவாசலுக்குச் சென்று தொழுவதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். இந்த நியமனம ஷரீஅத்துக்கு எதிரானது அல்ல. பழமை விரும்பிகள் ஆணாதிக்க பற்றாளர்கள் தான் இந்தப் பதவி நியமனத்தை எதிர்க்கிறார்கள் என வாதிடும் முஸ்லிம் சகோதரர்களும் உண்டு.

பதோ் சயீத் தனது பதவிக்கான பொறுப்புகளை விளக்கும் போது இந்தப் பிரச்சினை ஆண் - பெண் பேதத்தால் வந்ததல்ல. வக்ஃப் வாரியத் தலைவராக நான் ஆற்ற வேண்டிய மதரீதியான கடமைகள் எதுவுமே இல்லை இது ஒரு நிர்வாக கடமை மட்டுமே"" என்கிறார்.

ஒரு பெண்ணை நியமிக்கக் கூடாது என்று சொல்பவர்கள் அதற்கு இஸ்லாம் பற்றிய ஞானம் வேண்டும் என்று சொல்கிறார்கள். அறிவையும் ஞானத்தையும் ஒட்டு மொத்தமாக ஆண்கள் குத்தகைக்கு எடுத்து விட்டார்களா? பெண்களுக்கு இஸ்லாம் பற்றிய ஞானம் இருக்காதா? என பதோ் சயீத் கேட்பதில் நியாயம் உண்டு.

நிர்வாகத்துறை சார்ந்த பொறுப்புக்கு ஒருவரை பிறப்பின் அடிப்படையில் பால் சார்ந்து பெண் எனக் கருதி அவர் தகுதி இல்லை என வாதிடுவதை மனித உரிமை மீறல் பிரச்சினையாகத்தான் பார்க்க வேண்டும். ஆண் தலைமைத்துவத்தின் சகிப்புணர்வற்ற தன்மை, மதம் சார்ந்த நம்பிக்கைகளுக்குள் புகுந்து கொள்வது அயோக்கியத்தனமானது.

வக்ஃப் வாரியத் தலைவராக பதோ் சயீத் நியமிக்கப்பட்டது வரவேற்கப்பட வேண்டியது ஆகும். அவர் அப்பதவியில் நீடிக்க அனைத்து முற்போக்கு சிந்தனையுள்ளவர்களும் ஆதரவாகக் குரல் கொடுக்க வேண்டும். பிற்போக்கு ஆணாதிக்க மதக்காவலர்களின் கண்டனங்களுக்கு எதிராகப் பெண் உரிமை சார்ந்து குரல் கொடுக்க வேண்டும். வக்ஃப் வாரியத் தலைவர் பொறுப்பு என்பது நிர்வாகக் கடமை சார்ந்தது. மதக் கடமை சார்ந்த பொறுப்பல்ல. ஆகவே தலைமைப் பொறுப்பை, நிர்வாகப் பகிர்வு, அதிகாரத்தில் பங்கு கொள்ளல் என்னும் நிலைகளில் வைத்து புரிந்து கொள்ள வேண்டும். மாறாக அப்பதவியை மதக் கடமைகளுள் ஒன்றாகச் சுருக்கிக் கொள்வது கண்டனத்துக்குரியது. பெண் சமத்துவத்தை அங்கீகரிப்பவர்கள் இந்தப்பாரபட்சக் கண்டனத்துக்கு எதிராக எதிர்ப்பையும் ஆதரவையும் தெரிவிக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பெண் நிலை

- ஔவை

### தமிழ்ச் சூழலில் பெண்ணியத்தின் தோற்றம்

# விடுதலைக்கு மகளிரெல்லாம் வேட்கை கொண்டனம்!

பிரித்தானியர் ஆட்சியின் காலத்தின் பிற்பகுதியில், சிசுமரண வீதமும், பிரசவத்தின் போது இறக்கும் பெண்களின் மரணவீதமும் அதிகரித்தமை முக்கிய கவனத்திற்குரிய விடயங்களாயின. உண்மையில் பெண்கள் மகப்பேறு சம்பந்தமான எந்தவித அறிவையுமோ விளக்கத்தையுமோ கொ0ண்டிருக்கவில்லை. ஆணாதிக்க குடும்ப அமைப்பு முறையின் பாரபட்சத்தினால் பெண்களுக்கு தேவையான அளவு சத்துணவும் கிடைப்பதில்லை. தந்தையும், கணவனும், மகனும் உண்டபின் கிடைத்த மீதியையே தாயும், மனைவியும், மகளும் உண்டனர். இதனால் பெண்கள் போசாக்கின்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். பெண்கள் பருவமடைந்த பின்னும் பிரசவத்தின் பின்னுமே நன்கு கவனிக்கப்பட்டனர். ஆண்களது சந்ததியை வளர்ப்பதற்கு இந்த இரண்டு சந்தர்ப்பங்களுமே முக்கியமானவையாக கருதப்பட்டமையால் பெண்களுக்கு இக்காலத்தில் சலுகைகள் கிடைத்தன. எனினும் உணவு பற்றி, சுகாதாரம் பற்றி விஞ்ஞானபூர்வ விளக்கமின்றியிருந்த பெண்களால் தொற்று நோய்களில் இருந்தும் பிரசவகாலம் சிக்கல்களில் இருந்தும் தப்ப முடியவில்லை. பெண்களின் மாதவிடாய்க்காலம் பெண்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்தது. வீட்டின் இருண்ட மூலை அறைக்குள், கரியினால் கோடுகீறி அடிப்படைவசதிகள் எதுவுமின்றி பெண்கள் இருத்தப்படுவார்கள். இக்காலத்தில் பெண்கள் தீண்டத்தகாதவர்களாக கருதப்பட்டனர். வீட்டிலிருந்து விலத்தப்பட்டவளாகவும், கீழ்ச்சாதியரைப் போன்றவளாகவும் பெண் கருதப்பட வேண்டுமென சமயத்தில் முக்கியமாக இந்து சமயத்தில் வலியுறுத்தப்பட்டது. இதை குடும்பத்திலுள்ள அனைவருமே ஏற்றுக் கொண்டனர். அல்லது ஏற்றுக் கொள்ள வைக்கப்பட்டனர். மாதவிடாய்க் காலத்தில் பெண்கள் நடந்து கொண்டவிதம் மிகவும் ஆச்சரியத்திற்குரியது. மாதவிடாய் காலத்தில் 6 முழச்சேலையையுமே கொய்து (முடித்து) இடுப்பில் 3 நாட்கள் தொடர்ந்து கட்டியிருந்தனர். சேலையை மாற்றுவதோ, குளிப்பதோ உடலுக்கு தீங்கு விளைவிக்கும் என்று நம்பினார்கள்! இவ்வாறான மூட நம்பிக்கைகளே பிரசவகாலங்களில் பெண்கள் அதிகளவு இறப்பதற்கும் நோயுற்றதற்கும் காரணமாகியது!



19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இவ்வாறான பெண்களின் சுகாதாரக் கேடான நிலைமைகள் பெண்களின் முக்கிய பிரச்சினைகளாக அறியப்பட்டு வெளிக்கொணரப்பட்டன. குமாரி ஜெயவர்த்தனாவின் கருத்துப்படி காலனியாதிக்கத்தின் போது வெளிநாடுகளில் இருந்து பெண்கள் கீழ்வரும் தேவைகளுக்காக இலங்கை இந்தியா போன்ற காலனி நாடுகளுக்கு வந்திருக்கின்றனர்.

1. காலனிய ஆட்சியின் மருத்துவர்களாக.

2. மிஷனரியினரின் வேலைத் திட்டங்களுக்காக.

3. தனிப்பட்ட முறையில் மருத்துவம் செய்வதற்காக.

எல்லோராலும் பெரிதும் அறியப்பட்ட மேரிரட்ணம் 1896களில் மிஷனரி வைத்தியராகவே இலங்கைக்கு வந்தார். இவர் இலங்கையின் சமூக- அரசியல் இயக்கத்தில் ஒரு முன்னோடியாக விளங்கினார். மிஷனரியினரால் இலங்கைக்கு வரவழைக்கப்பட்ட பெண்கள் அருட்சகோதரிகளாகவும் இருந்தனர். இவர்களும் சமய அடிப்படையில் பெண்களுக்கான பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து நடத்தினார்கள். (உதாரணமாக, கொட்டாஞ்சேனையில் 1869இல் இளம் பெண்களின் கல்விக்காகவும், அனாதைகளின் பராமரிப்புக்காகவும், நல்லாயன் கன்னியர் மடம் ஆரம்பிக்கப்பட்டது. அருட்சகோதரிகள் மேரி அனன்சியட்டா மராண்டி, மேரி சுசான் காடிவ், மேரி யூபிரேசியா ஜோசேப், மேரி சேக்ரட் ஹாட்மா ஆகியோரைக் கொண்ட சிறிய குழு ஒன்று 1869 ஏப்ரல் மாதம் காலி துறைமுகத்தில் வந்து இறங்கியது. அதே ஆண்டு மே மாதம் எட்டு பிள்ளைகளுடன் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறு பல பாடசாலைகள் இக்காலகட்டத்தில் கிறிஸ்தவ மிசனரியினரால் பெண்களுக்கு கல்வி வழங்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டன. இந்த ஆரம்ப முயற்சி பெண்கள் மரபுகளிலிருந்து விடுபடுவதற்கான ஆரம்ப கால நடவடிக்கைகளாக அமைந்தன. 19ம் நூற்றாண்டின் இறுதித் தசாப்தத்தில் இவ்வாறாக பலவிதங்களில் பெண்கள் மத்தியில் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இக்காலத்திலேயே பெண்கள் பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதற்காக சிறிய சிறிய குழுக்களாகக் கூடினர். மேரி ரட்ணம் அவர்களின் அயராத உழைப்பினாலேயே இவ்வாறு சிறு சிறு பெண்கள் குழுக்கள் உருவாக்கப்பட்டன.

பெண்களின் சுகாதாரம் சம்பந்தமான விடயங்களே இக்குழுக்களின் பேசுபொருளாக அக்காலத்தில் இருந்தன. 1904ஆம் ஆண்டிலிருந்து வாக்குரிமை தொடர்பாகவும் பெண்கள் சங்கங்கள் இயங்கின. இக்காலத்தில் இலங்கை அரசியலில் முக்கிய பிரதிநிதிகளாக இருந்த ஆண்களினதும் சமூகமாற்றத்தில் அக்கறை கொண்ட ஆண்களினதும் மனைவியரும், புதல்வியரும் வாக்குரிமை சம்பந்தமான விவாதங்களில் பங்குபற்றினர். இவர்களே அரசியல் கட்சிகளிலும் முக்கியமானவர்களாக இருந்தனர். உதாரணமாக தமிழ்ச்சூழலில் மேரி - ரட்ணம், திருமதி ஈ.ஆர்.தம்பிமுத்து, திருமதி.நல்லம்மா சத்திய வாகீஸ்வரஐயர், மங்களம்மாள், மீனாட்சி அம்மாள். நடேசையர், நேசம் சரவணமுத்து, த.வேதநாயகி போன்றோர் பெண்கள் சம்பந்தமான முற்போக்கான கருத்துக்களைக் கொண்டிருந்த பெண்களாவர். இவர்களது கருத்துநிலைகளின் வலுவாக்கத்திற்கு குடும்பச்சூழலும் உவப்பாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

பெண்களின் சீர்திருத்த வேலைகள் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட சிறுபெண்கள் குழுக்கள் விரிவடைந்து வாக்குரிமைப் போராட்டங்களில் பங்கேற்கத் தொடங்கியது. கட்சி அரசியலிலும், ஆட்சிகளிலும் கணிசமான அளவு பெண்கள் பங்கேற்கத் தொடங்கினர். தமிழ்ச்சூழலில் கட்சிகள் பரவலாக இயங்கத் தொடங்க அதில் பங்கேற்ற பெண்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. எனினும் இந்த 20ம் நூற்றாண்டின் ஆரம்பக் கால கட்சிகள் எவையும் பெண்ணியச் சிந்தனைகளின் அடிப்படையில் அமைக்கப்படவில்லை. அவை பெண்கள் உரிமையை முதன்மைப் படுத்தவும் இல்லை. சமூக மாற்றம் என்ற பொது இலக்கின் அடிப்படையில் பெண்கள் கட்சிகளில் இணைந்தனர். கட்சிப் போராட்டங்களின் போது ஊர்வலம் செல்லவும், கட்சியில் பெண்களுக்குரிய வேலைகளைச் செய்யவும் பெண்கள் தேவைப்பட்டனர். கட்சிகளில் வேலைக்கு செல்லும் பெண்கள் 'அடக்கமில்லாதவர்களாக' வே வெளியாரால் கணிக்கப்பட்ட நிலை நிலவியது.

20ம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் பாரதியின் பெண்ணியச் சிந்தனைகள் பாடல்களினூடாகவும், மேடைகளினூடாகவும் ஈழத்தமிழர்களிடையே பரவத்தொடங்கியது. பத்திரிகைகளிலும், மேடைப்பேச்சுகளிலும் பாரதியின் பெண்ணியச் சிந்தனைகள் பரவலாகப் பேசப்பட்டன. 1938ம் ஆண்டு ஈழகேசரி ஆண்டு மடலில் த.வேதநாயகியால் எழுதப்பட்ட 'பெண் மக்களை வாழவிடு' என்ற கட்டுரையில் பாரதியின் 'விடுதலைக்கு மகளிரெல்லாம் வேட்கை கொண்டனம்' என்ற கவிதையின் வரிகள் எடுத்தாளப்பட்டுள்ளதைக் காணலாம். ❍

## மறுபக்கம்

- ஆழ்வார்க் குட்டி

# தொலைக்காட்சியினால் வடிகட்டப்படும் தமிழ் சினிமா

வாழ்க்கை ஏற்றமும் இறக்கமும் நிறைந்தது என்கிறோம். தமிழ்ச் சினிமாவின் போக்கு குறிப்பிடத் தகுந்த சில விஷயங்களில் இதை நிரூபிப்பது போன்று அமைந்துள்ளது.

நேர்த்தியாகப் பின்னப்பட்ட 'கதை" ஒன்று இல்லாமல் சினிமா இல்லை. மிக மட்டமான ஜனரஞ்சகச் சினிமாவும், கலாபூர்வமானது என பண்பட்ட ரசிகர்களால் கருதப்படும் சினிமாவும், மற்றைய எந்த சினிமாத்துவ அம்சங்களை விடவும் 'கதை" யின் மீதே தமது அடித்தளத்தைக் கொண்டுள்ளன.

தொழில்நுட்பம், பெரும் முதலீடு போன்றவற்றில் அதீத நம்பிக்கை வைத்து எடுக்கப்படும் சினிமாக்கள் தொடர்ச்சியான வெற்றியை வர்த்தக ரீதியில் தருவது இல்லை. கலைத்துவம், நுகர்வோருடனான ஊடாட்டம் போன்றவற்றில் இவ்வாறான சினிமாக்கள் எதையும் சாதிப்பதுமில்லை.

தமிழ் சினிமாவின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் - இந்திய சினிமா என்னும் தளத்துக்கும் இதை பருமட்டாகப் பிரயோகிக்கலாம் - பெருங்கதையாடல். பண்புகளின் நீட்சி பெருஞ் செல்வாக்கு செலுத்தியது. காவியம், புராணபடலம், நாடகம் போன்றவற்றின் நீட்சியாகவே தமிழ்ச் சினிமா தோற்றம் பெற்றது.

சினிமா என்னும் ஆற்றல் மிகு ஊடகத்தின் உச்ச பண்புகளும், பயன்பாடும் தமிழ்ச் சமூகத்துக்கு இன்னும் கிடைக்கவில்லை.

எனினும், நல்ல சினிமாப் படங்கள் தயாரிக்கப் படுதலுக்கான பகைப்புலனை உருவாக்கும் முயற்சியில் இடைவிடாத, ஆனால் நொய்மையான தொடர்ச்சி ஒன்றைப் பேணுவதில் சில இயக்குனர்களும், தயாரிப்பாளர்களும் ஈடுபட்டே வந்துள்ளனர்.

கோபாலகிருஷ்ணன், பீட்சிங், ஸ்ரீதர், பாலசந்தர், ஜெயகாந்தன், பாரதி ராஜா, பாலுமகேந்திரா, மகேந்திரன், வசந்த், அகத்தியன், பாலா, தங்கர் பச்சான் என நீளும் இவ்வரிசையை நாம் அடையாளம் காணலாம். இவர்கள் யாவரும் சினிமாவில் 'கதை"யின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்து கொண்டவர்கள்.



கடந்த தசாப்தத்தில் தொலைக் காட்சித் தொடர்கள் பெருகியிருக்கின்றன. சினிமா ரசிகர்களில் மிகவும் பெரும்பான்மையானவர்களை அவை ஆட்கொண்டு விட்டன.

சினிமா கதி கலங்கிப் போயிருக்கிறது. தன்னை மீளவும் கட்டியெழுப்ப சில மாற்றுவழிகளை அது தேடுகிறது. புது முகங்களை சகல துறைகளிலும் அறிமுகப்படுத்துகிறது. 'பிரமாண்டமான" உணர்வைத் தரும் வகையில் தனது தயாரிப்புகளின் படமாக்கல் உத்திகளை திசை திருப்புகிறது. இதைத்தான் தொழில் நுட்ப வளர்ச்சி என நாம் மேம்போக்காக அழைக்கின்றோம்.

தொலைக் காட்சி நாடகங்கள், சினிமாவுடன் ஒப்பிடப்படும் பொழுது சினிமாத்துவ அம்சங்களை வெளிப்படுத்துவதில் பலவீனமானவை. ஒளியூட்டல் படத்தொகுப்பு முதலியவற்றில் இந்தப் பலவீனம் துலாம்பரமாக உணரப்படுகின்றது. எனவே 'கதை" அம்சத்திலேயே தமது உயிரை வைத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தொலைக் காட்சித் தொடர்கள் ஆளாகின்றன.

எனவே 'வெங்காயத்தனமான" கதைகளை அவை சுவீகரித்துக் கொள்கின்றன. தொலைக் காட்சித் தொடர்களின் நிரந்தரமான பிரதான நுகர்வோர்களான 'இல்லத் தரசிகள்" சமையலுக்கு வெங்காயம் நறுக்குவதிலிருந்து ஓய்வு கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் இத்தொடர்களின் புண்ணியத்தால் மேலும் கண்ணீர் பெருக்குகின்றனர். அழுவது மனஅழுத்தத்தைக் குறைக்கும் என்கிறார்கள் மனநல மருத்துவர்கள். கண்ணீர் சுரப்பிகளின் அதிகரிப்பு செயற்பாடு கண்களை தூய்மையாக்குகின்றன என்கின்றனர் கண் வைத்தியர்கள். எனவே 'இரத்தக் கண்ணீர" வரும்வரை நாம் இவற்றை ரசிக்கலாம்.

தமிழ்ச் சினிமாவும் இத்தகைய 'வெங்காயக்" கதைகளை பெரும்பாலும் நம்பியிருந்தது. தொலைக் காட்சித் தொடர்கள் இவற்றை வடிகட்டிப் பயன்படுத்த ஆரம்பத்திலிருந்து தமிழ் சினிமாக் காரர்கள் மேலும் நெருக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதன் பயனாக ஒரு நன்மை விளைந்துள்ளது 'நல்ல கதை"களை நோக்கி தமிழ்ச் சினிமாவின் பார்வை இப்போது திரும்பியுள்ளது போலப் படுகின்றது.

தங்கர் பச்சானின் தகுந்த அண்மையில் வெளியாகியுள்ள 'அழகி" இதற்கு ஒரு உதாரணம், பாடல் காட்சிகளையும், நகைச் சுவைச் காட்சிகளையும் நீக்கி விட்டால் நடுத்தர சினிமாவுக்கு சற்று மேம்பட்ட ஒரு தளத்தில் 'அழகி" சினிமாவை நாம் தயக்கமின்றி ஏற்றுக் கொள்ளலாம்.

எனினும் தொலைக் காட்சித் தொடர்களின் காரணமாக தமிழ்ச் சமூகத்தின் பெரும்பான்மையான ரசிகர்கள் 'வெங்காயத்" தனமான கதைகளாலேயே பரவசப்படும் நிலை தொடரத்தான் போகின்றது.

தமிழ்ச் சினிமாவில் ஏதாவது ஒரு ஆரோக்கியமான அம்சம் வெளிப்படும் போது, பெரும் சினிமா நிறுவனங்களும் நட்சத்திர நடிகர்களும் தகுந்த எதிர் வினைகளை ஆற்றி தொடர்ந்து தமது நலன்களை பேணிப் பாதுகாப்பதில் முனைப்புக் காட்டுவதே இதுவரை உள்ள வரலாறு.

இன்றைய இக்கட்டான நிலையில் அவர்களது உத்திகளை பொறுத்திருந்து பார்க்க வேண்டும். அனேகமாக பாலியல் வக்கிரங்களை அதிகளவில் அவர்கள் பயன்படுத்தக் கூடும். தற்சமயம் கொழும்பின் திரையரங்குகளில் காண்பிக்கப்படும் 'கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்" திரைப்படங்கள் அவ்வாறு எண்ணத் தூண்டுகின்றன.

இப்போக்கின் உச்சப் பயன்பாட்டை அறுவடை செய்து சொல்வதில் 'ஸ்ரீலங்கா" திரைப் படக்கூட்டுத்தாபனம் முண்டியடித்துக் கொண்டு செயல்படுகின்றது. சக்தி தொலைக்காட்சி சில காலங்களுக்கு முன் 'இப்படிக்கு நீங்கள்" நிகழ்ச்சியின் மூலம் ஒரு தடவை இந்த அம்சத்தில் சரிசனை எடுத்தது அது வேறு தளங்களிலோ ஊடகங்களிலோ தொடர்வதைக் காணோம்.

நமது அரசியல் தலைவர்களும், தமிழின் பழம் பெருமை பேணும் கழகங்களும், மாமன்றங்களும் எங்கே போயினர்.


இதனால் ஏற்படும் மனவருத்தத்தையும், மனஅழுத்தத்தையும் போக்க தொலைக்காட்சித் தொடர்களை பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ என்னவோ! ❍

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திருமணங்களை சட்டவிரோதமாக்க வேண்டும்!



பார்ப்பான் நம்மை எப்படிக் கீழ்சாதி என்று கூறி அடிமை வேலை வாங்குகிறானோ, அதைப் போலத்தான் மக்களில் சரிபகுதி எண்ணிக்கையுள்ள பெண்களை நடத்தி வருகிறோம். பெண்கள் என்றால் வெறும்குட்டி போடும் கருவி என்று தான் நடத்தி வருகிறோம். பெண்களும் கணவன்மார்கள் நகை, நட்டு வாங்கிக் கொடுத்தால் போதும் என்கிற அளவுக்குத் தங்களைக் குறுக்கிக் கொண்டு விட்டார்கள்.

மதமும் கடவுள் சங்கதியும் மனித சமூகத்தின் வளர்ச்சியைப் பெரிதும் தடுத்து நிறுத்தி விட்டன. குறிப்பாக, பெண்கள் சங்கதியை எடுத்துக் கொள்ளுங்கள். பார்ப்பான் நம்மை எப்படிக் கீழ்சாதி என்று கூறி அடிமை வேலை வாங்குகிறானோ, அதைப் போலத்தான் மக்களில் சரிபகுதி எண்ணிக்கையுள்ள பெண்களை நடத்தி வருகிறோம். பெண்கள் என்றால் வெறும் குட்டி போடும் கருவி என்று தான் நடத்தி வருகிறோம். பெண்களும் கணவன்மார்கள் நகை, நட்டு வாங்கிக் கொடுத்தால் போதும் என்கிற அளவுக்குத் தங்களைக் குறுக்கிக் கொண்டு விட்டார்கள்.

பிராமணன் - சூத்திரன் என்ற அமைப்புக்கும் பேதத்திற்கும், புருஷன் - பெண்டாட்டி என்ற விகிதத்துக்கும் எந்தவித வேறுபாடும் கிடையாது! உலகத்திற்குப் பயன்படும்படியான பேர் பாதி மனித சக்தியை, பெண்ணடிமை மூலம் நாம் விரயப்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

இதற்கு ஒரு பரிகாரம் என்னவென்றால் 'கலியாணம்' என்பதையே சட்ட விரோதமாக ஆக்க வேண்டும். இந்தக் 'கலியாணம்' என்ற அமைப்பு முறை இருப்பதால் தான், கணவன் - மனைவி என்ற உறவும், பெண் அடிமைத் தன்மையும் உருவாகிறது. இந்தக் கலியாண முறை இருப்பதால் தானே குழந்தை குட்டிகள் - அவற்றுக்குச் சொத்துகள் சம்பாதிப்பது - அதுவும் எதைச் செய்தாவது சம்பாதிப்பது என்ற சமுதாய ஒழுக்கக் கேடுகள் எல்லாம் ஏற்படுகின்றன.

இந்தக் கல்யாண முறையை இந்த நாட்டில் ஏற்படுத்தியதே பார்ப்பன் தான். சாஸ்திரங்களில் சூத்திரனுக்கு கல்யாண முறையே இல்லையே!

தொல்காப்பியத்திலே கூறப்பட்டு இருக்கிறதே 'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் அய்யர் யாத்தனர் கரணம் என்ப' என்று இருக்கிறதே. 'மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம் கீழோர்க் காகிய காரணமும் உண்டே' என்றும் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. இவற்றில் இருந்தெல்லாம், சூத்திரர்களுக்குத் திருமணம் என்ற அமைப்பே இல்லாதிருந்தது என்பது தான் தெளிவாகத் தெரிகிறது.

பெரும் பகுதி மக்களைச் சூத்திரனாக்க உடலுழைப்புக்காரனாக்க எப்படிப் பார்ப்பான் சாத்திரங்கள் செய்தானோ அதைப் போல்தான் பெண்களை அடிமையாக்க 'கலியாணம்' என்ற முறையும் ஏற்படுத்தப்பட்டது.

இந்த நாட்டிலே ஒரு பெண்ணானவள் பதிவிரதையாக இருக்க வேண்டும் என்றால், அவள் எவ்வளவுக்கு எவ்வளவு அடிமை உணர்வோடு இருக்கிறாளோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவள் உயர்ந்த பதிவிரதையாகப் பாவிக்கப்படுகிறாள். இதைத்தான், நமது இதிகாசங்களும் புராணங்களும் சாஸ்திரங்களும் வலியுறுத்துகின்றன.

வள்ளுவனிலிருந்து ஒவ்வொரு பெரிய மனிதனும் பெண்ணை அடிமைப் பொருளாகத்தான் கருதியிருக்கிறானே தவிர, ஆண்களோடு சரிசமானமான உரிமையுடையவர்களாகக் கூறவில்லையே. ஆணும் பெண்ணும் சம உரிமை இல்லாத உலகில் சுதந்திரத்தைப் பற்றிப் பேச எவனுக்கு யோக்கியதை இருக்கிறது?

முஸ்லிமை எடுத்துக் கொண்டால், பெண்களை உலகத்தைக் கூடப் பார்க்க விட மாட்டேன் என்கிறானே! முகத்தை மூடி அல்லவா சாலையில் நடமாட விடுகிறான். இதை விடக் கொடுமை உலகில் ஒன்று இருக்க முடியுமா?

நம் நாட்டு யோக்கியதைதான் என்ன? ஏழு வயதிலேயே பெண்களைக் கல்யாணம் செய்து கொடுத்து விட்டு, அன்றைக்கு இரவே சாந்தி முகூர்த்தம் வைத்து விடுவானே.

பெண்களுக்காவது உணர்ச்சி வர வேண்டாமா? சிங்காரிப்பது - ஜோடித்துக் கொள்வது சினிமாவுக்குப் போவது என்பதோடு இருந்தால் போதுமா? தாங்களும் சம உரிமை உடையவர்கள் என்ற உணர்ச்சி வர வேண்டாமா?

"நான் 1932இல் ஜெர்மனி சென்றிருந்தேன். அப்போது ஒரு வீட்டில் தங்கியிருந்தேன். அந்த வீட்டுக்காரர்களை விசாரித்தேன். அவர்கள் தங்களை "Propposed Husband and Wife" என்கிறார்கள். அப்படி என்றால், என்ன அர்த்தம்? என்று கேட்டேன். "நாங்கள் உண்மையான கணவன் மனைவியாகத் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பு ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொள்ள நாங்கள் பயிற்சி பெறுகிறோம்." என்றார்கள். 'எவ்வளவு காலமாக' என்று கேட்டேன். 'எட்டு மாதமாக' என்கிறார்கள். எப்படி இருக்கிறது பாருங்கள்? அந்த நாடு முன்னேறுமா? 'பதிவிரதம்' பேசி பெண்களை அடிமையாக்கும் இந்த நாடு முன்னேறுமா?

# பேராசிரியர் சிவசேகரம் அவர்களின் பரிந்துரை பற்றிய சில சந்தேகங்கள்

-காவலூர் ராசதுரை

பேராசிரியர் சி. சிவசேகரம் அவர்களின் 'அபராதி நானல்ல" என்னும் நூலைப் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அந்நூலின் முன்னுரை போல விளங்கும் 'அவர்களது கதையும் எங்கள் கதை தான்" என்னும் பகுதியைப் படித்தபோது என் மனதில் எழுந்த சில சந்தேகங்களுக்குத் தெளிவு பெறும் பொருட்டு இதனை எழுதுகிறேன்.

தென் அமெரிக்காவிலுள்ள Chile என்னும் நாட்டைச் சிலி என்றே பெரும்பாலானோர் அழைக்கக் கேட்டிருக்கிறேன். சென்னைப் பல்கலைக்கழக ஆங்கில தமிழ்ச் சொற் களஞ்சியத்திலும் சிலி என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. பேராசிரியர் அவர்கள் சிலே என்று குறிப்பிட்டுள்ளார். இதனை அச்சுப்பிழை எனக் கொள்வதற்கில்லை. ஏனென்றால், பேராசிரியர் 1974 - 75 ஆம் ஆண்டு தொட்டு சில எழுத்து முறைகளைப் பரிந்துரைத்து வருவதாக மேற்சொன்ன பகுதியின் கடைசிக்கு முந்திய பந்தியில் குறிப்பிடுகிறார். உதாரணங்களாய் Tyre - T யர், Phone - ேFான், Bath Room - Bாத் றூம் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டுகிறார்.

இவ்வாறு ஆங்கில எழுத்துக்களை மட்டுமல்லாமல் சிங்கள எழுத்துகளின் பாகங்களையும் பேராசிரியர் பரிந்துரைக்கிறார். உதார்ணங்களாக Fascist - Fஸிஸ்ற், Thanks - தூங்க்ஸ் ஆகிய சொற்களைக் குறிப்பிடுகிறார். இவற்றை விளங்கிக் கொள்வதில் வாசகர்கட்குச் சிரமம் இருந்ததில்லை என்பதே எனது நியாயம், விஞ்ஞான ரீதியான, முழுமையான, தெளிவான, எளிமையான ஒரு தீர்வு வரும் வரை, இத்தீர்வையே கடைப்பிடிக்க எண்ணுகிறேன்." என்று சொல்கிறார்.

பேராசிரியர் அவர்களின் தீர்ப்புக்கு எதிர் நியாயம் பேசும் தகைமையோ ஆற்றலோ அடியேனுக்கு இல்லை. ஆயினும் பேராசிரியர் எதிர்பார்க்கும் தீர்வு எங்கிருந்து, யாரால் கொண்டு வரப்படும் என்பது அடியேனுக்கு விளங்கவில்லை. அடியேன் அறிந்த வரையில் தமிழ் அறிஞர்களும் தமிழைப் புழங்கும் மக்களும் பேராசிரியர் பரிந்துரைக்கு முன்னரே சில பரிகாரங்களை முன் வைத்துள்ளார்கள். அவை பல வருட காலமாகக் கடைபிடிக்கப்பட்டும் வருகின்றன.

ஆங்கில மொழியின் ஊடுருவல் நிகழ முன்னரே வடமொழியின் செல்வாக்கைத் தமிழ் மொழி எதிர்நோக்க நேர்ந்தது. அதன் விளைவாக ஜ,ஸ்ரீ,ஷ,ஸ,ஹ, ஆகிய எழுத்துக்கள் தமிழ் நெடுங்கணக்கிற் சேர்த்துக் கொள்ளப்பட்டன. இவ்வாறே ஆங்கில மொழியின் மேலாதிக்கம் ஏற்பட்ட போதும் B,F,G,H,T,W,Y,Z, ஆகிய ஒலிக்குறிகளுக்கு நிகரான எழுத்துகள் தமிழில் இல்லையே என்று ஆங்கில மோகிகள் ஆதங்கப்பட்டார்கள். (இங்கே மோஹிகள் என எழுதாமல் மோகிகள் என்று எழுதியமைக்குக் காரணம் 'கி" என்னும் எழுத்தில் 'ஹ" என்னும் அட்சரத்தின் ஒலி தொனிப்பதாகும் - காகம் என்பதில் 'ஹ" ஒலி இருப்பதைப் போல) ஆயினும் இந்தப் பிரச்சினை பேராசிரியரின் பரிந்துரைக்கும் பல காலத்துக் முன்னரே முடிந்ததொன்றாகும். உதார்ணமாக T "என்னும் எழுத்தின் ஒலியை யாழ்ப்பாணத்தவர்கள் 'ர" மூலமும் தமிழ் நாட்டவர்கள் 'ட" மூலமும் குறிக்கிறார்கள். T.M.சௌந்தரராஜனை நாம் ரி.எம்.சௌந்தரராஜன் என்போம். தமிழ் நாட்டவர்கள் டி.எம்.சௌந்தரராஜன் என்பர். இந்தியாடுடே என ஒரு தமிழ்ப் பத்திரிகை கூட தமிழ் நாட்டிலிருந்து வெளிவருகிற தென்பதைப் பேராசிரியர் அறிந்திருப்பார் என நம்புகிறேன். இது சரியோ தப்போ என்பது வேறு விடயம்! இவ்வாறே F இன் ஒலிக்கு ஃ என்னும் ஆயுத எழுத்தை 'ப" வுக்கு முன் சேர்த்து எழுதி வருகிறார்கள். பேராசிரியரின் மேற்படி நூலை வெளியிட்ட தேசிய கலை இலக்கியப் பேரவையினர் கூட டோர்ஃபன் என்னும் பெயரில் வரும் F ஒலிக்கு இந்த ஆயுத எழுத்தைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். பேராசிரியரோ 'டோர்Fமன்" என்று எழுதியுள்ளார். இவ்வாறே Tooth Brush ஐ Tூத் Bறஷ் என்றும் Good Night ஐ Gூட் நைற் என்றும் எழுதுகிறார். இவற்றுக்குப் பதில் ஆங்கிலச் சொற்களை அப்படியே உபயோகிக்கலாமே!

கணிப்பொறியின் வருகைக்குப் பின்னர் இவ்வாறான "விளையாட்டுக்கள்" சாத்தியமாகியுள்ளன என்பது உண்மையே. ஆயினும் இப்படி எழுதும் போது விசைப்பலகையை (அதாவது கீபோட்டை) அந்தந்த மொழிக்கு ஏற்றவாறு ஒழுங்காக்க வேண்டும். மேலும் சிங்கள நெடுங்கணக்கில் உள்ள ˏ என்னும் ஒலிக்குறியைத் தமிழ் பேசும் நல்லுலகில் எத்தனை பேர் அறிவர்/ எத்தனை பேர் மும்மொழியிலும் கணனியைக் கையாளும் திறமை பெற்றிருக்கிறார்கள்.

கணிப்பொறியின் வருகைக்குப் பின்னர் இவ்வாறான 'விளையாட்டுக்கள்" சாத்தியமாகியுள்ளன என்பது உண்மையே. ஆயினும் இப்படி எழுதும் போது விசைப்பலகையை (அதாவது கீ போட்டை) அந்தந்த மொழிக்கு ஏற்றவாறு ஒழுங்காக்க வேண்டும். மேலும் சிங்கள நெடுங்கணக்கில் உள்ள ˏ என்னும் ஒலிக்குறியைத் தமிழ் பேசும் நல்லுலகில் எத்தனை பேர் அறிவர்? எத்தனை பேர் மும்மொழியிலும் கணனியைக் கையாளும் திறமை பெற்றிருக்கிறார்கள்? எத்தனை கணனிகள் மும்மொழிகளையும் அச்சிடத் தேவையான எழுத்துத் தொகுதிகளைக் கொண்டிருக்கின்றன? தவிரவும், இப்படி மொழிக்கு மொழி விசைப்பலகையை மாற்றும் போது நேரம் வீணாகிறதன்றோ!

இந்த நேர விரயம் கருதியே அண்மையில் எழுத்துச் சீர்திருத்தம் செய்யப்பட்டது. இதற்கமையவே இப்பொழுதெல்லாம் 'லை" என்றும் 'னா" என்றும் என்னைப் போன்ற 'பழசுகள்" எழுத வேண்டியுள்ளது. இன்னொரு விடயத்தையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். அணைக்கட்டு, மிளகு தண்ணீர், கட்டுமரம், பறையன் போன்ற தமிழ்ச் சொற்கள் ஆங்கிலச் சொற்களஞ்சியங்களில் இடம் பிடித்துள்ளன. இவற்றை ஆங்கிலம் பேசுவோர் தங்களுக்கு இசைவான முறையில் Anicut, Catamaran, Mulligutawny, Pariah என்றே ஆங்கிலமயப்படுத்தி உபயோகிக்கிறார்கள். மேலும் எம் மொழியிலுள்ள சிறப்பு 'ழ" கரத்தை பிறமொழியாளர் எவரும் தம் மொழியிற் சேர்த்ததாக அறியேன். ஆங்கில மொழியில் இந்த எழுத்தின் ஒலியை 'zh" ஆகிய அட்சரங்களாற் குறிக்கிறோம்.

ஆங்கில மொழி இன்று சர்வவியாபகம் பெற்று வருகிறதென்பது உண்மையே. கிராமப் புறங்களில் சாதாரண மக்களும் தம் அன்றாட பாவனையில் பல ஆங்கிலச் சொற்களை உபயோகிக்கிறார்கள். ஆனால் அவர்கள் அச் சொற்களைத் தமிழ் மயப்படுத்தி உபயோகிக்கிறார்கள். உதாரணமாக பேராசிரியர் 'bஸ்" என எழுதக் கூடிய bus வண்டியை அவர்கள் வசு என்றோ பஸ் என்றோ சொல்கிறார்கள். இவ்வாறே மலையக மக்கள் Badulla ஐ பதுளை என்பர். Hatton ஐ அட்டன் என்பர்.

மேலும் F, T, போன்ற எழுத்துகள் மெய் எழுத்துகள், உயிர் மெய் எழுத்துகள் அல்ல. எனவே Tயர் என்றால் டயர் அல்லது ரயர் ஆகாது. இவ்விதமே Fஸிஸ்ற் என்றால் பாசிஸ்ற் ஆகாது. இதனை உணர்ந்தே டோர்Fமன் என்னும் பெயரில் வரும் F மீது பேராசிரியர் புள்ளிக்குறி இட்டிருக்கிறார். இவ்வாறு பேராசிரியரே தடுமாறும் போது அடியேனைப் போன்ற பாமரர்கள் யாது செய்வர்?

## நட்புடன் தோழிகளுக்கு !

2002 ஆம் ஆண்டில் வெளிவர இருக்கும் பெண்கள் சந்திப்பு மலருக்கான ஆக்கங்களை சேகரிக்க ஆரம்பித்துள்ளோம். இந்தத் தடவை மலரை பால்வினைத் தொழில் பற்றிய விடயதானங்களை உள்ளடக்கிய ஒன்றாக வெளிக் கொணர உத்தேசித்துள்ளோம்.

இது பற்றிய உங்கள் படைப்புக்கள் (கவிதை, கட்டுரை, சிறுகதை, ஓவியம், புகைப்படம் ,நாடகம்) கருத்துக்கள் நேர்காணல்கள் மற்றும் ஆவணச் சேகரிப்பு (இலங்கை, இந்தியா, ஐரோப்பா, கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா) புள்ளிவிபரங்கள் ஆகியவற்றை காலதாமதமின்றி அனுப்பி ஒத்துழைத்து உரிய நேரத்தில் இம் மலர் காத்திரமாக வெளிவர உங்கள் பங்களிப்பை வழங்குங்கள்.

நன்றி

அஞ்சல்வழி
பெண்கள்சந்திப்புமலர் 7
சக்தி
Boks - 99 Oppsal
0619 Oslo, Norway
Tel - 004723300676

தொடர்புகளுக்கு
மின்னஞ்சல்வழி.
Pennkalchanthipumalar@yahoo.com.au

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தரமான திரைப்படமாக இல்லையென்றால் எதிர்த்துக் குரல் எழுப்புங்கள்!



– நெறியாளர் அகத்தியன் –

***உங்கள் பயணத்தில் இந்த இடத்தை அடைவதற்கு நீங்கள் ஒரு விலையைக் கொடுத்திருப்பீர்கள் அல்லவா? அதைப் பற்றி...***

நான் கொடுத்த விலைகளைப் பற்றி நிறையச் சொன்ன போது நண்பர்கள் என்னிடம் சலித்துக் கொண்டார்கள். துன்பங்களைத் தாங்கிக் கொள்வது தான் வெற்றியை நெருங்குவதற்கு உரியவழி என்பதை நண்பர்களுக்கு உணர்த்தவே அப்போது அவற்றை நான் சொன்னேன். "ஒரு பெட்டிக்கடையை வைத்துப் பிழைத்துக் கொள்வதை விட்டுவிட்டு மூன்று பெண் குழந்தைகளுடன் இப்படித் துன்பப்படுகிறாயே" என்று என்னைப் பார்த்து மற்றவர்கள் சொன்னபோது கூட 'நாம் சாதிக்க வேண்டிய ஏதோ ஒன்று காத்திருக்கிறது.' என்ற நம்பிக்கை என்னை விட்டுப் போகவில்லை.

***ஐம்பது ஆண்டுகளுக்கு முன் தமிழ்த் திரையுலகில் படைப்பாளிகள் கருத்து ரீதியாக எந்த சமரசத்தையும் செய்து கொள்வதில்லை. அதற்கு 1952இல் கலைஞரின் கதைவசனத்தில் வெளிவந்த "பராசக்தி" மிகத் தெளிவான எடுத்துக்காட்டு. பி.ஏ.பெருமாள் முதலியார் என்ற காங்கிரஸ்காரர் அதன் தயாரிப்பாளராக இருந்தும், படம் முழுக்கப் பகுத்தறிவுச் சிந்தனையும், அன்றைய ஆளுங்கட்சியான காங்கிரசுக்கு எதிரான பிரச்சாரமும் நிறைந்திருந்தது. ஆனால் இன்று மிகச் சாதாரணமான காரணங்களுக்காகக் கூட ஒரு படைப்பாளி சமரசம் செய்து கொண்டு விடும் நிலை உள்ளதே.***

இது வருந்தத்தக்க நிலை. தமிழ்த் திரையுலகத்தைச் சுதந்திரத்துக்கு முன், சுதந்திரத்துக்குப் பின் என்று பிரித்துப் பார்ப்பது இதற்கு வசதியாக இருக்கும். சுதந்திரத்துக்கு முன் அதற்காகப் போராட வேண்டி தேவையும், அதைப் பிரதிபலிக்கும் எதையும் வெறியோடு நேசிக்கும் ஒரு மனோபாவமும் மக்களிடையே இருந்தது. நாடகமேடை முதல், திரைப்படம் வரை இதையே பிரதிபலித்தது. இளைஞர்களும் அதை ஆதரித்தார்கள். சுதந்திரத்துக்குப் பின் தட்டிக்கேட்க முடியாத ஓர் ஆளுமையுடன் குறிப்பிட்ட ஓர் இயக்கம் ஆட்சியில் நீடித்தது. அந்த இயக்கம் ஆட்சியில் நீடித்தது. அந்த இயக்கம் தப்புப் பண்ணுகிறது என்பதையே மக்கள் அப்போது ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

கண்மூடித்தனமாகவும் பின்பற்றவும் செய்தார்கள். அந்த நிலையில் அதை எதிர்த்து மக்களிடையே பிரச்சாரம் செய்த திராவிட இயக்கத்துக்கு மேடைப் பேச்சு முதலில் வசீகரமான வடிவமாகக் கைகூடியது. மொழி, தீண்டாமை, ஊழல் இந்தப் பிரச்சினைகளும், இவற்றின் தீர்வுக்கான தேவைகளும் அந்த இயக்கத்துக்கு விசாலமானதொரு தளத்தை நிர்மாணித்துக் கொடுத்தன. அப்போது தான் திரைப்படமும் அவர்களுக்க மிக முக்கியமான ஊடகமாகப் பயன்பட்டது.

"1952இல் வந்த பராசக்தியைப் பற்றி அடுத்த நூற்றாண்டில் உட்கார்ந்து கொண்டு பேசுகிறோம். "தமிழ் நாட்டின் முதல் குரலே இப்படியா?" கோவில் கூடாது என்பதற்காக அல்ல, கோவில் கொடியவர்களின் கூடாரம் ஆகிவிடக் கூடாது என்பதற்காக" என்ற வசனங்கள் அந்தக் காலக்கட்டத்தில் வஞ்சிக்கப்பட்ட மக்களின் ஒட்டுமொத்தமான உணர்வைப் பிரதிபலிப்பதாக இருந்தது. இப்படி வசனங்கள் வரும்போதெல்லாம் மக்கள் அரங்கமே அதிர ஒலி எழுப்பி அதை வரவேற்றார்கள்.

ஆனால் இன்றைக்கு மக்களின் மனோபாவம் இதைப் பற்றியெல்லாம் கவலைப்படக் கூடியதாக இல்லை. கருவறைக்குள் ஒரு தாழ்த்தப்பட்டவன் உள்ளே போக முடியாத நிலை இன்றைக்கும் மாறிவிடவில்லை. ஆனால் அதைப்பற்றிய உணர்வு மட்டும் மங்கிப் போய் விட்டது. அதைப்பற்றி ஓங்கிப் பேசுகிறவன் கண்டுகொள்ளப்படாமலே கவிழ்ந்து போகிறான். இந்தச் சூழலே படைப்பாளியின் பயத்துக்கும் சமரசத்துக்கும் காரணமாகி விட்டது.

மக்கள் எழுச்சி ஒன்றால்



இன்னும் கீழ்வெண்மணிப் படுகொலையை ஒரு திரைப்படத்தில் சொல்ல முடியவில்லையே. 1998இல் கலைஞர் முதல்வராக இருந்தபோது சட்டசபையில் ஒரு தகவலைச் சொன்னார். இன்னும் 1200 கிராமங்களில் தீண்டாமை இருக்கிறது என்பது தான் அந்தத் தகவல். பெரியார் போராடத் தொடங்கி ஒரு நூற்றாண்டைக் கடந்தும் இன்னும் தீண்டாமை இருக்கிறது. இப்படிப் பேசப்பட வேண்டிய எத்தனையோ பிரச்சினைகளைத் திரையில் பேச முடியாமல் வணிகக் காரணங்கள் வாயைக் கட்டிப் போட்டிருக்கின்றன.

மட்டுமே இதனை மாற்ற முடியும். உங்கள் ஊரில் திரையிடப்படும் படம் தரமானதாக இல்லை என்றால் அங்கேயே எதிர்த்துக் குரல் கொடுங்கள். மக்களை இந்தப் படம் கெடுத்துவிடும் என்று ஓர் அமைப்பாகத் திரண்டு அங்கேயே எதிர்ப்புத் தெரிவியுங்கள். நீங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் பணம் கொடுத்துப் பார்ப்பதன் மூலம் ஒரு மோசமான படத்தை அங்கீகரிக்கும் போது அது ஒரு வணிகமாகி விடுகிறது. தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும் அதை விரும்பத் தொடங்கி விடுகிறார்கள்.

***நீங்களே ஒரு நல்ல படத்தைக் கொடுத்து அதை மக்கள் ஆதரிக்கிறார்களே... அப்படி இருக்கும்போது மக்களின் ரசனையை நீங்கள் எப்படிக் குற்றம் சொல்ல முடியும்?***

ஒரு சமூகப் பிரச்சினையைச் சொல்லி நான் வெற்றிபெறவில்லை. காதலைச் சொல்லித்தான் வெற்றி அடைய முடிந்தது. மக்களின கவனம் பிரச்சினைகளின் மீது இல்லை. அதை குவித்து மையப்படுத்தும் சரியான சக்தியும் இல்லை. பிறகு அதைப் பேசும் வலிமையும், பின்புலமும் படைப்பாளிக்கு எங்கிருந்து கிடைக்கும்? ஒரு நல்ல குடும்பத் தலைவனாக இல்லாதவன் நல்ல சமூகத் தலைவனாகவும் இருக்க முடியாது என்ற யதார்த்தமும், மக்கள் பிரச்சினைப் பேசும்போது உணரப்படும் பாதுகாப்பற்ற தன்மையும் தான் இன்றைய படைப்பாளியைச் சமரசம் செய்து கொள்ள வைக்கிறது. ஒட்டுமொத்த சமூக மாற்றம் தான் இதைச் சாத்தியப்படுத்தும்.

***ஒரு படைப்பாளிக்குள் ஏதோ ஒரு அரசியல் படிமம் இருப்பது தவிர்க்க முடியாதது. உங்களுக்குள்...?***

இப்போது நாம் பேசிக் கொண்டிருக்கும் இந்த அறையில் உள்ள புத்தக அடுக்குகளில் ராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், பைபிள், குரான் இவற்றைச் சார்ந்த பிறநூல்கள், இவற்றுடன் பெரியாரையும் வைத்திருக்கிறேன். "வையத்துள் வாழ் வாங்கு வாழ்வது" என்பது என்ன? ஒரு சிறந்த மக்கள் தொண்டன் தான் கடவுள் என்றால், பெரியார் தான் எனக்குக் கடவுளாக இருக்க வேண்டும். கோவிலுக்குள் விடமறுக்கிறார்களா? வா... பள்ளியில் இடமில்லையா இப்படி ஒடுக்கப்பட்டவர்களுக்குப் பிரச்சினை வரும் போதெல்லாம் எதிர்த்து நின்றவர். அந்த எதிர்ப்பை, போராட்டத்தை மட்டுமே தன் வாழ்க்கையாக வாழ்ந்து முடித்தவர். ஏன் அவரைக் கடவுள் என்று சொல்லக் கூடாது.

ஆனால் இன்றைக்கு அப்படிப்பட்ட, மக்களுக்கு உண்மையான தலைவர்கள் இருக்கிறார்களா? அப்படி இல்லாத பட்சத்தில் யாரைப் பின்பற்றுவது? ஒரு குடும்பத்தில் அண்ணனும் தம்பியும் அரசியல் கட்சிச் சண்டையில் பிரிகிறார்கள். ஆறு மாதம், ஒரு வருடத்திற்குப் பிறகு கட்சிகளின் தலைவர்கள் கூட்டணியை மாற்றிக் கொள்கிறார்கள். ஆனால் இந்த அண்ணனும் தம்பியும் ஒன்று சேர்வதில்லை. இப்படி நம்மால் பல குடும்பங்கள் பிரிந்து போகிறது என்பது பற்றி மேல்மட்டத் தலைவர்களும் கவலைப்படுவதில்லை. மேலும் ஒரு அரசியல் கட்சியின் ஆதரவாளனாக நான் ஒரு நிலைப்பாடு எடுக்கும் போது ஒரே இரவில் அந்தக் கட்சியின் தலைவர் வேறு ஒரு நிலைப்பாடு எடுத்துவிட்டதாக மறுநாள் காலையில் செய்தித்தாள்களில் வந்து விடுகிறது. ஆக நாம் எடுக்க வேண்டிய நிலைப்பாட்டை நாம் மனச்சாட்சிப்படி தீர்மானிக்க முடிவதில்லை.

இயல்பான வாழ்க்கை ஓட்டத்துக்கு உகந்ததாக இன்றைய அரசியல் இல்லாததால் அதில் ஈடுபாடு ஏற்படவில்லை.

***உங்களுக்கு விரிவான இலக்கியவாசிப்பு இருக்கிறது என்பதை உங்கள் படங்களில் உணர முடிகிறது. உங்களின் அந்த வாசிப்பு அனுபவம் பற்றி...***

என் இலக்கிய ஈடுபாடு என்பது கல்லூரிப் பருவத்தில் மு.வ.விலிருந்து தொடங்கியது என்று சொல்லலாம். பிறகு மணிக்கொடி எழுத்தாளர்கள் வ.ரா. புதுமைப்பித்தன், என்று தொடர்ந்து ஜெயகாந்தனை எட்டி நீல.பத்மநாபன், லா.ச.ரா, மௌனி என்று விரிந்து பரந்து பயணப்பட்டது. இதற்கிடையில் படிப்பு ரீதியாக, மணிமேகலை, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, அகபுற நானூறுகள், கம்பராமாயணம் என்று நமது மரபுத் தமிழ் இலக்கியத்தோய்வும் இருந்தது. நவீன இலக்கியங்களில் மு.வ.வுக்குப் பிறகு ஜெயகாந்தனைப் படித்ததும் எனக்குள் ஒரு பாய்ச்சலே நேர்ந்தது. வாழ்வின் தெரியாத பலபக்கங்களை அவர் படைப்புகளில் தரிசிக்க நேர்ந்தது ஒரு திகைப்பூட்டும் அனுபவம்.

"அக்னிப் பிரவேசத்தை" "சில நேரங்களில் சில மனிதர்கள்" என்று திரைப்படமாக மாற்றிய போது, இப்படியும் முடிகிறதே என்று வியப்பாக இருந்தது எனக்கு. "எழுத்தாளன் என்பவன் எந்தக் கொள்கைக்கும் தாலிகட்டிக் கொண்டவனல்ல" என்று சொல்லி ஒரு கம்யூனிஸ்டாக எழுத்தில் தன் பயணத்தைத் தொடங்கியவர் "ரிஷி மூலம்" எழுதினார். இப்படிப் பல தளங்களிலும் பயணப்பட்ட ஜெயகாந்தனை வாசித்த பிறகுதான் புதுமைப்பித்தனை வாசிப்பது சுலபமாக இருந்தது.

ஒருசிறுகதையில் நிர்வாணமாக ஓவியத்துக்கு மாடலாக நிற்பவளும், விபச்சாரியாகத் தொழில் செய்யும் இன்னொரு பெண்ணும் சிநேகிதிகள் நிர்வாண போஸ் கொடுப்பவள் விபச்சாரம் செய்பவளைத் தன் தொழிலுக்கு வர அழைப்பாள். ஆனால் இருட்டுக்குள் யாருக்கு வேண்டுமானாலும் ஆடையை அகற்றும் அவள் வெளிச்சத்தில் நிர்வாணமாவதற்கு மறுப்பாள். இது ஒருவிதமான முரண் உணர்ச்சிக்குரியது இல்லையா.

இன்னொரு கதையில் பேருந்தில் தகப்பனுடன் பயணம் செய்யும் இளம் பெண் ஒருத்தி "நன்" என்ற இளைஞனைப் பார்ப்பாள். திடீரென்று அழுதுகொண்டு "நான் தப்புப் பண்ணிட்டேம்பா" என்று தந்தையிடம் கூறியவளிடம் "என்னம்மா ஆச்சு?" என்று கேட்பார். அதற்கு, "நான்" "நன் ஆயிட்டேன்பா" என்பாள். தான் ஒருவனிடம் மனதைப் பறிகொடுத்ததை இவ்வாறு கூறுவாள்.

இப்படி மனிதமனத்தை அடியோடு அசைத்துப் பார்க்கவல்ல படைப்பாளியாக இன்றுவரை ஜெயகாந்தனைத் தான் உணர முடிகிறது. இளைய தலைமுறை இயக்குநர்கள் ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் ஒரு திருக்குறளை எழுதிவிடக் கூடிய ஆற்றல் படைத்தவராக இருக்கலாம். ஆனால் இன்னொருவர் எழுதிய திருக்குறளை அவர் எப்படி எழுதி இருக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ளவாவது திருக்குறளைப் படிக்க வேண்டும்.

***சினிமாவினால் சாதிக்கப்பட வேண்டிய விஷயங்கள் இன்னும் இருக்கிறது என்று கருதுகிறீர்களா?***

நிச்சயமாக இருக்கிறது. இன்னும் கீழ்வெண்மணிப்படுகொலையை ஒரு திரைப்படத்தில் சொல்ல முடியவில்லையே.

1998இல் கலைஞர் முதல்வராக இருந்தபோது சட்டசபையில் ஒரு தகவலைச் சொன்னார். இன்னும் 1200 கிராமங்களில் தீண்டாமை இருக்கிறது என்பது தான் அந்தத் தகவல். பெரியார் போராடத் தொடங்கி ஒரு நூற்றாண்டைக் கடந்தும் இன்னும் தீண்டாமை இருக்கிறது. இப்படிப் பேசப்பட வேண்டிய எத்தனையோ பிரச்சினைகளைத் திரையில் பேச முடியாமல் வணிகக் காரணங்கள் வாயைக் கட்டிப் போட்டிருக்கின்றன.

யாரையும் நட்டப்படுத்தாமல் ஒரு படம் என்னால் எடுக்க முடியும் என்ற நிலையை நான் அடையும் போது ஒரு சமரசமற்ற சினிமாக் கலைஞனாக இந்தப் பிரச்சினைகளை நான் பேசுவேன்.

*நன்றி - நந்தன்*

www.tamilarangam.net



## வாசகர் செ(ா)ல்லடி

# மாகாண சபையில் நடைபெற்ற மாபெரும் கையாடல்!

வடக்கு கிழக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் பிராந்திய சுகாதாரப் பிரிவில் நடைபெற்ற மாபெரும் கையாடல், நாட்டின் சமாதான நடவடிக்கை யுத்த நிறுத்த பாதைகள் திறப்பு, பொருளாதாரத் தடை நீக்கம், பேச்சு வார்த்தை என்ற மாபெரும் தடபுடல் நிகழ்ச்சி அமளிதுமளியில் அமுக்கப்பட்டுப் போனது மாபெரும் அதிசயம் அல்ல!

சும்மா அல்ல, கிட்டத்தட்ட எண்பது இலட்சம் ரூபாய்களுக்கு மேல் களவு போனது பெரிய விடயமல்ல. ஏனென்றால் இது நாட்டின் வழமை. மற்றது, மக்களின் பணம். இது களவு போனாலும் கவலையளிப்பது இல்லை! களவு செய்தவரை வேறு இடத்துக்கு மாற்றிவிடலாம்!

இங்கே இதனை கையாடல் செய்தவர் என மற்றவர்களால் குற்றம் சாட்டப்பட்ட மதபோதகரான லிகிதர் தப்பியோடிவிட்டதாக அறியப்படுகின்றது. அவர் தப்பியோடியது பெரிய விடயமல்ல ஆனால், அவர் கூறி அனுப்பிய செய்தி தான் திகைப்பானது.

அதாவது, "நான் மட்டும் இத்தனை மோசடி செய்யவில்லை. பாரம்பரியமாக தொடர்ந்து வந்த புண்ணிய செயலை நிறுத்தாது கௌரவமாக தொடர்ந்து செய்தது தான் பிழை!" என்று கூறியிருக்கின்றாராம்.

இவ்வளவு பெரிய குண்டு ஒன்று வெடித்துள்ளது. இது நாட்டில் எந்த அதிர்வலையையும் எழுப்பவில்லை. ஆக வானொலியில் இரண்டு வரி செய்தியுடன் முடிந்து விட்டது. நாட்டின் தேசிய பத்திரிகைகளில் முக்கியத்துவம் பெற்றோ, முன் பக்கத்திலோ அல்லது பரபரப்பாகவோ கூடவரவில்லை என்பது தான் முக்கியமாகின்றது. ஆனால், வேறு நாடுகளில் என்றால் இந்த செய்தி மக்கள் முன் எப்படி எல்லாம் கொண்டு செல்லப்பட்டிருக்கும்? எவ்வளவு பிரச்சினைகளை உண்டு பண்ணியிருக்கும். என யோசிக்கும் போது எமது நாட்டின் வறுமை பளிச்சென தெரிகின்றது. பத்திரிகைகளின் தகமை என்ன? எங்கே செய்தி வேட்டை? நோகாமல் அலுங்காமல் கதிரையில் அமர்ந்து எழுதுவது தான் செய்தி என்ற நிலையாகி விட்டது.

மக்கள் மாபெரும் பொருளாதாரத் தடையால் துன்பப்படுகின்றார்கள். எந்தவித வருமானமும் இன்றி நிதிப் பழுவால் பசி, பட்டினி என்று வறுமையில் வாடுகின்றார்கள். ஆனால், இது பற்றி கவலைப்படாமல் அரசியல் வாதிகளும், அதிகாரிளும் சொர்க்கத்தில் மிதப்பது எப்படி? எங்கும் ஊழல் எதிலும் மோசடி தான் தலை விரித்தாடுகின்றது. நேர்மையானவர்களை பூதக் கண்ணாடி கொண்டு தான் தேட வேண்டியுள்ளது. இது எமது நாட்டின் தலை விதி!

இவ்வளவு மோசடியும் இன்று நேற்று நடந்தது அல்ல. மாகாண சபை தொடங்கப்பட்ட நாள் முதல் நடப்பது தான். வறுமைக் கோட்டில் வாடி வதங்கி வரும் அதிகாரிகள் ஊழியர்களில் பல பேர் மாகாண சபைக்கு வந்ததும் வீடு வாசல் சொத்து சுகம் என குபேரர்களாக மாறுவது எப்படி? இங்கே மாகாண சபையில் பணம் அமுதசுரபி என்று சுரப்பதால் தான் என்று மக்கள் பேசிக் கொள்கின்றார்கள். இதனால் போலும் மாகாண சபைக்கு வரும் அதிகாரிகள் மாகாண சபையை விட்டுப் போக அறவே விரும்புவது இல்லை! தங்கள் பணி பூர்த்தி அடைந்தாலும் யாரையேனும் அரசியல்வாதிகளை பிடித்து ஏதும் சபை நிறுவனங்களில் தங்களை நிலைநிறுத்திக் கொண்டு விடுகின்றனர்.

இவை பற்றி எல்லாம் மக்கள் கதைத்தாலும் சரி, சில பத்திரிகைகளில் வந்தாலும் சரி அவர்கள் பயப்படுவதும் இல்லை, கருத்தில் எடுப்பதும்இல்லை. மாறாக, மோசடிகள் தொடர்வது தான் கூடுதல் உண்மை! கத்தியவர்களின் வாய் உளைவது தான் மிச்சம். வேலை இல்லாதவர்களின் வேலை இது என்று விடுவர். அந்தளவுக்கு அலட்சியம் ஓங்கியுள்ளது. குறிப்பாக வட கிழக்கின் யுத்தகால சூழலினால் இப்படி எத்தனையோ அதிசயங்கள் நடக்கின்றன. மாகாண சபையில் நடப்பவை பற்றி மக்கள் மூக்கின் மேல் விரல் வைக்கின்றனர். அந்தளவுக்கு கேட்டுக் கேள்வி இல்லை. எதுவும் செய்யலாம், செய்து விட்டு உத்தமனாகவும் காட்டிக் கொள்ளலாம். இங்கே என்னதான் நடக்கவில்லை?

களவு செய்யலாம், கையாடல் செய்யலாம். கள்ளக் கையெழுத்தும் வைக்கலாம். கல்வித் தகமையை மறைத்து விட்டு உயர் உத்தியோகத்தில் இருந்து கொள்ளலாம். போதாக்குறைக்கு பெண்களையும் அனுபவித்துக் கெள்ளலாம். இப்படி எத்தனை எத்தனையோ?

சமீபத்தில் அதே திணைக்களத்தை சேர்ந்த லிகிதர் ஒருவர் தம்பலகாமம் மருத்துவமனை ஒன்றில் பெண் ஊழியர் ஒருவரை பாலியல் வல்லுறவு செய்ய முயன்று அம்பலப்பட்ட செய்தி ஒன்று பத்திரிகையில் வந்தது தான் மிச்சம்! ஆனால், நடந்தது என்ன? அந்த ஊழியர் பாதுகாக்கப்பட்டு அதே திணைக்களத்தில் சுகமாக வேலை செய்கின்றார்! அந்தளவுக்கு காப்பாற்றுவதற்கு உத்தமர்கள் இருக்கின்றார்கள்?! பாதிக்கப்பட்ட பெண் விபச்சாரியாக்கப்படுவார்!

இங்கே மோசடிகளை விசாரிக்க என்று எத்தனையோ அதிகாரிகள் வருவார்கள். இதற்கு குறைவு இல்லை! ஆனால், வரும் அதிகாரிகளுக்கு எத்தனையோ பலவீனங்கள் இருக்கும், அவற்றை சரிசெய்து மனம் மகிழ செய்து விட்டால் எலலாம் சரியாகி விடும்! ஆகக் குறைந்தது ஒரு கோழிக்கறி விருந்து, தண்ணிப் பார்ட்டி! எல்லாம் முடிந்து விடும். இவற்றை செய்யாத அப்பாவி நேர்மையான அதிகாரி நூறு ரூபாய் பிழை விட்டால், அதை பெரிதாக்கி பரபரப்பாக்கி அவரை மாட்டி தங்கள் நேர்மையானவர்கள் என மார்தட்டி காட்டிக் கொள்வார்கள்!

இங்கே பிழைகள் நடப்பதும் மோசடிகள் நடப்பதும் சகஜம். சம்பந்தப்படுபவர் வேறு இடம் மாற்றப்படுவார். அவர் அங்கும் போய் தம் பணிதொடர்வார். கடைசியில் யாரும் ஒரு அப்பாவி அல்லது, நேர்மையான அதிகாரி ஒப்புக்கு களப்பலியாக வஞ்சம் தீர்க்கப்படுவார்! அல்லது தொல்லைக்கு உள்ளாக்கபடுவார்! ஏனெனில், இவர் இருந்தும் பயன் இல்லை. தங்கள் வேலைக்கும் இடைஞ்சல். இப்படியான கரைச்சல்களால் நல்லவர்களும் வாய் மூடி மௌனிகளாக தங்கள் காலத்தை ஓட்டி விடுவார்கள். மக்கள் விழித்துக் கொள்ளாதவரை இவ்வாறானவற்றை ஒழித்துக் கட்டுதல் சாத்தியமில்லை!

*- சுழியன்*
*திருமலை*

## நிகரியின் தனித்துவம்

புறக்கோட்டை பஸ்தரிப்பிடத்துக்கருகே பாதையோர பத்திரிகை நபரிடம் அன்றைய தினப் பத்திரிகைகளை வாங்குவதற்காக சென்ற போது தான் 'நிகரி' விழிகளில் பட்டது. பாரதியின் வாசகத்தை உள்ளடக்கியதோடு அருகே ஈழமோகத்தின் கவிதை வரிகள்... இவற்றை பார்த்தவுடன் 'பழைய ஞாபகம்' மனதில் பட்டென பட, உறுதிப்படுத்துவதற்காக பக்கங்களைப் புரட்டினால் உள்ளே மெல்ல தமிழினி. ஆழ்வார் குட்டி, வாசகர் (செ(ா)ல்லடி என்பன மேலும் உண்மையை உணர்த்தியது.

ஆமாம், ஒரு தசாப்த காலமாக உரிமைக் குரலெழுப்பிய ஒரு 'ஆத்மா' சற்று ஓய்வெடுத்து புதுப்பொலிவுடன், இருந்தும் அதன் 'தனித்துவத்தை' இழக்காமல் எழுந்து நடமாட ஆரம்பித்திருப்பதை நினைக்கையில் உள்ளம் உவகையடைகின்றது. இனியென்ன குறை? எங்களுக்கு. ஆதலால், எழுதுங்கள் எம்மினத்தின் அவலங்களை, நாங்கள் என்றும் உங்கள் பக்கமே!

*மு.கருணாகரன்*
*யட்டியாந்தோட்டை.*

## நிகரியின் வருகை ஆரோக்கியமானது!

ஒரு ஆரோக்கியமான மாற்றுப் பத்திரிகை இல்லை என்ற ஏக்கத்தை நிகரி போக்கிவிடுகின்றது.

இன்று எத்தனையோ தேசியப் பத்திரிகைகள் நாளேடு. வாராந்தம், மாதாந்தம் என்று வெளிவந்தாலும், நல்லதொரு மக்கள் பத்திரிகை இல்லாமை தெரிகின்றது. வரும் பத்திரிகைகள் எல்லாம் காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளும் வேலையையே செய்கின்றன. அதாவது பணம் சம்பாதிப்பதிலேயே குறியாக உள்ளன.

தமிழ் பத்திரிகை சூழலில் எல்லாம் ஏனோதானோ என்றே நடக்கின்றன. இன்று உள்ள யுத்த சூழல் மற்றும் அமைதிப் பேச்சு வார்த்தை என்ற மாயச்சூழலில் தங்கள் காலத்தை போக்கி விடுகின்றன. ஏனோதானோ என்ற செய்திகள், உப்பு சப்பு அற்ற நீட்டிமுழக்கும் கட்டுரைகள் என்று காற்றுள்ள போது தூற்றிக் கொள்ளும் சமாச்சாரங்களாகவே இருந்து விடுகின்றன. மாறாக மக்களுக்கு புது விடயங்களையோ, சிந்திக்கும் செய்திக் கட்டுரைகளையோ அவை எட்டியும் பார்ப்பது இல்லை.

இது இன்று பத்திரிகைச் சூழலில் காணப்படும் வரட்சியாகும். எல்லோரிடமும் நல்ல பிள்ளைகளாக நடந்து கொள்ளும் பாசாங்குத்தனம்! தங்களை எந்த விதச் சிக்கலுக்குள்ளும் மாட்டிக் கொள்ளாமல் காப்பாற்றும் தன்மை.. உண்மையில் மக்களைப் பாதிக்கும் விடயங்களையோ, சரியான திசையில் சிந்திக்கும் கட்டுரைகளையோ இவை நினைத்தும் பார்ப்பது இல்லை. மசாலா சினிமா, நட்சத்திர அழகிகள் கட்டுரை, கிசுகிசுப்புக்கள். தமிழ் பத்திரிகை உலகம் எங்கே போகின்றது? தமிழ் நாட்டின் சீர்கெட்ட மசாலா பத்திரிகைகளை நோக்கியே செல்கின்றன.

இங்கே எமக்கென்று தனித்துவம் உள்ளது. தமிழ் நாட்டின் பத்திரிகைகளை மிஞ்சும் திறமை உள்ளது. இந்த நிலையில் நிகரி நல்லதொரு வழிகாட்டும் என நம்புவோமாக.

*- இராஜ. தர்மராஜா -*
*திருகோணமலை*

# பெண்களின் கண்ணோட்டத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கை

விடுதலை புலிகளுக்கும் சிறிலங்கா அரசிற்குமிடையே அரசியல் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான முன்னோடியாக புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று வரையப்பட்டு வருகிறது. அவ்வுடன்படிக்கையில் அடங்கும் சரத்துகள் சில செய்திப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் .இராணுவம் பற்றிக் கூறப்பட்டிருக்கும் விடயங்கள் மிகவும் சிந்திக்கப் பண்ணுவதாக உள்ளன.

இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் புலிகள் சீருடையணியாது நடமாடலாம்.

- அதேபோல் இராணுவமும் தேவையேற்படின் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் சீருடையணியாது ஆயுதமின்றி நடமாடலாம்.

என்பதாக இதுவுள்ளது.

இவ்வுடன்படிக்கையின்படி இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசம் என்பது அங்கீகரிக்கப்பட்டதாகிறது. தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிப்பு இராணுவத்துக்கு என்ன வேலை என்பது கேள்விக்குள்ளாக்கப்படாததாயிருக்கிறது. மேலும் நடமாடும் சுதந்திரமும் இராணுவத்துக்கு வழங்கப்படுகிறது. இதுயாவும் பெண்களின் மத்தியில் பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது.

தமிழ் பெண்கள் இன்று எதிர்கொண்டிருக்கும் அபாயகரமான வாழ்வுக்கு மூலகாரணமே இந்த ஆக்கிரமிப்பு இராணுவம் தான்.

- வயது வித்தியாசமின்றி பெண்கள் மீது படைகள் மேற்கொண்டுவரும் கூட்டு வன்புணர்ச்சியும் படுகொலைகளும்

- பெண்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்வதாகக் கூறிக்கொண்டு சிறைப்படுத்தி சிறைக்கொட்டடிகளில் அடைத்து வைத்து தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் குரூரமான பாலியல் சித்திரவதைகள்

- வீட்டுச் சோதனை, வீதிச் சோதனை எனும் பெயரில் இராணுவத்தினால் பெண்கள் எதிர்கொள்ளும் துன்புறுத்தல்

- பெண்களை பலவந்தமாக தமது பாலியல் நடவடிக்கைகளுக்கு உட்பட வைத்தல், மறுக்கிற பெண்களை தாக்குதல், புலிகள் என பொய்க்குற்றஞ்சாட்டி சிறைப்படுத்துதல், பெண்களின் குடும்பத்தினரை சிறைப்படுத்துதல்

- தெருவில் நடமாடுகையில் இராணுவத்தின் அவமானப்படுத்தல்களுக்கும் வன்சேஷ்டைகளுக்கும் பெண்கள் உள்ளாக நேர்தல்.

- தமிழ் சமூகத்தில் வீழ்ச்சியடைந்திருக்கும் பொருளாதார நிலைமையை பயன்படுத்தி பெண்களை இராணுவத்துக்கான பாலியல் தொழிலாளர்களாக்குதல். (இது சிங்கள இனவாத அரசியலதும் சிங்கள இராணுவத்தினதும் திட்டமிட்ட குற்றச் செயலாக பார்க்கப்படாது தமிழ்ப் பெண்களின் தவறாக அவதூறு படுத்தப்படுவது நமது பக்க அரசியல் தவறாகும்.)

- இளம் தமிழ் பெண்களை காதல் எனும் பெயரில் ஏமாற்றி அவர்களின் உடலை சுரண்டிய பின்னர் பெண்கள் கருவடைந்த நிலையில் கைவிடுதல். (சிறுமிகளுடன் பாலுறவில் ஈடுபடுவது வன்புணர்ச்சிக்கு இணையான குற்றமாகும். அதேபோல் இளம் பெண்களை திருமண ஒப்பந்தத்தை காட்டி பாலுறவில் ஈடுபடுத்திவிட்டு கைவிடுவதும் தண்டனைக்குரிய குற்றமாகும். இக்குற்றங்களுக்கு உரிய தண்டனையை இராணுவத்தினருக்கு வழங்குவது தான் நமது அரசியலாக இருக்க வேண்டும். மாறாக நமது பெண்களை நாமே அவமதிப்பதும் ஓரங்கட்டுவதும் அல்ல).

- இராணுவத்தின் மீதான அச்சத்தினால் தமிழ் பெண்கள் தமது தாயகப் பிரதேசத்தில் சுதந்திரமாக நடமாட முடியாது தமக்குத் தாமே சுய ஊரடங்கை விதித்துக் கொண்டு வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருத்தல்

இவ்வாறு தமிழ் பெண்களின் அடிப்படை உயிர்வாழ்வின் ஆணிவேரே அந்நிய இராணுவத்தினால் அறுக்கப்பட்டு வருகிறது. தமிழ்ப் பெண்களின் மனித உரிமைகள் அத்துமீறப்படுகிறது. சுதந்திர வாழ்வு கேலிக்கிடமாக்கப்பட்டு வருகிறது.

தமிழ் பெண்கள் மீதான இராணுவத்தின் அக்கிரமங்கள் அதிகரித்து வருவதை அண்மைய சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன. யுத்த காலத்தில் தாம் தாக்கப்படுவோம் எனும் அச்சத்தில் இருக்கும் இப்படையினர், சமாதான காலத்தில் தமக்கு குடியிருப்புப் பகுதிகளில் சுதந்திரமாக நடமாட கிடைத்திருக்கும் வாய்ப்பை பயன்படுத்தி தனியொரு படையாளாகவே பரவலான அளவில் பெண்களை துன்புறுத்தத் தொடங்கியிருக்கின்றனர். இத்தகைய நிலையில் இந்த ஆக்கிரமிப்பு இராணுவம் தொடர்ந்தும் தமிழர் தாயகத்தில் நிலை கொண்டிருப்பதானது தமிழ் பெண்களுக்கு சவக்குழி வெட்டுவதாகத்தான் அமையும்.

அதுமாத்திரமன்றி, இராணுவத்தைச் சார்ந்து ஒட்டுண்ணி வாழ்க்கை நடாத்தும் தமிழ் துரோக குழுக்களாலும், முஸ்லிம் ஊர்காவல்படையினராலும் தமிழ் பெண்களுக்கு இழைக்கப்பட்டு வரும் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் இராணுவம் தமிழர் தாயகத்தில் தங்கி நிற்பதுதான் அடிப்படைக் காரணமாகும். இன்று முஸ்லிம் ஊர்காவற்படைகள் தமிழ் பெண்களை துன்புறுத்துவதற்கான துணிச்சலை பெற்றிருக்கின்றன வென்றால் அதற்கு ஒரே காரணம் இராணுவம் அவர்களுக்கு பக்கபலமாக இருப்பதாகும்.

எனவே ஆக்கிரமிப்பு இராணுவத்தை தமிழர் தாயகத்தில் இருந்து உடனடியாக முற்றாக வெளியேற்றுவதே அவசியமானதாகும். இதுவரையிலான எந்தப் பேச்சுவார்த்தை முன்னெடுப்புகளும் வரையப்படும் உடன்படிக்கைகளும் தமிழ் பெண்களுக்கு பாதுகாப்பையோ சுதந்திர வாழ்வையோ உறுதிப்படுத்தவில்லை. இந்த உடன்படிக்கையும் (இதை வரைபவர்கள் வெளிப்படையான நோர்வேஜிய - மறைமுகமான இந்திய மத்தியத்துவர்கள் ஆவர்) இராணுவத்துக்கும் பெண்களுக்கும் இடையிலான பகைமை முரண்பாட்டை கவனிக்காதது ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல.

உடன்படிக்கைகளும் பேச்சுவார்த்தைகளும் தமிழ் பெண்களுக்கு ஒருபோதும் சுதந்திரவாழ்வையும் உயிர்பாதுகாப்பையும் ஏற்படுத்தித் தரப் போவதில்லை. இராணுவம் முற்றாக தமிழர் தாயகத்தில் இருந்து வெளியேறுவது ஒன்றே தான் பெண்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகும். இன்று தமிழ் பெண்களும் அனைத்து மக்கள் சக்திகளும் போராட வேண்டியது இராணுவத்தை வெளியேற்றுவதற்குத்தான்.

— துஷ்யந்தி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Registred as a Newspaper


# நிகரி
NIHARI

83, பிலியந்தலை வீதி, மஹரகம
தொலைபேசி : 851672, 851673 தொலைமடல் 851814
மின்னஞ்சல் : nihari02@yahoo.co.uk


## நம்பிக்கை – நிதானம் – முன்னோக்கிய நகர்வு

நாட்டில் நல்லவை நடப்பது எல்லோருக்கும் மகிழ்ச்சியை தருகிற விடயம் என்பது உண்மைதான்.

சமாதான முயற்சிகள் வேகமாக நடை பெற்று வருவது, யுத்த நிறுத்தம் நீடிப்பது, சோதனைச் சாவடிகள் அகற்றப்படுவது, மக்களின் நடமாட்டத்திற்கு பாதகமாக அமைந்திருந்த பாஸ் கெடுபிடிகள் போன்றவை தளர்த்தப்படுவது என்பவை எல்லாம் முக்கியமான மாற்றங்கள்தான். ஆனால் இந்த மாற்றங்கள் ஒவ்வொன்றும் எப்படி மாற்றம் பெறுகின்றன, இந்த மாற்றங்கள் வெறும் மேற்பரப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களா, அடிப்படை மாற்றங்களா என்பதை மிகவும் அவதானமாக கவனிக்க வேண்டும்.

ஏனென்றால் எமது கடந்தகால அனுபவங்களில் இப்படியான பல விடயங்கள் நம்ப முடியாத அற்புதங்கள் போன்ற விடயங்கள் கூட நடந்திருக்கின்றன. பிரேமதாச காலத்தில் விடுதலைப் புலிகள் கொழும்புக்கு வந்து ஐந்து நட்சத்திர விடுதிகளில் அரச பராமரிப்புடன் தங்கவைக்கப்பட்டிருந்த போது எதிரணியினரால் பலத்த விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. பயங்கரவாதிகளுக்கு ஐந்து நட்சத்திர விடுதி விருந்துபசாரமா என்று அவர்கள் கேள்வி எழுப்பினார்கள். பேச்சுவார்த்தைக்கு வந்த புலிகளை அரசாங்கம் தகுந்த மரியாதையுடன் தங்க வைக்காமல் பின்னே என்ன "சரஸ்வதி லொட்ஜிலா", தங்க வைக்க முடியும் என்று அரசு தரப்பில் ஜனாதிபதி பிரேமதாச கிண்டலடித்தார். புலிகளுக்கு சுதந்திரமாக நடமாடும் வசதியும், ஆயுதம் வழங்குதலும் கூட நடைபெற்றது. புலிகள் ஆயுதங்களை ஏற்றிப் போகிறார்கள் என்று சொன்னதை இருக்கலாம் அது வெங்காயமாக இருக்கலாம்" என்று மறுத்தார் அன்றைய பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தன. சந்திரிகாவின் அரசு பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட போதும் இப்படிப் பல நடந்தன. நம்ப முடியாதபடிக்கு புலிகளை, ஆரம்ப நாட்களில் நியாயப் படுத்தினார்கள் - புலிகளே ஆச்சரியப்படும் விதத்தில். பாலத்துறை குண்டு வெடிப்பு நடந்த போதும் அதைப் புலிகள் செய்திருக்க முடியாது, இது ஐக்கிய தேசிய கட்சியினுள் நடந்த சதி என்ற கருத்தைக் கூட அன்றைய பொதுசன ஐக்கிய முன்னணி தலைமைகள் கொண்டிருந்தன.

ஆனால் இவை எல்லாம் காரியார்த்தமான கருத்துக்களாகவே இருந்தன. புலிகளுடன் மீண்டும் பிரச்சினை வந்த போது தமிழ் மக்கள் மிக மோசமாகப் பந்தாடப்பட்டார்கள். ஜனாதிபதி சந்திரிகா ஒரு முறை முழுத் தமிழர்களுமே புலிகள் தான் என்று கூடச் சொன்னார்.

ஆக இன்று நடந்து கொண்டிருப்பவைகளையிட்டு நாம் சற்று எச்சரிக்கையுடன் அணுக வேண்டும். நல்லவை நடப்பதையிட்டு சந்தோசப்படும் அதேவேளை எச்சரிக்கை உணர்வை விட்டுவிடக் கூடாது என்பதை மறப்பது நல்லதல்ல.

ஆனால் எமது தமிழ் தொடர்பு சாதனங்கள் கட்டற்ற ஆரவாரத்துடன் சமாதானம் வெற்றி நடை போடத் தொடங்கியுள்ளது என்று தெரிவிக்கும் போக்கினைக் கடைப்பிடிக்கின்றன. நிலைமைகளில் ஏற்பட்டு வரும் மாற்றம் பற்றிய நிதானமான பார்வையை அவை கொண்டிருப்பதாக தெரியவில்லை.

பாஸ் நடைமுறை தளர்த்தப்பட்டிருப்பதை அது தேவையில்லை என்று ஆகிவிட்டது என்ற தோரணையில் எழுதுகின்றன, யாழ் போவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி அவசியம் இல்லை என்று அவை செய்தி தருகின்றன. ஆனால் அண்மையில் ஒரு ஐந்து மாதக் குழந்தைக்கு அனுமதி எடுக்கப்படாததால் அந்தத் தாய் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பொலிஸ் நிலையப் பதிவுகளில் பொலிசார் அக்கறை அற்றிருப்பதை அவசியமில்லை என்ற அர்த்தப்பட செய்திகள் வெளியிடப் படுகின்றன.

இப்போது நடந்து கொண்டிருக்கும் மாற்றம் மேற்பரப்பில் ஏற்பட்டு வரும் மாற்றம் மட்டுமே. இது இன்னும் ஆழமாக முழுமையாக மாறுதல் அடைய வேண்டும். திடிரென புலிகளுடன் செய்யவுள்ள சமாதான உடன்பாடு முயற்சிகள் முறிவடைந்தாலும் நீடிக்கக் கூடியதாக அந்த மாற்றங்கள் அமைய வேண்டும். அப்போது தான் அவை உண்மையான மாற்றங்களாக இருக்க முடியும்.

ஒவ்வொரு பேச்சுவார்த்தை முறிவின் போதும், நிலைமை முன்பிருந்ததைவிட மோசமான நிலைக்குப் பின்தள்ளப் பட்டதை நாம் மறக்கக் கூடாது.

நம்பிக்கை அவசியம்தான். ஆனால் ஆதாரமில்லாத நம்பிக்கையை ஊட்டுவது வெறுமனே அர்த்தமற்றது மட்டுமல்ல ஆபத்தானதும் கூட.

எனவே, இது நாம் விழிப்பாக இருக்க வேண்டிய காலம்! சமாதானத்திற்கான முயற்சிகளை வரவேற்க வேண்டும், அவற்றை முழுமனதோடு ஆதரிக்க வேண்டும், அதற்கான ஒத்துழைப்ப நல்க வேண்டும்.

ஆனால் அதேவேளை, நடப்பவை பற்றிய தெளிவான பார்வையை கொண்டிருப்பதற்கான நிதானம் வேண்டும்.

மக்களிடையே நிதானத்துடன் கூடிய சந்தோசத்திற்கு வழிகாட்ட வேண்டிய தொடர்பு சாதனங்கள் ஆதாரமற்ற நம்பிக்கையை ஊட்ட முயலக் கூடாது.

நிகரி சொல்ல விரும்புவது இதுதான்!
நம்பிக்கை,
நிதானம்,
முன்நோக்கிய நகர்வு.

# புரிந்துணர்வு ஒப்பந்தம்: அரசு தரப்பில் ஒப்பமிடுபவர் யார்?

- நிகரி செய்தியாளர்

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நிரந்தர போர் நிறுத்தத்தைக் கொண்டு வரும் புரிந்துணர்வு ஒப்பந்தம் இம் மாதம் 24ஆந் திகதிக்கு முன் கைச்சாத்தாகுமென்பது உறுதியாகி விட்டது. இருதரப்பு வட்டாரங்களும் இந்த நம்பிக்கையைத் தெரிவிக்கின்றன.

புரிந்துணர்வு ஒப்பந்த வாசகங்கள் யாவும் நோர்வேயின் அமைப்பு என்றும் இதிலுள்ள அம்சங்கள் யாவும் அரசும் விடுதலைப் புலிகளும் ஒப்புக் கொண்டவையென்றும் இருதரப்பு வட்டாரங்களிலிருந்தும் தெரிய வருகிறது.

இந்த ஒப்பந்தத்தில் அரசு தரப்பில் யார் கையொப்பம் இடுவார்?

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவே அரசாங்கத்தின் தலைமைப் பொறுப்பிலிருப்பதால் சந்திரிகா தான் ஒப்பந்தத்தில் கையொப்பமிட வேண்டுமென்று விடுதலைப் புலிகள் எதிர் பார்ப்பதாக புலிகளின் வட்டாரங்கள் கருதுகின்றன.





தன்விடமே அதிகாரங்கள் நிறைய இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா அடிக்கடி கூறிவருகிறார். இதனால் இந்த ஒப்பந்தம் சரியான முறையில் செயல்பட வேண்டுமானால் ஜனாதிபதி சந்திரிகா தான் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும். இந்த ஒப்பந்தத்தில் மட்டுமல்ல இருதரப்புக்குமிடையில் செய்து கொள்ளப்படவிருக்கும் சமாதான ஒப்பந்தத்திலும் ஜனாதிபதி சந்திரிகா தான் ஒப்பமிட வேண்டுமென்றும் புலிகள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அரசாங்கத்தின் சார்பில் ஜனாதிபதி சந்திரிகா கையொப்பமிட்டால் தான் விடுதலைப் புலிகள் தரப்பில் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் கையொப்பமிடுவாரென்றும் கூறப்படுகிறது.

ஜனாதிபதி கையொப்பமிடாமல் அரசின் தரப்பில் வேறொருவர் கையொப்பமிட்டால் விடுதலைப் புலிகள் தரப்பிலும் இரண்டாம் கட்டத் தலைவராக இருப்பவர் ஒருவர் கையெழுத்திடுவார் என்றும் புலிகள் வட்டாரங்கள் கருதுகின்றன.

விடுதலைப் புலிகளையும் தலைவர் பிரபாகரனையும் கடந்த பொதுத் தேர்தல் சமயத்திலும் அதற்கு முன்னரும் ஜனாதிபதி சந்திரிகா கடுமையாக விமர்சித்து வருவதாலும் விடுதலைப் புலிகளையும் அதன் தலைவரையும் நம்ப முடியாது என்று சந்திரிகா கூறிவருவதாலும் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு சந்திரிகா மறுக்கக் கூடுமென்று அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

இதே சமயம் பண்டா-செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது அன்றைய அரசியலமைப்பின்படி அதிகாரமுள்ள பிரதம மந்திரி எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டார நாயக்காவே அரசாங்கத்தின் சார்பில் கைச்சாத்திட்டிருந்தார். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் கைச்சாத்திட்டார்.

டட்லி சேனாநாயக்காவும் செல்வநாயகமும் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டபோதும் இரு தலைவர்களுமே ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தனர்.

1987 ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இந்தியாவும் இலங்கையும் சமரச உடன்படிக்கை செய்து கொண்ட போதும் இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இலங்கை அரசின் சார்பிலும் இந்திய அரசின் சார்பில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் கையொப்பமிட்டிருந்தனர்.

## சிறைக் கைதிகள் ...

10ம் பக்கத் தொடர்ச்சி...

அதே நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினராயுமுள்ளதால் கைதிகள் விடுதலைக்கான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள வேண்டும் என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பாகும். தமிழ் அரசியல் வாதிகள் மாற்றான்தாய் மனப்பான்மை காட்டுகின்ற இவ்வேளையில் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தேருமான பத்தேகம சமித்தி தேரர் இவர்களை சென்று பார்வையிட்டது தமக்கு பெரும் ஆறுதல் அளித்ததாக பூசா கைதிகள் தெரிவித்துள்ளனர். இதன்பின்னரே குமாரின் கட்சித் தலைவரும் இச்சிறைசாலைக்கு சென்றுள்ளார். ஆனால் இதே கட்சியைச் சேர்ந்த மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் புதியவரானாலும் துடிப்பாக செயலாற்றுவதை காணக்கூடியதாக உள்ளது. அண்மையில் கூட வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு சென்றுள்ளார். இதன்போதே அச்சிறையில் 13 வருடங்களாக வழக்கு விசாரணைகள் இன்றி ஒருபெண்ணும், மற்றும் இரு குழந்தைகளும் உள்ளதாக தமக்குத் தெரியவந்ததாக அவர் கூறியுள்ளார்.

வெலிக்கடை சிறையில் 180 பெண்கைதிகள் அள்வில் உள்ளதாக தெரியவருகின்றது. பூஸாவில் 135 கைதிகள் உள்ளனர். இவர்களுடைய விடுதலைக்கு ஏனைய அரசியல்வாதிகள் என்ன செய்யப் போகிறார்கள்?

கடுமையான சட்டங்கள் பாராளுமன்றில் நிறைவேற்றப்படும் போது கைகூட்டிக் கொண்டிருந்தவர்கள் இப்போதாவது ஒன்றிணைந்து கைதிகள் விடுதலைக்கு வழிசமைப்பார்களா? சரி. சமாதான முன்னெடுப்பு வேளையில் நல்லெண்ண சமிஞ்சையாக விடுதலைப் புலிகள் 10 சிங்கள கைதிகளை எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்துள்ளனர். இதற்குப் பதிலுபகாரமாகவும், அப்பாவிகள் தேவையற்று வாடுவதைத் தவிர்க்கும் முகமாகவும் அரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் போகிறது. கைதிகள் விடுதலை இடம்பெறுமானால் அரசு தமிழ் மக்களின் ஆதரவைப் பெறும். தமிழ் உறவுகள் சிந்திய கண்ணீரும், ஏக்க வாழ்வும் ஓரளவாவது இல்லாமல் போகும். கூடவே, இக்கைதிகளுக்கு மூலகாரணமாக இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அகற்றுவதற்கான முயற்சிகள் மிக அவசியமானவை என்பது எல்லோருக்கும் தெரியும். சரி, யார் பூனைக்கு மணி கட்டுவது?

## நிகழ்வுகள்

கவிஞர் சுமுரளிதரனின் 'தீவகத்து ஊமைகள்' நூல் வெளியீட்டு விழாவும், அமரர் ஜோசப் ஜேஸ்கொடியின் நினைவுரையும் தொடர் நிகழ்வுகளாக கண்டி சிட்டிமிஷன் மண்டபத்தில் 17.02.2002 ஞாயிறு மாலை 3.00 மணிக்கு இடம்பெற உள்ளது.

இந்நிகழ்வின் வரவேற்புரையை க.ப.சிவமும், தலைமையுரையை அசோக வித்தியாலய அதிபர் செ.நடராஜாவும், வெளியீட்டுரையை அந்தனி ஜீவாவும், விமர்சன உரையை பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி துரை மனோகரனும், பதிலுரையை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி முதல்வர் கவிஞர் சுமுரளிதரனும் ஆற்ற உள்ளனர்.

அமரர் ஜோசப் ஜேஸ்கொடியின் நினைவுரையில் 'மலையகமும் சிறு சஞ்சிகைகளும்' தலைப்பில் உரைநிகழ்த்தப்படும். இதன் தொடக்க உரையை சாரல் நாடனும், நினைவுரையை திருத்துவ கல்லூரி ஆசிரியை இராசம்மிளா தேவியும் நிகழ்த்த உள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வு மலையக கலை இலக்கிய பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## தமிழ் எழுத்தாளர்களிடம் இருந்து மேலும் விண்ணப்பங்கள் தேவை

திரைப்பட மற்றும், தொலைக்காட்சி, குறுநாடக சுவடி எழுத்துப் பயிற்சிப் பட்டறைக்கு தமிழ் எழுத்தாளரிடம் இருந்து மேலும் விண்ணப்பங்கள் தேவை என script net நிறுவன அமைப்பாளர் கதரின் தெரிவிக்கிறார். சென்ற புதனன்று பிரிட்டிஷ் கவுன்சிலில் நடைபெற்ற அங்குராப்பண கூட்டத்தில் கதரின் இவ்வாறு தெரிவித்தார்.

இதுவரை கிடைக்கப்பெற்றவற்றில் இரண்டு மட்டுமே தமிழ் சுவடிகள். பெண் எழுத்தாளர்களிடம் இருந்தும் சொற்ப சுவடிகளே கிடைத்தன. இதன் காரணமாக மேற்படி சுவடி வந்து சேர வேண்டிய காலகெடு இம்மாதம் 19ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் அனுப்ப விரும்புவோர் A4 காகிதத்தில் 2 பக்கங்களில் கதைச் சுருக்கத்தை எழுதி கீழ் வரும் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இது தொடர்பாக பயிற்சிப்பட்டறை இம்மாதம் 18, 19, 20ம் திகதிகளில் கொழும்பிலும், 25, 26, 27ம் திகதிகளில் கண்டியிலும் நடைபெறும்.

Script Art
C/O British Council
45, Alfred House Garden, Colombo - 03.
Tel - 595346
Fax - 587079

இப்பத்திரிகை வரையறுக்கப்பட்ட ராவய பப்ளிஷர்ஸ் (கரன்ரி) நிறுவனத்தால் மஹரகம பிலியந்தல வீதி 83ஆம் இலக்க ராவய அச்சகத்தில் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்